www.tamilarangam.net

SUVADUKAL
சுவடுகள்
A Tamil Monthly from Norway



# நோர்வே தமிழ்க் கவிதைச் சிறப்பிதழ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# துருவத்துக் கவிக்குயில்

ஆழ்கடலில் சேலைகட்டி
புற்தரையால் சட்டையிட்டு,
தமிழ் உடல்களை மென்றுமிழ்ந்து
இரத்தத்தால் இதழ் சிவக்கும்
என் தாய்நாட்டைக்
கனவினிலே காண்கின்றேன்.

வெளிநாட்டில் வாழும் - தன்
மக்களின் பிரிவினால்,
மழையாய் வியர்த்து
அருவிகளாய் அழுது
மாலைப் பொழுதினில்
முகம் சிவக்கும்
என் தாய்நாட்டை
எண்ணுகிறேன்.

அன்னையின் நினைவணைப்பில்
ஆற்றங்கரையினிலே
துருவத்துக் குயிலாய்
துயரத்தில் இருந்தபோது
காகிதத்தில் நான்விட்ட
கவிதைஓடம் போல்
கரைகாணாத வாத்துக் கூட்டங்கள்
என் வாழ்வைக் குற்றிக் காட்டியதோ?

சோற்றுக்கு உப்பிட்டு
பலகாலமாயிற்று
உலை என் வீட்டில்
கண்ணீரில் கொதிப்பதால்
உப்புக்கு இங்கே
விளைச்சல் விழுந்தது.
கடல்கூட வற்றும் - என்
கண்ணீர் வற்றாதென
என்னைப் பெற்ற தாய்
கத்தும் குரல் கேட்டு
முத்துக்கள் உமிழ்ந்தன
என் விழியாழிகள்.
பனிகாலப் பறவைக்கும்
படுப்பதற்கு ஒரு கூடுண்டு.
எனக்கோ....?
வீதி ஓரத்தில்
ஒதுங்கிக் கிடந்த
பத்து ஓரா*வும்
என்னைப் பார்த்து
ஸ்வாட்ட பான்**
என்னைத் தொடாதே என்றது.

துருவத்துச் சூரியனும்
வெள்ளைப் பனிக் கம்பளிக்குள்
ஒளித்துக் கொண்டு
வெளியே வந்து
என்னைப் பார்க்க
வெறுக்கிறான்.

இயற்கையே
என்னை வெறுத்தால்
இங்கே நான் வாழ்வது
எங்ஙனம் எனக்
கண்ணீர் மை கொண்டு
என் முகத்தில்
என் கண்கள் எழுதிய
கண்ணீர்க் கவிதைகள்.

**நோர்வேயில் நக்கீரனார்**

* பத்து ஓரா - இன்று பெறுமதியற்ற நோர்வே நாணயம்
** ஸ்வாட்ட பான் (Svarte faen - கறுப்பு நிறத்தவர்களுக்கு எதிரான நோர்வே மொழி வசைச் சொல்



www.tamilarangam.net

## தாயகத்திலிருந்து ஈழநாடு வரை
## வன்முறையின் தடங்கள்.....

கடந்த சில வருடங்களாகப் புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழில் வெளிவரும் பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் பல தடவைகள் வன்முறைக்கு உள்ளாக்கப் பட்டுள்ளன. இதன்
உச்சக்கட்டமாகவே இவ்வருட ஆரம்பத்தில் 'பாரிஸ் ஈழநாடு' பத்திரிகை எரிப்பைக் காணலாம்.
பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய இந்தக் கேவலமான வன்செயலைச் சுவடுகள்
வன்மையாகக் கண்டிக்கிறது. இந்த அவலத்தினாற் பாதிக்கப்பட்ட ஈழநாட்டுக்குத் தனது
ஆதரவையும் தெரிவித்துக் கொள்கிறது.

இங்கும் சுதந்திரமான கருத்து வெளியீடு கேள்விக்குறிக்கு உள்ளாக்கப்படுவதை
அனுமதிக்கமுடியாது. தமிழ் மக்களிடையே சுதந்திரமான கருத்து வெளிப்பாட்டுக்கு எதிரான
தாக்குதல்கள் எந்தவொரு ஆரோக்கியமான திசைக்கும் எம்மினத்தை இட்டுச் செல்லாது.
ஈழநாடு செய்தி வெளியிட்ட முறையில் ஏதாவது பிழை இருந்திருப்பின் அந்தப் பிழைபற்றி
எழுத்துமூலம் ஈழநாட்டுக்கு அறிவிப்பதே சரியானது. அதைவிடுத்து வன்முறையில் இறங்குவது.
எமது இனம் பல நெருக்கடிகளைச் சந்திக்கும் துர்ப்பாக்கியமான சூழலில் இன்னும்
மோசமான நிலைகளையே தோற்றுவிக்கும். புலம்பெயர்ந்திருந்த வேளையிலும் இத்தாலியின்
அரசியல் மாற்றத்துக்கு மாஜினியும், ரஸ்யாவில் மக்கள் எழுச்சிக்கு லெனினும் ஆற்றிய பங்கு
போல ஈழத்தமிழின விடிவுக்குரிய சிந்தனைகள் பல புலம்பெயர்ந்த நாடுகளில் தோன்றுவதை
இந்த வன்முறைப் போக்கு மறுக்கிறது. கருத்தைக் கருத்தால் சந்திக்கவும், அரசியலை
அரசியலால் சந்திக்கவும் எம்மவரிடையே பழக்கம் வரவேண்டும். பத்திரிகைகள்,
சஞ்சிகைகளும் தம்மை விமர்சிக்கும் கருத்துகளுக்கும் களம் தந்து இவ்வாறான
ஆரோக்கியமான கருத்துப் பரிமாறல்களுக்குக் களமமைக்க வேண்டும்.

'தாயகம்' பத்திரிகை
அதிக தடவைகள் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட கனடாத் 'தாயகம்' பத்திரிகை
மாத்திரமன்றி எண்ணம், பள்ளம், சுவடுகள் உட்பட்ட பல சஞ்சிகைகள்,
பத்திரிகைகள் மீதாக வன்முறைகளும், மிரட்டல்களும் வளர்ந்து இன்று ஈழநாடு எரிப்பில் வந்து
நிற்கிறது. ஏற்கனவே சஞ்சிகைகள், பத்திரிகைகள்மீது தாக்குதல்கள் நிகழ்ந்தபோது ஈழநாடு
மௌனம் சாதித்தது மனவருத்தத்திற்குரியது.

இந்த வன்முறைகள் எமது சமூகத்தின் சாதனை என்று நாம் பெருமை கொள்ள முடியுமா?
புலம்பெயர்ந்த நாடுகளின் சட்டங்களை மட்டுமல்ல, அந்த நாடுகளில் மாற்றுக் கருத்து
உடையோருக்கு வழங்கப்படும் கௌரவத்தையும்கூட எம்மவர்கள் பழகிக்கொள்ளவில்லை
என்பது துயர்தருகிறது.

எரிப்பால் பத்திரிகை வெளியீட்டை நிறுத்திவிட முடியாது என்பதை இலங்கையில் ஈழநாடு
பன்னிரு வருடங்கள் முன்பு நிறுவியது. தனது சாதனங்கள் எரியூட்டப்பட்டும் தனது
வெளியீட்டை நிறுத்திவிடாமல் 'பாரிஸ் ஈழநாடு' தனது உறுதியைக் காட்டியிருக்கிறது. இந்த
உறுதி எதிர்வரும் காலங்களில் வன்முறைக்கு எதிரானதாக மாற்றப்படல் வேண்டும். சகல
அரசியல் ரீதியான கருத்துகளையும் நாகரிகமாக விவாதிக்கும் ஒரு களமாக ஈழநாடும் ஏனைய
பத்திரிகைகளும் அமையவேண்டும். அவ்வாறான விவாதங்கள் இப்போதைய சூழலில்
அவசியமாக உள்ளன.

புலம்பெயர்ந்த நாடுகளில் எமது வன்முறைகள் இங்குள்ள எமது சமூகத்தை மட்டுமல்ல,
தங்கள் உயிரைப் பணயம் வைத்துத் தாய்நாட்டில் வாழும் மக்களையும், விடுதலைக்கான
அவர்களது போராட்டத்தையும் கொச்சைப்படுத்துவன.

சுவடுகள் 53,
மார்கழி'93 – தை'94
Herslebs gate 43, 0578 Oslo

www.tamilarangam.net

## கே.டானியலின் பஞ்சகோணங்கள்

அண்மையில் வெளிவந்த ஈழத்து நாவல்களில் கே.டானியலின் பஞ்சகோணங்களுக்கு முக்கிய இடம் கிடைக்கலாம். எழுதி ரொம்ப ஆண்டுகளாக அச்சேறாமல் இருந்த பஞ்சகோணங்கள், அவரது மறைவுக்குப் பிறகு அச்சேறியிருக்கிறது. தேசிய இனவிடுதலைப் போராட்டம் கூர்மைபெறத் தொடங்கிய ஆரம்ப காலத்தில் எழுதப்பட்ட இந்த நாவல், தேசிய அங்கீகாரத்துக்கு முன்பாக, சமூக அங்கீகாரம் தேவை என்பதை வலியுறுத்துகிறது. யாழ் குடாநாட்டின் சுன்னாகம் பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு (கொட்டாங்கச்சியில் காப்பி, சட்டியில் சோறு, ஆலய நுழைவு மறுப்பு) எதிர்த்துக் குரல் கொடுக்கும் உயர்ந்த சாதியைச் சேர்ந்த வாத்தியார், சாதியை உயர்த்திப் பிடிக்கும் இளையதம்பியர், அவரது வைப்பாட்டி பூதி, வர்க்கப் போரை முன்னெடுக்கும் கிட்டினண்ணர் என்று பல்வேறு பாத்திரங்கள் இங்கு முட்டிமோதுகின்றன. தீண்டாமைக்கு எதிரான தாழ்த்தப் பட்டவர்களின் போராட்டம் வலுப்படும் போது தலையிடும் போராளி இயக்கங்கள் தாழ்த்தப்

**அதியமான்**

# தமிழகத் தபால்



## கருணாநிதியின் ஆடுபுலி ஆட்டம்

தன்னுடைய குடும்ப நலனுக்காக கருணாநிதி, தி.மு.கழகத்தை இரண்டாகப் பிளந்துவிட்டார் என்று தமிழ்ப் பத்திரிகைகள் அனைத்தும் எழுதி ஓய்ந்துவிட்டன. திமுகவின் உடைவில் பெரும்பாலோர் வை.கோபாலசாமியின் தலைமையில் அணிதிரண்டு வருவதாக பத்திரிகையாளர்கள் கூறுகிறார்கள். வை.கோபாலசாமியின் கூட்டங்கள் விடியவிடிய அதிகாலை மூன்று மணிவரையிலும் நடைபெறுகின்றன. இளைஞர்கள் பெருமளவில் திரளும் கூட்டங்கள் கருணாநிதிக்குக் கலக்கத்தைக்

இருக்கிறார். கட்சிக்குச் சொந்தமான அறிவாலயம், "கட்சிக்குச் சொந்தமல்ல, அது திமுக அறக்கட்டளைக்குச் சொந்தம்" என்றுகூறிப் புதுப் பிரச்சனையைக் கிளப்பியுள்ளார் கருணாநிதி. "திமுக இல்லாமல் திமுக அறக்கட்டளை எப்படி வந்தது?" என்று வை.கோ அணி பதிலடி தருகிறது. கருணாநிதியின் புலி எதிர்ப்புப் பிரசாரம் முனைமழுங்கிப் போய்விட்டது. கடந்த காலங்களில் சோ, வாழப்பாடி ராமமூர்த்தி, செல்வி ஜெயலலிதா போன்றோர் செய்த புலி எதிர்ப்புப் பிரசாரத்தைக் கருணாநிதி தற்போது செய்து வருகிறார். ஆனால் நம்பத்தான் ஆளில்லை. புலிகள் நடத்தும் உறுமல்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டவர்களுக்கு எதிராகவே நடந்துகொள்வதாக டானியல் பாத்திரங்களினூடாகக் கூறுகிறார். மேலும் ஆலயத்தினுள் நுழைய முற்படும் தாழ்த்தப் பட்டவர்களை "தமிழர்களின் ஒற்றுமைக்கு எதிரானவர்களாகக் கருதி", போராளிகள் எச்சரிக்கிறார்கள். தேசிய இன விடுதலைக்குப் பிறகு சாதிப்பாகுபாடு இருக்காது என்றும், ஒருமுனைப் போராட்டத்தை இருமுனைப் போராட்டமாக மாற்றி, போராட்டத்துக்குத் தடையாகத் தாழ்த்தப் பட்டவர்கள் இருக்கக்கூடாது என்றும் "அன்புடன்" போராளிகள் கூறுகிறார்கள். இந்த நாவலில் டானியல் தான் சார்ந்த அமைப்பின் வர்க்க நிலைப்பாட்டைப் பதிவு செய்வதில் மிகவும் கவனத்துடன் இருந்திருக்கிறார். பிரச்சார நெடியோ, உபதேசமோ வாசகனுக்குத் தட்டுப்பட்டு விடவில்லை என்பதே இந்த நாவலின் வெற்றி எனலாம். வரலாற்று நாவல்களை எழுதுபவர்கள் அறிந்தோ அறியாமலோ "பிரசாரத் தன்மைக்கு" உட்பட்டு விடுவார்கள். ஆனால் டானியல் இதில் வென்றிருக்கிறார்.

விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்பட வேண்டிய நூல் இது. (வெளியீடு: விடியல் பதிப்பகம், 3 மாரியம்மன் கோவில் வீதி, கோவை - 641015, தமிழ்நாடு. விலை: 45ரூபாய்)



கொடுத்துள்ளது. மார்கழி மாதத்துப் பனியிலும் தமிழன் வை.கோபாலசாமியின் பேச்சைக் கேட்க விடியவிடிய விழித்திருக்கிறான் என்றால், அதற்கு முக்கிய காரணிகள் இரண்டு! ஒன்று - கருணாநிதியின் அருவெறுக்கத்தக்க குடும்ப அரசியல். இதில் மகன், மருமகன், பெண்டாட்டி என்று சகலரும் உண்டு. இரண்டு - தமிழகத்தில் புதிய தலைமையை விரும்பும் கட்சிக்கு அப்பாற் பட்டவர்கள். பிறந்த குழந்தைக்கு பெயர் சூட்டப்படா விட்டாலும், பத்திரிகைகளும், இளைஞர்களும் வை.கோ. அணியை அரவணைத்து ஆதரிக்கத் தொடங்கி விட்டார்கள். தமிழ்நாட்டுத் தலைவர்களில் வை.கோ.வுக்கு 40%பேர் ஆதரவு தருவதாக ஒரு புள்ளவிபரம் கூறுகிறது. கட்சியையே கரைத்துவிட்ட கருணாநிதி இப்போது நிதியில் கண்ணும் கருத்துமாக உலகத் தமிழர் இதழ்களில் இருந்தெல்லாம் கட்டுரையை எடுத்துப் போட்டு, "பார்த்தாயா உடன்பிறப்பே! என்னைக் கொல்லச் சதி கடல் கடந்து நடக்கிறது!" என்று முரசொலியில் எழுதுவதை யாரும் பொருட்படுத்தியதாய்த் தெரியவில்லை. பணபலத்தால் கட்சியைக் காப்பாற்ற முடியும் என்று கணக்குப் போடும் கருணாநிதி, தற்போது வீழ்ச்சியின் படிகளில் உருண்டு வருகிறார்.

## மாக்சிஸ்ட்டுகளின் மதப்பற்று!

இந்திய மாக்சிஸ்ட் கட்சியினர் எப்பொழுதுமே புத்தகங்களில் உள்ள எழுத்துக்கு ரொம்பவும் மரியாதை தருபவர்கள். சிவப்புப் புத்தகத்தில் என்ன எழுதியிருக்கிறதோ, அதை அச்சுப் பிசகாமல் சொல்வதிலும், முடிந்தால் நடைமுறைப் படுத்த முயல்வதிலும் சூரர்கள். ஆனால் இந்தமுறை மட்டும் மார்க்ஸ் சொன்னதை மீறியிருக்கிறார்கள்?! (அவர்கள் எப்போதுதான் மீறவில்லை என்று எதிர்கேள்வி கேட்கக் கூடாது) சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் ஈ.எம்.எஸ்.நம்பூதிரிபாடு பேசினார். காம்ரேடுகள் நிரம்பியிருந்த அந்தக் கூட்டத்தில், ஒரு காம்ரேட் தன்னுடைய



பெண் குழந்தைக்குப் பெயர் சூட்டும்படி ஈ.எம்.எஸ்ஸைக் கேட்டுக் கொண்டார். யோசித்துப் பார்த்த ஈ.எம்எஸ்.நம்பூதிரபாடு வைத்த பெயர் லக்ஷ்மி. (ஆமாம் லட்சுமிதான்!) குழம்பிப்போன காம்ரேட் லக்ஷ்மியோடு மேடையிலிருந்து இறங்கிப் போனாராம்! மற்ற முன்னணி தலைவர்களுக்கு இது ஏதோபோல் இருந்தும், வெளிக்காட்டாமல் இருந்தார்களாம். வேதங்களின் நாடு என்று ஏற்கனவே ஈ.எம்.எஸ் ஒரு நூல் எழுதியுள்ளார். அதனுடைய தாக்கத்தின் சிறுபிசிறுதான் இந்தப் பெயர் சூட்டல் என்று எடுத்துக் கொள்ளலாமா?

## கோட்சே வழிபாடு

தலைமறைவாக நடைபெற்றுவந்த, காந்தியைக் கொன்ற "கோட்சே வழிபாடு" தற்பொழுது பம்பாயில் பகிரங்கமாகவே நடைபெற்று வருகிறது. நவம்பர் 15ல் கோட்சே தூக்கில் இடப்பட்டார். அந்த நாளை, "நாதுராம் கோட்சே இச்சா பத்ரா நயாஸ்" என்ற டிரஸ்ட் கொண்டாடி

வருகிறது. வளர்ந்துவரும் இந்துத்துவத்தின் ஒரு அங்கமாக கோட்சே வழிபாட்டைக் காணலாம். அகண்ட பாரதம் கிடைத்தபின்பு தனது சாம்பலை சிந்துநதியில் கரைக்க வேண்டும் என்று கோட்சே கடைசியாக விரும்பினாராம். அகண்ட பாரதம் என்பது பாகிஸ்தான், பர்மா, இலங்கை, நேபாளம் ஆகியவற்றை உள்ளடக்கியது. இது எப்போது சாத்தியமாகுமோ தெரியவில்லை. அதற்காக கோட்சேயின் அண்ணன் கோபால் கோட்சே (74வயது), நாதுராம் கோட்சேயின் சாம்பலைப் பாதுகாப்பாக வைத்து வருகிறார். அதற்கு நவம்பர் 15அன்று பூஜையும் செய்கிறார். காந்தியை நவம்பர் 15அன்று, "மூட்டைப் பூச்சி, ரத்தம் உறிஞ்சும் அட்டை" என்றெல்லாம் பேசியிருக்கிறார்கள். ஆனால் எதிலும்

முடிவெடுக்கத் தயங்குகிற பிரதமர் ராவ் இதிலும் தயக்கம் காட்டியுள்ளார்.

## பண்ருட்டி ராமச்சந்திரனின் தனிக்கடை!

இன்று தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளைப் பகிரங்கமாக ஆதரிக்கும் ஒரே பெரிய அரசியல்க் கட்சி, டாக்டர் ராமதாசின் பாட்டாளி மக்கள் கட்சிதான். மற்றக் கட்சிகளெல்லாம் பெரும்பாலும் காட்டிக்கொடுக்கும் வேலையைச் செய்ய ஆரம்பித்துவிட்டன. பாட்டாளி மக்கள் கட்சியில் இருந்த பண்ருட்டி ராமச்சந்திரன், காங்கிரசுடன் கூட்டுச்சேர முயற்சியெடுத்து, அது தோல்வியில் முடிந்தது பழைய கதை. தற்போது தனது விருப்பம் போல் எதுவும் நடைபெறவில்லை என்றுகூறி, பண்ருட்டி ராமச்சந்திரன் நான்தான் உண்மையான பா.ம.க. என்று தனி ஆவர்த்தனம் வாசிப்பது புதிய கதை. இப்பொழுது பண்ருட்டி ராமச்சந்திரன் பா.ம.க இரண்டாக உடைத்து, தனிக்கடை நடத்தத் தொடங்கிவிட்டார். இந்தக் கட்சி காங்கிரசுடன் கூட்டணி சேரும் என்று பத்திரிகைகள் கிசுகிசுக்கின்றன. தொண்டர்கள் இல்லாவிட்டாலும்கூட பண்ருட்டி ராமச்சந்திரன் என்றுமே தலைவர்தான்.

www.tamilarangam.net

www.tamilarangam.net

# நேர்முகம் நேர்முகம் நேர்முகம் நேர்முகம்

வழமையான காரணங்களுடன் இந்த இதழ் வெளிவரும் காலப்பகுதியில் உள்ள பொருளாதார நெருக்கடியும் சுவடுகளின் காலதாமதத்திற்குக் காரணம் ஆகிறது. உங்கள் சந்தா பற்றி அடிக்கடி நினைவுபடுத்த நேரிடுவது துக்கம்தான். ஆனால் அதையே பெரிதும் நாங்கள் நம்பவேண்டிய நிலை உள்ளது.

இந்த இதழ் நோர்வேயில் வாழும் சில தமிழ்க் கவிஞர்களது கவிதைகளைச் சுமந்து வருகிறது. இந்த இதழில் இடம்பெறும் கவிதைகள் சுவடுகளுக்குக் கிடைத்த கவிதைகளில் இருந்து மட்டுமே தெரிவானவை. இதேபோல் இன்னொரு இதழும் நோர்வேத் தமிழ்க் கவிஞர்களுக்காக வரும். புதிய கவிஞர்களிடம் இருந்தும் கவிதைகள் வரவேற்கப் படுகின்றன.


அண்மைக் காலமாக சுவடுகளில் சில வடிவமைப்பு மாற்றங்களை முயன்று வருகிறோம். இவ்வாறே சுவடுகளில் பிரசுரிக்கப்படும் விடயங்கள் தொடர்பாகவும் சில மாற்றங்கள் எதிர்காலத்தில் செய்யப்படும். இதுபற்றிய உங்கள் ஆலோசனைகளை வரவேற்கிறோம். உங்களிடம் இருந்து தரமான படைப்புகளை எப்போதும் சுவடுகள் வரவேற்கிறது.

இந்த இதழின் காலதாமதத்தினால், இதிலுள்ள படைப்புகள் சில காலத்தால் பிந்தியது போன்று தோற்றம் தரலாம். அது சுவடுகளின் தவறன்றி, ஆக்கங்களை எழுதியோரதல்ல.

இடவசதியைக் கருத்திற் கொண்டு சுவடுகளுக்கு எழுதுவோர் படைப்புகளை அதிகம் நீளாமல் எழுதுவது நல்லது. கடிதங்களை எழுதுவோர் அவை பிரசுரிக்கப்படக் கூடாது எனக் கருதினால் அதுபற்றிக் கடிதத்தில் குறிப்பிடவும். பிரசுரிக்கப்படும் கடிதங்கள் நாகரிகமான முறையில் எழுதப்பட வேண்டுமென விரும்புகிறோம். இயன்றவரை சுருக்கமாகக் கடிதங்களை எழுதினால் அதிக கடிதங்களைப் பிரசுரிக்க வாய்ப்புண்டாகும்.

சுவடுகளுக்குச் சந்தா அனுப்புவோர் தயவுசெய்து வங்கியினூடாக மாத்திரம் அனுப்பி உதவவும். எமது கணக்கிலக்கம் 160752 13062. எமது வங்கியின் பெயர் **SparebankenNOR.** பன்னிரு இதழ்களுக்கான சந்தா 300 குறோணர்கள். (அண்ணளவாக 50 அமெரிக்க டொலர்கள்).

www.tamilarangam.net




இங்குதான்
எனக்குள் தான்
என் நிறங்களை நான்
தொலைத்தேன்
அப்படியே

அப்பனி"ற்கு மகளாக
ஆம்பிளை"க்கு மனைவியாக
மகனி"ற்குத் தாயாக
படுமோசமாய்
என்னை அடகுவைத்தேன்.

இவர்கள்தான்
பிறப்பிலிருந்து
என் தேவைகளை முடிவு செய்வதுடன்
முற்றுப் பெறுவர் என்றெண்ணினேன்.

ஆனால்
என் உடையில் தொடங்கிய
அவர்களின் தீர்மானிப்புகள்
என் உடல் யாருடன்
சேர்வது என்பதுவரை தொடர்ந்ததில்
கலாச்சாரமும் கற்பும்
ஜெயித்ததாய் எண்ணினர்.

அந்த உடல்தான்
என்னையும், என் கர்ப்பப்பையின்
படைத்தல், காத்தல், அழித்தலையும்
முடிவுசெய்து
என்னை முடமாக்கியது.

இதோ!
என்னைக் கிழித்து வந்த
கருவும்
என்னைத் தீர்மானிக்க ஆயத்தமாய்!

உரத்துக் கூவிட நாம்
பேயினமாம் பெண்ணே

தறிகெட்ட ஜென்மமம்மா
நாங்கள்
வதைகளென தெரிந்துகொண்டும்
அதனின்று
வெளியேற இஷ்டப்படாமல்.......

**கலிஸ்ரா**

www.tamilarangam.net


சுகுமாரன்

# இலங்கையின் முகங்கள்

"புலிகளுடன் பேசத் தயார். அவர்களின் தேவை என்ன என்பதை அவர்கள் தெரவிக்கவேண்டும்" இவ்வாறு கூறியிருப்பவர் வேறு யாருமல்லர், சிறிலங்காவின் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கதான். ஜனாதிபதிக்கும் அவரது அரசியற் பட்டாளங்களுக்கும் தமிழ் மக்களது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கான காரணம் புரகிறதோ இல்லையோ, புலிகளின் அதீத ராணுவ வளர்ச்சி கண்ணுக்குள் குத்துகிறது. இனப்பிரச்சனையைத் தீர்ப்பதைவிடப் புலிகளின் இராணுவ பலத்தை எப்படி ஒடுக்கலாம் என்பதிலேயே அரசு காலத்தைக் கழித்துவருகிறது.

பேச்சுவார்த்தைக்கு தயார் எனக் கூறிய விஜேதுங்கா, ஒற்றையாட்சிக்கு உட்பட்ட தீர்வையே வலியுறுத்தியுள்ளார். இதையிட்டுப் புலிகளோ தமிழ் மக்களோ அலட்டிக்கொள்ளப் போவதில்லை என்பது ஒருபுறமிருக்க ஈழத்தைத் தவிர வேறு எந்தத் தீர்வும் சரிப்பட்டு வராது என்ற நிலைக்கே தமிழ் மக்களை மிக வேகமாக இட்டுச் செல்கின்றன இனவாத நிலைமைகள். இனவாத ஆட்சியாளர்கள், தமிழ் மக்களுக்குச் சமஷ்டியை வழங்கவேண்டிய நிலைக்கு எதிர்காலத்தில் வந்தாலும், அது எவ்வளவுதூரம் தமிழ் மக்களைத் திருப்திப் படுத்தும் என்பது கேள்வியே.

சிறிலங்கா ஜனாதிபதியின் பேச்சுவார்த்தை என்ற நாடகம் உலகையும் சிங்கள மக்களையும்



www.tamilarangam.net

ஏமாற்றும் நடவடிக்கை என்பது யாவருக்கும் தெரிந்ததே இந்நிலையில் கிழக்கிலும் வவுனியாவிலும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்த விஜேதுங்க முடிவெடுத்திருப்பது, தனது ஜனநாயக வேடத்தை உறுதிப்படுத்தவே. விஜேதுங்காவின் இம்முடிவுக்கு, கட்சிக்குள்ளேயே உள்ள சிறுபான்மை அங்கத்தவர்கள் மத்தியில் எதிர்ப்பு இருப்பது ஒருபுறமிருக்க, ஆரம்பத்தில் இதனை எதிர்த்த தமிழ்க் குழுக்கள், முஸ்லிம் கொங்கிரஸ், பிரதான கட்சிகள் அனைத்தும் (ஈபிஆர்எல்எ.:ப் நீங்கலாக) இப்போது நான்முந்தி நீமுந்தி எனப் போட்டியிடுகின்றன.

தற்போதைய உள்ளூராட்சித் தேர்தல், வடக்கு கிழக்கு இணைப்பிற்கான (கிழக்கில் நிகழவுள்ள) சர்வசன வாக்கெடுப்பிற்கு முன்னோடி நடவடிக்கை என விஜேதுங்கா அறிவித்துள்ள நிலையிலும் தமிழ்க் கட்சிகள் முஸ்லிம் கொங்கிரஸ் என்பன போட்டியிட முன்வந்திருப்பது அவர்களின் அரசியல் சதுரங்க விளையாட்டின் கடைசி அத்தியாயங்கள் என்றே கூறலாம். இதற்கு அவர்கள் கூறும் விளக்கம், சில தீய சக்திகள் பதவிக்கு வந்துவிடக் கூடாது என்பதுதான். இவர்கள்தான் அந்தத் தீய சக்திகள் என்பதை அவர்கள் உணராதது வேடிக்கையானது என்பதைவிட விகாரமானது என்பதே பொருந்தும். இன்றைய நிலையில் இத்தகைய தேர்தலில் போட்டியிடுவது இனவாத ஒடுக்குமுறை ஆட்சியாளர்களின் வடக்கு கிழக்கு இணைப்பைப் பிரிக்கும் சதிக்குத் துணைபோவதாகவே முடியும். தேர்தலில் இனவாதக் கட்சிகளோ அன்றேல் கொழும்புத் தமிழ்க் குழுக்களோ வெற்றியீட்டும் பட்சத்தில் கிழக்கு மாகாணம் வடக்குடன் இணைவதைக் கிழக்கின் மக்கள் விரும்பவில்லை என அரசு பிரசாரப்படுத்த வாய்ப்பாக இருக்கும்.

தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளிவிடும் கைங்கரியத்தை தமிழ்க் கட்சிகள் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றன. ஒருபுறம் வடக்கு கிழக்கு பிரிப்பிற்கு எதிராகப் பத்திரிகை அறிக்கை விடுத்தபடி, சிறிலங்கா அரசுடன் கைகோர்த்துக் கொண்டு, மறுபுறம் வடக்கு கிழக்கு இணைப்பிற்கு எதிரான சதியாக நடத்தப்படும் தேர்தலில் சுயேச்சைக் குழுக்கள் என்ற முகமூடியைப் போர்த்திக்கொண்டு தேர்தலில் போட்டியிடும் நயவஞ்சகம். இப்படி எத்தனை காலத்திற்குத் தமிழ் மக்களையும் உலகையும் ஏமாற்றப் போகிறார்கள் இவர்கள்? இன்று தேர்தலில் போட்டியிட முண்டியடிக்கும் இவர்கள் நாளை பதவி எனும் எலும்புத் துண்டிற்காக விஜேதுங்காவுடன் இணைந்து இலங்கையில் பயங்கரவாதப் பிரச்சினையைத் தவிர இனப் பிரச்சனை என்று ஒன்றில்லை என்று கூறமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? (இன்றே இவர்களின் நிலை கிட்டத்தட்ட இதே மாதிரித்தான்) ஐயா, தம்பிமாரே, நீங்கள் உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும், நீங்கள் தமிழ் மக்களின் பிரச்சனை பற்றிக் கதையாமல் மௌனமாக இருப்பதே தமிழர்களுக்குச் செய்யக்கூடிய பெரிய உதவியாக இருக்கும். இதை வெறும் வேண்டுகோளாக மட்டும் பாராதீர்கள். தினசரி இறக்கும், வன்முறைக்குப் பலியாகும் எமது மக்களின் இரத்தத்தின்மீது சாட்சியாகத் தமிழர்கள் கேட்கிறார்கள்.

முஸ்லிம் கொங்கிரசுக்கு கடந்த மாகாணசபைத் தேர்தலில் கிடைத்த படுதோல்வியை அடுத்து அது மீண்டும் தேசிய கட்சிகளுடன் இணைந்து முஸ்லிம் மக்களின் அரசியல்

www.tamilarangam.net

உரிமைகளை விலைபேசும் கைங்கரியத்தில் இறங்கியுள்ளது. தமிழ்மக்களைப் போலவே கிழக்கில் முஸ்லிம் மக்களும் அரசின் கடுமையான ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்களின் பிரதேசங்கள் பல, சிங்களக் காடையர்களாலும் அரச ராணுவப் படைகளாலும் விழுங்கி ஏப்பம் விடப்பபட்டடு விட்டன. ஒடுக்கப்பட்ட முஸ்லிம் மக்களின் ஏகோபித்த குரலாக ஒலிக்கும் என எதிர்பார்க்கப்பட்ட மு.கா, சமரச அரசியலிலும், சந்தர்ப்பவாத பேரத்திலும் ஈடுபட்டு விஜேதுங்காவின் பிரித்தாளும் அரசியல் வஞ்சகத்திற்குப் பலியாகியுள்ளது.

இன்று வட கிழக்கு பிரிவினை பற்றியும் இணைப்பு பற்றியும் கேள்வி எழுந்துள்ள நிலைக்கு முக்கிய காரணங்களில் தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள - ஏற்பட்டு வருகிற இனமோதல்களும் ஒன்று. இந்நிலை ஏற்படப் பல காரணங்கள் இருந்தாலும் முஸ்லிம் ஆயுதக் குழுக்களினதும், புலிகளதும் அதிரடிச் செயற்பாடுகள் முக்கிய காரணமாக உள்ளன. சந்தர்ப்பவாத முஸ்லிம் குழுக்களின் தமிழ் மக்கள் மீதான படுகொலைகளும், புலிகளின் கிழக்கு முஸ்லிம் மக்களின் மீதான தாக்குதல்களும், வடக்கு முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றமும் குறிப்பிடப்பட வேண்டியன.

முஸ்லிம் தமிழ் மக்களின் நிரந்தர நீடித்த உறவே வடக்கு கிழக்குப் பிரிவினை என்ற பேச்சுக்கே முற்றுப்புள்ளி வைக்கக்கூடியது. முஸ்லிம் மக்களின் அரசியற் சுதந்திரங்களை வழங்கி அவர்களின் சுயநிர்ணய, தேசிய இன சுதந்திரத்தை அங்கீகரித்து வழங்குவதன் மூலமே நாமும் அவர்களுடன் இணைந்து, சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்கு எதிரான எமது போராட்டத்தை வெல்லமுடியும்.●

அடுத்த இதழில்

மூன்று லத்தீனமெரிக்கத் திரைப்படங்கள்

யமுனா ராஜேந்திரன் எழுதுகிறார்.

மக்கள் தேர்தலைப் பகிஷ்கரிப்பார்கள் என்ற பயத்தில் அவர்களைப் பலவந்தமாக வாக்களிக்கச் செய்வது இலங்கை ஜனநாயகத்தின் சிறப்புகளில் ஒன்று. அவ்வாறு செய்ய முடியாவிடில் கள்ளவாக்குகளைப் பதிவு செய்வதும் இந்த ஜனநாயகம்தான். இவற்றிற்குச் சிறப்பான உதாரணம் வடக்கு கிழக்கு மாகாணசபைக்கு நிகழ்ந்த தேர்தல். இதில் ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கியதில் முக்கிய பங்கு ஈபிஆர்எல்எஃப்புக்கும் இந்தியப் படைக்கும் உண்டு.

நிகழவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் வாக்காளர்களைப் பலவந்தப் படுத்துவார்களோ இல்லையோ, ஏற்கனவே பலரைப் பலவந்தப் படுத்தித் துப்பாக்கி முனையில் வேட்பாளர்களாக ஆக்கியுள்ளனர் தமிழ்க் குழுக்கள். இவர்களது முயற்சியால் உலகிலேயே சிறந்த ஜனநாயக நாடாக இலங்கை தெரிவானாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

தாகம்


ஒரு காத்திரமான வாசிப்பு

Po Box 3186,
London E17 6TJ
UK

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வருடாந்தம் நிகழ்வது போலவே இம்முறையும் இலையுதிர்காலத்தில் ‘தொலைக்காட்சி நிதி சேகரிப்பு’ (TV - Aksjon) நிகழ்ந்தது. இம்முறை சேகரிக்கப்பட்ட நிதி முக்கியமாக இலங்கை, மொசாம்பிக், யூகோஸ்லாவியா, எதியோப்பியா ஆகிய நாடுகளுக்கே செலவிடப்படும். இதைவிட, நோர்வேயில் முக்கியமாகச் செலவிடப்பட வேண்டிய சில திட்டங்களுக்கும் இந்த நிதி செலவிடப்படும்.




# தொலைக் காட்சி நிதி சேகரிப்பு’ 93

மூன்றாம் உலக நாடுகளுக்கும், அரச சார்பற்ற
பொதுநல நிறுவனங்களுக்கும் நிதி சேகரிப்பதை
நோக்கமாகக் கொண்டு 1974ல் தொலைக்காட்சி
நிதி சேகரிப்பு (TV Aksjon) அறிமுகம் செய்யப்
பட்டது. இதனை நோர்வேயின் தேசிய
தொலைக்காட்சி நெறிப்படுத்தி நடத்தி
வருகிறது.
இவ்வருடம் நோர்வேஜிய செஞ்சிலுவைச்
சங்கத்திற்காக நடத்தப்பட்ட நிதிதிரட்டலில்
12.3கோடி (123மில்லியன்) குறோணர்கள்
சேர்ந்துள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில்
இது அதிகமே எனினும் 1978ல் திரட்டப்பட்ட
தொகையுடன் (அன்றைய பெறுமதியைக் கருத்திற்
கொண்டு) ஒப்பிடுகையில் குறைவே.
சிறுவர், இளைஞர், வயது முதிர்ந்தோர் என
ஏராளமானோர் ஏறத்தாழ ஒவ்வொரு வீட்டினதும்
கதவுகளைத் தட்டி மனிதாபிமான உதவி
நோக்கத்திற்காக நிதி சேகரித்ததை எவ்வளவும்
பாராட்டலாம். செஞ்சிலுவைச் சங்கம் பல சிரமமான
சூழல்களில் பணிபுரிகிறது. உதாரணமாக
இலங்கையில் நிலவும் மிகமோசமான போர்ச் சூழலில்
மருந்து, உணவுப் பொருட்களைப் பாதிப்புற்ற
பகுதிகளுக்கு வழங்குவதில் சங்கம் முக்கிய பங்காற்றி
வருகிறது. இந்த நிதிசேகரிப்பு அவ்வாறான
பணிகளுக்கு அடித்தளம் அமைப்பதில் மட்டுமன்றி,
மூன்றாம் உலக நாடுகள் சிலவற்றில் நிலவும் போர்ச்
சூழலை மக்கள் மத்தியில் அறிமுகம் செய்வதிலும்
பங்காற்றுகிறது.

மஹிந்தன்

www.tamilarangam.net

## புரட்சிகர சர்வதேசியம் எனும் இலட்சியக்கனவும் ஒரு புதிய அரசின் உருவாக்கத்தின் யதார்த்தங்களும்



# மறதிக்கு எதிராக நினைவுகளின் போராட்டம் ஒரு சுயவிமர்சனம் (பகுதி 3)


*சமுத்திரன்*

ஜனவரி 1918ல் ரஷ்யாவில் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரகடனம் வெளியிடப்பட்டது. உழைப்பவர்களதும் சுரண்டப்படும் மக்களதும் உரிமைகளின் பிரகடனமே அது. அகில ரஷ்ய சோவியத்களின் மகாநாட்டின் இந்தப் பிரகடனம் பிரஞ்சுப் புரட்சிய மனிதனின், பிரஜைகளின் உரிமைப் பிரகடனத்திற்குப் போல்ஷவிக்குகள் முன்வைத்த பதில்போல், பிரதியீடு போல் அல்லது அடுத்த கட்ட மாற்றம் போல் அமைந்தது. ரஷ்ய சோவியத் குடியரசானது சுதந்திரமாக தேசிய இனங்களின் சுயவிருப்பின் அடிப்படையில் அமைக்கப்படும் ஒரு சமஷ்டி ஒன்றியமெனும் பிரகடனத்தை யாப்பு ரீதியாக்கினர் போல்ஷவிக்குகள். இதன்படி ரஷ்யா தொழிலாளர், போர்வீரர்கள், விவசாயிகளின் பிரதிநிதிகளின் சோவியத்துகளைக் கொண்ட ஒரு குடியரசாகிய இந்தக் காலகட்டத்தில் சர்வதேசவாதமே போல்ஷவிக்குகளின் பேச்சிலும் எழுத்திலும் மேலோங்கி நின்றது. ரஷ்யப் புரட்சி ஐரோப்பா எங்கும் பரவப்போகும் ஒரு பரந்த புரட்சியின் ஆரம்பமே என்ற கோஷம் முக்கியத்துவம் பெற்றிருந்த காலகட்டம் அது. உலகப் புரட்சியின் வளர்ச்சிக்கு உதவுவது புதிய சோவியத் அரசின் கடமை எனக் கருதப்பட்ட அதேவேளை, சோவியத் அமைப்பின் வெற்றிக்கு குறைந்தது ஐரோப்பியப் புரட்சியின் வெற்றி அவசியம் எனவும் கருதப்பட்டது. ஏகாதிபத்தியங்கள் மூலதனத்தின் தேவைகளையும் வர்க்க

www.tamilarangam.net

முரண்பாடுகளையும் தேசங்களுக்கு இடையிலான முரண்பாடுகளாக்கி யுத்தங்களை மேற்கொண்டுள்ளன. இந்தத் தேசங்களுக்கு இடையிலான யுத்தத்திற்குப் பதிலாக வர்க்கப் போராட்டத்தை முன்னெடுப்பதே வரலாற்றுத் தேவை என போல்ஷிக்குகள் தீவிரமாக நம்பியிருந்த காலகட்டம் அது. இந்த மனோநிலையை வெளிப்படுத்துவது போல் அமைந்தன ட்றொட்ஸ்கியின் பகிரங்க உரைகள். அவர் வெளிநாட்டு விவகாரங்களின் மக்கள் அதிகாரியாகக் கடமையாற்றினார். ஒரு தடவை அவர் கூறினார்: "உலக மக்களுக்குச் சில புரட்சிகர அறைகூவல்களை விட்டபின் எனது கடையை மூடிக்கொள்வேன்". ட்றொட்ஸ்கி போன்றோர் உலகப் புரட்சி பற்றிக் கனவு கண்டிருந்தபோது ரஷ்யாவின் உள்நாட்டு யதார்த்தங்கள் தமது சிக்கலான முரண்பாடுகளைக் கட்டவிழ்த்த வண்ணமிருந்தன. மறுபுறம் ஐரோப்பாவிலோ மற்றைய பகுதிகளிலோ புரட்சி அலைகள் பெரிதாக எழுந்துவரும் சாத்தியப்பாடுகளைக் காணவில்லை. அதற்கு மாறாக மேற்கத்தைய முதலாளித்துவ அரசுகள் சோவியத் அரசை முளையிலேயே நசுக்கிவிடக் கங்கணம் கட்டின. சர்வதேச, உள்நாட்டு யதார்த்தங்கள் போல்ஷவிக்குகளின் உலகப் புரட்சிக் கனவுகளைக் குழப்பின. புதிய உடனடிச் சவால்கள் அவர்களை எதிர்நோக்கின. மக்களின் உடனடி அடிப்படைத் தேவைகளை எப்படித் திருப்திப் படுத்துவது, புரட்சிமீது அவர்கள் நம்பிக்கை இழக்காதிருக்க என்ன செய்யவேண்டும், எதிர்ப்புரட்சியாளர்களை எப்படித் தோற்கடிப்பது - இத்தகைய சவால்கள். இந்தச் சூழலில் போல்ஷவிக்குகளின் சர்வதேசியக் கருத்தமைவு நிலைப்பாடு ஒரு பரீட்சைக்குள்ளானது. 1918 பெப்ரவரியில் ஜேர்மன் அணி அரசுகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டிய நிர்ப்பந்தம் தோன்றியது. ரஷ்யாவை ஏகாதிபத்திய யுத்தத்திலிருந்து மீட்கவேண்டும். அதேநேரம் கௌரவமிழந்த சமாதானத்தை ஏற்கமுடியாது. இந்த நிலையில் பிறெஸ்ட் - லிடொவ்ஸ்கில் (Brest - Litovsk) சோவியத் குழுவுக்குத் தலைமை தாங்கினார் ட்றொட்ஸ்கி. அங்கு அவர் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த அரசுகளுக்கு எதிராக அந்நாடுகளில் மக்கள் எழவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் நோக்கில்தான் சென்றார். ஜேர்மனியப் படைவீரர்கள் மத்தியில் யுத்த எதிர்ப்புப் பிரசாரத்தில் சோவியத் குழு ஈடுபட்டது இராஜதந்திர மரபுகளை மீறுவதுபோல் அமைந்தது. இதை ஜேர்மன் அரசு விரும்பவில்லை. அத்துடன் ட்றொட்ஸ்கியின் குழு "எதுவித இணைப்புகளும் நஷ்ட ஈடுகளுமற்ற சமாதானம்" எனும் கோரிக்கையை முன்வைத்து ஜேர்மனியினதும் அதன் சார்பு அரசுகளினதும் சமாதானம் பற்றிய பிரசாரத்தின் சுலோகத்தைப் பரீட்சைக்குள்ளாக்கியது. ஆனால் ஜேர்மனியோ அந்தச் சந்தர்ப்பத்தில் சோவியத் ஒன்றியத்தையும்விடப் பன்மடங்கு பலம்வாய்ந்த நிலையிலிருந்தது. ஒரு சிக்கலான அறுவை வைத்தியத்திற்கூடாகப் பிறந்த சோவியத யூனியன் எனும் குழந்தைக்கெதிராக ஜேர்மனியின் வல்லரசு மறுபுறத்தில் நின்றது. ட்றொட்ஸ்கியும் பல இளைய இடதுசாரிக் கொம்யூனிஸ்ட்டுகளான புகாரின் (Bukharin) போன்றோரும் உலகப் புரட்சி எனும் அடிப்படையில் தீவிர கருத்தமைவு ரீதியான நிலைப்பாடுகளிலிருந்தே இந்தப் பிரச்சனையை அணுகினர். ஆனால் லெனின் அவர்களின் நிலைப்பாட்டுடன் கொள்கை ரீதியில் உடன்பட்டபோதும் சோவியத் புரட்சியைக் காப்பதற்காக ஜேர்மனியுடன் சமரசம் செய்வது தவிர்க்க முடியாதது எனும் கருத்தைக்

www.tamilarangam.net



கொண்டிருந்தார். இளைய சந்ததியினரான புகாரின் போன்றோர் ஏகாதிபத்திய யுத்தத்திற்குப் பதில் "புரட்சிகர யுத்தமே" எனும் கோஷத்தை முன்வைத்தனர். இதன் அடிப்படையில் யுத்தத்தை ஐரோப்பியப் புரட்சியாக மாற்றவேண்டும் (மாற்றமுடியும் என்பதல்ல) என்ற முற்றிலும் கருத்தமைவு ரீதியான நிலைப்பாட்டினைக் காணலாம். ட்றொட்ஸ்கி "சமாதானமுமில்லை யுத்தமுமில்லை" (No Peace, No War) எனும் சுலோகத்தை முன்வைத்தார். இந்தப் போக்குகள் ஜேர்மன் அணியின் நிலைப்பாட்டை மேலும் இறுக்கமாக்கவே செய்தன. லெனின் யுத்தத்தை முடிப்பதற்கு தற்காலிக ராஜதந்திர வழிகளைத் தவிர வேறு மாற்று வழியில்லை என்பதை உணர்ந்து செயற்பட்டார். சோவியத் யூனியனால் ஒரு "வெட்கத்துக்குரிய" சமாதானத்தையே பெறமுடியும். ஆனால் அது அன்றைய நிலையில் தவிர்க்க முடியாதது என அவர் வாதிட்டார். இறுதியில் ட்றொட்ஸ்கியும் லெனினுடன் ஒத்துப் போனார். 1918 மார்ச்சில் லெனின் குறிப்பிட்ட "வெட்கத்துக்குரிய" சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டது. பழைய ரஷ்ய சாம்ராஜ்யத்தின் அங்கங்களாயிருந்த பல பிரதேசங்களை சோவியத் யூனியன் இழந்தது. சமாதான உடன்படிக்கை கைச்சாத்தானதும் ட்றொட்ஸ்கி தான் வகித்துவந்த வெளிநாட்டுத்துறை மக்கள் அதிகாரி பதவியை ராஜினாமாச் செய்தார். புகாரின் தலைமையிலிருந்த இடதுசாரிக் கொம்யூனிஸ்ட்டுகள் உடன்படிக்கையை எதிர்த்தனர். கட்சியின் சர்வதேசியப் புரட்சிக் கொள்கைகள், சோவியத் யூனியனின் இலட்சியங்கள் போன்றவற்றிலிருந்து விலகிச் செல்லும் இத்தகைய சமாதானம் தவறானது எனச் சிறுபான்மையினராக இருந்த இடதுசாரிக் கொம்யூனிஸ்ட்டுகள் கருதினர். லெனினுடைய நீண்ட தலையீட்டின் பின் இவர்கள் திருப்தியற்ற நிலையில் தமது சம்மதத்தைக் கொடுத்தனர்.

பிறெஸ்ட் - லிடொவ்ஸ்க் சோவியத் யூனியனின் ராணுவரீதியான பலவீனத்தை மேலும் வெளிப்படுத்தி மேற்கத்திய வல்லரசுகளின் இராணுவ பலத்திற்கு முன்னால் சோவியத் யூனியனால் நிலைகொள்ள முடியுமா? ஒரு நவீன இராணுவமின்றி ரஷ்யப் புரட்யைக் காக்க முடியுமா? என்ற கேள்விகளை எழுப்பியது. இந்தக் கேள்விகளுடன் இணைந்தது இன்னொரு கேள்வி. உள்நாட்டின் "வெள்ளை" ரஷ்ய இராணுவக் குழுக்கள் பலாத்கார நடவடிக்கைகளில் ஈடுபட்டன. தோற்கடிக்கப்பட்ட ஸாரிச ராணுவத்தின் அதிகாரிகளும் பழைய அமைப்பின் ஆதரவாளர்களும் "வெள்ளைக் காவலர்" படையொன்றை அமைத்து எதிர்ப் புரட்சியை நடத்திவந்தனர். இந்த வெளிவாரி - உள்நாட்டு நிலைமைகள்

www.tamilarangam.net

சோவியத் யூனியனுக்கு ஒரு பலம்வாய்ந்த இராணுவம் அவசியம் எனும் முடிவுக்கு வழிவகுத்தது. இப்போதான் "சோஷலிச தந்தைநாடு" எனும் சுலோகமும் எழுந்தது. சோஷலிசத் தந்தை நாட்டினை எதிர்ப் புரட்சிகர சக்திகளிடமிருந்து பாதுகாக்கச் செஞ்சேனை (Red Army) உருவாயிற்று. ட்றொட்ஸ்கி யுத்தத்திற்குப் பொறுப்பான மக்கள் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். செஞ்சேனையை அமைப்பதில் அவர் முக்கிய பங்கினை வகித்தார். ஆனால் அவருடைய அணுகுமுறையோ மிகவும் மரபுரீதியானதாகவும் இராணுவவாதம் சார்ந்ததாகவும் இருந்தது. இராணுவத் துறையில் அனுபவம் கொண்டோரை ட்றொட்ஸ்கி தேடினார். இவர்கள் வேறு யாருமல்லர், முன்னாள் ஸாரின் இராணுவத்தில் அதிகாரிகளாகக் கடமை ஆற்றியோரே. ஒருவருட காலத்திற்குள் 30,000 பழைய ஸாரிச இராணுவ அதிகாரிகளை ட்றொட்ஸ்கி அணிதிரட்டினார். இவர்களுக்கு அரசியல் அறிவூட்டப் பட்டது. செஞ்சேனை விவகாரங்களில் ட்றொட்ஸ்கி மிகவும் அதிகாரத்துவ நடைமுறையைப் பின்பற்றினார். மரபு ராணுவ ஒழுங்கு, கீழ்ப்படிதல் போன்ற விடயங்களில் அவர் மரபு ரீதியான விழுமியங்களை மிகவும் கறாராகக் கடைப்பிடித்தார்.

ரஷ்யப் புரட்சியின் ஒரு விசேடத் தன்மையை இங்கு நினைவுகூரல் அவசியம். புரட்சிக்குப் பின்னரே "புரட்சிகர" இராணுவம் அமைக்கப் பட்டது. புரட்சியை நோக்காகக் கொண்டிருந்த போல்ஷவிக்குகள் தமது கட்சியின் அணியாக ஒரு இராணுவத்தைக் கட்டியெழுப்பவில்லை. ஸாரிசத்தைத் தூக்கியெறிய அத்தகைய ஒரு இராணுவம் தேவைப்படவில்லை என்பதை அனுபவமும் காட்டியது. ஆனால் புரட்சியின்பின் சோவியத் அரசின் தோற்றத்துடன் அந்த அரசைப் பாதுகாக்க ஒரு சோவியத் இராணுவம் தேவைப்பட்டது. விரக்தியடைந்த ஸாரிச இராணுவத்தின் போர்வீரர்கள் புரட்சிக்கு உதவினார்கள். புரட்சிக்குப் பின் அதே ஸாரிச இராணுவத்தின் வேலையிழந்த அதிகாரிகளின் உதவியுடன் செஞ்சேனை அமைக்கப்பட்டது. இதே காலகட்டத்தில் "சோஷலிச தந்தைநாடு" எனும் "தேசிய" கோட்பாடும் பிறக்கிறது. இன்று பின்னோக்கிப் பார்க்கும்போது "தனியொரு நாட்டில் சோஷலிசம்" எனும் திட்டம் இங்குதான் உருப்பெற்றது போல் படுகிறது. - இதுபற்றிப் பின்னர் -

சோவியத் செஞ்சேனை உள்நாட்டு எதிர்ப் புரட்சியாளர்களை நசுக்குவதில் தீவிரமாக ஈடுபட்டது. அதேநேரம் போல்ஷவிக் தலைவர்கள், குறிப்பாக லெனின், ட்றொட்ஸ்கி போன்றோருடன் இளைய சந்ததியினரான இடதுசாரிக் கொம்யூனிஸ்ட்டுகள் ஐரோப்பிய புரட்சி பற்றிய கனவைக் கைவிடவில்லை. மேற்கத்தைய வல்லரசுகள் சோவியத் அமைப்பை ஒரு நீண்டகால ஆபத்தாகக் கருதிச் செயற்பட்டன. போல்ஷவிக்குகளோ ஐரோப்பிய பாட்டாளி வர்க்கத்தில் நம்பிக்கை கொண்டிருந்தனர். 1918-1919ல் இடம்பெற்ற சில சம்பவங்கள் ஐரோப்பாவில் புரட்சிகள் பரவலாம் எனும் நம்பிக்கை ஒளியைத் தந்தன. ஆனால் வரலாற்றின் பொதுவான நகர்ச்சியோ வேறு விதமாகச் செயல்பட்டது. சோவியத் யூனியன் ஒரு உள்நாட்டு யுத்தத்தின் பிடிக்குள் வந்தது. செஞ்சேனையின் பங்கு முக்கியத்துவம் பெற்றது. சோவியத் அமைப்பின் மையப்படுத்தல் (Centralising) தன்மைகள் பலம்பெற ஆரம்பித்தன. அதிகாரத்துவ வாதத்திற்கான அடிப்படைகளும் பலம்பெற்றன. புரட்சியோ கருத்தமைவு ரீதியில் வகுக்கப்பட்ட பாதையிலிருந்து விலகிச் செல்லத் தொடங்கிவிட்டது. இந்த விலகல்களை நியாயப்படுத்தப் பல வாதங்கள் பிறந்தன. இந்த வாதங்களை

www.tamilarangam.net

நியாயப்படுத்தப் புதிய விலகல்கள் பிறந்தன. சோஷலிசவாதிகளுக்கு 1917, இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பமாக, முதலாண்டாக விளங்கியது. உலகப் புரட்சியின் நூற்றாண்டு பிறந்துவிட்டது எனக் கனவுகண்ட அவர்கள் சோவியத் யூனியனை உன்னிப்புடன் நோக்கியவண்ணம் இருந்தனர். அங்கோ "சோஷலிசத் தந்தைநாடு" ஒரு ஜீவமரணப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தது. பாரிஸ் கொம்யூனை முன்மாதிரியாகக் கொண்டு சோவியத் அரசு உருவாக்கப்படும் எனும் லெனினின் கூற்று நடைமுறையில் என்னவாயிற்று? மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளை பூர்ஷ்வா லிபரல் அமைப்பினால் திருப்திப்படுத்த முடியாது எனக் கூறிய லெனினும் அவரது கட்சியும் இந்த அடிப்படைக் கோரிக்கைகளைத் திருப்திப்படுத்தும் அமைப்பை உருவாக்கினார்களா?

(தொடரும்)

## வெளிநாட்டவர்மீது வெறுப்பால்....



லேசர்கதிர் மூலம் குறிபார்த்துச் சுடும் துப்பாக்கியால் ஸ்ரொக்ஹோமில் வெளிநாட்டவரைப் பீதிக்குள்ளாக்கி வந்ததாகக் கூறப்பட்ட "லேசர் மனிதன்", ஜான் அசானியஸ் என்பவனே என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

ஒரு கொலை (ஈரானிய மாணவன்) ஒன்பது கொலை முயற்சிகள் (ஏழு வெளிநாட்டவர் மற்றும் குற்றவாளியை வங்கிக்கொள்ளை முயற்சியில் கைது செய்ய முனைந்த பொலிசார்) மூன்று வங்கிக் கொள்ளைகள் போன்ற சம்பவங்களுக்காகக் குற்றம் சாட்டப்பட்ட ஜான், தான் வங்கிக் கொள்ளைகளில் ஈடுபட்டதை ஒத்துக் கொண்டுள்ளான். வெளிநாட்டவர்கள் சுவீடனில் வாழ்வதைத் தான் வெறுப்பதாகத் தன் வாக்குமூலங்களில் ஒப்புக்கொண்ட இவன், வெளிநாட்டவரைக் கொல்லத் தான் முயன்றதில்லை என மறுத்து வருகிறான்.

சந்தர்ப்ப சாட்சியங்கள் ஜான் அசோனியசே கொலை முயற்சிகளில் ஈடுபட்டதாகச் சுட்டிக் காட்டுகின்றன என்று தீர்ப்புக் கூறியுள்ள நீதிமன்றம், இவனை மனோதத்துவப் பரிசீலனைக்கு உட்படுத்துமாறு கேட்டுள்ளது. அதன் முடிவு தெரிந்தபின்னரே சிறைத்தண்டனை பற்றிய தீர்ப்பு வழங்கப்படும்.

வழக்கு நடந்துகொண்டிருந்த போது, ஜான் அசோனியஸ் தனது பேட்டிக்காகப் பெரிய தொகை ஒன்றைக் கறுப்புப் பணமாகத் தரும்படி தனது வழக்கறிஞர் மூலம் கேட்டுக்கொண்டதைக் குறிப்பிட்ட தொலைக்காட்சி நிறுவனம் இரகசியமாகப் படம் பிடித்ததைத் தொடர்ந்து வழக்கறிஞர் சங்கம் அசோனியஸின் வழக்கறிஞர்மீது நடவடிக்கை எடுக்க ஆலோசித்து வருவது குறிப்பிடத் தக்கது.

○ சாள்ஸ்

www.tamilarangam.net

போர் முடிந்துவிட்டது.
தேசப்பிரதான சாலைகளின்
ஒவ்வொரு திருப்பத்திலும்
நூதனசாலைகள்.

ஒவ்வொன்றாய்
ஏறி இறங்கிக் களைத்துவிட்டேன்
எனது ஒரு காலையும்
உழவுமாடொன்றையும் தேடி.

குத்தகை நிலம்
உழுத்த, பரம்பரைக் கலப்பை
இரவல் மாடுகளிரண்டு
இரண்டு கால்களுடன் நான்
பாதிநிலம் உழுதபடி.
இரும்புப் பருந்து பீச்சிய
கெந்தக எச்சம்
பறந்துபோனது எனதொரு காலும்,
இரவல் வாங்கிய
உழவு மாடொன்றும்.

போர்
முடிந்துவிட்டது.
இறுதி நூதனசாலையிலிருந்து
புழுதிப் பெருந்தெருக்கள் கடந்து
ஒற்றைக் காலால் வயலை அடைந்தேன்.

வயலினோரத்தே வேலியோடு
எருக்கலம் பற்றைக்குள்ளிருந்து
எனது பெயர்
உச்சரிக்கக் கேட்டேன்.

நுகத்தடியில் குருதியாய்
செம்மண் பூசி
பரம்பரைக் கலப்பை
அழுது கிடந்தது.

என்னை எடு
நிலத்தை உழு
கிடைக்கும் உனதொரு காலும்
இரவல் எருதும்

ஒரு காலின்றி ஒரு கால் ஊன்றி
ஒரு கால் தேடி
பரம்பரைக் கலப்பையால்
நிலத்தை உழுதேன்


விலா எலும்பு, கை எலும்பு,
முதுகெலும்பு, மூட்டெலும்பு,
சிறிது பெரிதாய்
மண்டை ஓடுகள்.....
.......

எனது காலையும்
காலொடு தொலைத்த
எருதையும் காணோம்.

சேறு துப்பிக் கலப்பை சொன்னது,
முயற்சியை விடு
புதிதாய் நீயொரு
நூதனசாலையைத் திற
எலும்புத் துடிகளின்
உரிமையாளர் வருவர்
உனது வயிற்றுப்பாடு தீரும்.

இப்போ
எனது கிராமத்துச் சந்தியில்
என் மனைவியின் பெயரில்
நூதனசாலையொன்று
புதிதாய் முளைத்தது
பல மண்டையோடுகள்
வரியாய்ச் செலுத்தி.

**தமயந்தி**



www.tamilarangam.net



# நோர்வேஜிய வெளிநாட்டமைச்சர் மறைவு

யாழினி

சுவீடனின் தலைநகர்தான் நோர்வே எனப் பல அமெரிக்கர் உட்படப் பல உலக நாட்டினர் எண்ணிக் கொண்டிருந்த நிலையை மாற்றி உலகப் படத்தில் நோர்வே எனும் நாட்டின் இருப்பை உலகறியச் செய்தது இஸ்ரேல் - பலஸ்தீனத்துக்கு இடையிலான சமாதானத்துக்கு அத்திவாரமிட்ட ஒஸ்லோ - ஒப்பந்தம் ஆகும்.

இவ்வொப்பந்தம் நோர்வேக்குச் சர்வதேச அரங்கில் மதிப்பையும் சமாதான விரும்பிகள் எனும் முகத்தையும் பெற்றுக் கொடுத்ததன் மூலம் நோர்வேஜிய வெளியுறவுக் கொள்கையில் ஒரு மைல்கல்லை - 1949ல் நேட்டோவில் சேர்ந்ததற்கு அடுத்ததாக - நிறுவியுள்ளது.

இவ் ஒப்பந்தத்தின் சூத்திரதாரியான நோர்வேஜிய வெளிநாட்டமைச்சர் யோகான் யோர்கன் ஹொல்ஸ்ற்றின் மறைவு நோர்வேக்கு ஏற்பட்ட இழப்பு மட்டுமன்றி சர்வதேச சமாதான விரும்பிகளுக்கு ஏற்பட்டதொன்றாகும்.

இவர் தனது அரசியல் வாழ்வை நோர்வேயின் வெளிநாட்டுக் கொள்கையை அத்திலாந்திக் - ஐரோப்பிய மையப்படுத்துவதில் செலவிட்டார். ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் தனது துறையில் புகழ் பெற்றிருந்த அவர் பனிப்போரின் ஆபத்தான பயங்கரவாதச் சமநிலை தொடர்பாக அறிவுபூர்வமான தந்திரோபாயங்களை வகுப்பதில் வெற்றி கண்டார். ஐரோப்பா இணைந்து செயற்படுவதன் அவசியத்தை உணர்ந்த அவர் 1973இலேயே நோர்வேஜிய ஐரோப்பா இயக்கத்தில் ஈடுபட்டார்.

ஆய்வாளராக இருந்த இவர் பின் அரசியலில் ஈடுபட்டார். பாதுகாப்பு அமைச்சிலும், வெளிவிவகார அமைச்சிலும் செயலாளராகவும், பின் குறுா ஹாலம் புருண்லாந்தின் தொழிற்கட்சி அரசில்

www.tamilarangam.net

பாதுகாப்பு அமைச்சராகவும், வெளிவிவகார அமைச்சராகவும் இருந்தார். தொழிற்கட்சியின் லடசியவாதக் கொள்கை உடையோரால் தொழினுட்பவாதி, யதார்த்தவாதி என்றும், இடதுசாரிக் கொள்கை உடையோரால் அமெரிக்க சார்புடையவர் எனவும் முத்திரை குத்தப்பட்டார். எனினும் மத்தியகிழக்கில் அமைதியை நிலைநாட்ட இவர் எடுத்துக்கொண்ட முயற்சியானது தொழிற்கட்சியினரின் மேற்படி அபிப்பிராயத்தை மாற்றியது மட்டுமன்றி உலகப் புகழையும் தேடிக் கொடுத்தது.

ஹோல்ஸ்ற்றின் இடத்தை வர்த்தக அமைச்சர் பியொண் தூர கூடால் (Bjørn Tore godal) நிரப்புகிறார். இன்று ஐரோப்பிய ஒன்றியத்தில் நோர்வே இணையத் தனது நிபந்தனைகள் பற்றிப் பேரம் பேசக்கூடிய ஆற்றல் கொண்டோர் பட்டியலில் இருந்து சமூக அமைச்சர் கிறேத்த க்னுட்சன் (Grethe Knutsen) இந்த இடத்தை நிரப்புகிறார். இவருக்கு மேலதிக தகுதி ஒன்றுமுள்ளது. அது, இவர் கவனிப்புத் தேவையான சிறிய குழந்தைகளைக் கொண்டிருக்கவில்லை என்பது. இதனால் இவர் தனது தொழிலில் பூரண கவனம் செலுத்தும் வாய்ப்பைக் கொண்டிருக்கிறார்.

## யோகான் யோர்ᵍஅன் ஹோல்ஸ்ற்

பிறப்பு: 29.11.1937
மறைவு: 15.01.1994
பெற்றோர்: நீல்ஸ் ஹோல்ஸ்ற், எஸ்தர் சல்வேசன்
மனைவி: மரியன்ன ஹய்bஅர்க் (ஆய்வாளர்)
பிள்ளைகள்: முதற் திருமணத்தில் - 3 பெண்கள், ஒரு ஆண். இரண்டாம் திருமணத்தில் ஒரு ஆண்.
கல்வி: ராணுவத்தில் ரஷ்யமொழிக் கல்வி 1956 - 58
பி.ஏ - கொலம்பியா பல்கலைக்கழகம் 1960
எம்.ஏ - ஒஸ்லோ 1965
உதவி ஆய்வாளர், பாதுகாப்பு ஆராய்ச்சி நிலையம், 1960 - 62
ஆய்வுவேலை:
ஆய்வாளர் - சர்வதேச விவகார மையம், ஹாவாட் பல்கலைக்கழகம், அமெரிக்கா, 1962-63
ஆய்வாளர் - FFI,
ஆராய்ச்சித் தலைவர் - நோர்வேஜிய வெளிநாட்டுக் கொள்கை நிறுவனம் (NUPI) 1969 - 76
விருந்தாளி விரிவுரையாளர் - காள்ட்டன் பல்கலைக்கழகம், கனடா. 1970

அரசியலில்:
பாதுகாப்பமைச்சின் செயலர் - 1976 - 77
வெளிநாட்டமைச்சின் செயலர் - 1979 - 1981
இயக்குனர், NUPI - 1981 -1986
பாதுகாப்பமைச்சர் - 1986 - 1989, 1990 - 1993
வெளிவிவகார அமைச்சர் - ஏப்ரல் 93 - ஜனவரி 94

www.tamilarangam.net

○ தங்கா



# தேசம் உண்டவர்

## நேரடி அனுபவச் சிதறல்கள்

(முன்தொடர்)

எனது நண்பர் லொட்ஜ் நிர்வாகியாக இருக்கும் ஒரு லொட்ஜ்க்கு நான் போவதுண்டு. ஒரு மாலையில் அங்கு மேல்மாடியில் ஒரே குழப்பம். எல்லோரும் மொட்டை மாடிக்கு ஓடுகிறார்கள். அங்கு ஒரு தமிழ் இளைஞன் கடைவாயில் இருந்து ரத்தம் கொட்டத் தலைகுனிந்தபடி நிற்கிறான். அவன் இத்தாலியிலிருந்து வந்த ஒருவரிடம் கமெராவை விற்பதற்காக என்று பெற்று ஏமாற்றிவிட்டதாகச் சொல்கிறார்கள்.

அவனை அடிக்கிறார்கள். நான் அவர்களை மறித்துவிட்டு, அவனிடம் கமெராவைத் திருப்பிக் கொடுத்துவிடுமாறு கேட்கிறேன். எங்கிருந்தோ கூட்டிவரப்பட்ட பெரியம்மா பிணையுடன் அவன் (கமெராவைத் திருப்பிக் கொடுக்கும் நிபந்தனையுடன்) விடுவிக்கப் படுகிறான். இத்தாலித் தமிழருக்கு அவனைப் பொலிசில் கொடுக்கப் பயம் (எல்லாத் தமிழர்களுக்கும் கொழும்பில் பொலிசுக்குச் செல்லப் பயம்தான்).

சில நாட்களின் பின்னர் அதே மேல்மாடியில் அதே இளைஞன். இம்முறை இயக்கத்தைவிட்டு வெளியேறிய, விரக்தியான இளைஞன் அடிக்கும் கூட்டத்துக்குத் தலைமை தாங்குகிறான். ஈஎன்டிஎல்எஃப் இயக்கத்தை விட்டு வெளியேறியவன் அவனென அறிகிறேன். "இவனை என்னட்டை விடும். கொண்டுபோய் அங்க போட்டாத்தான் இவன் சரிப்படுவான்" என்கிறான் தாக்குபவன். அவன் குறிப்பிட்டது ஒரு தனிப்பட்ட வதைமுகாம் - ஏதோ தனியிடத்தில் இருக்கும் ஓர் அறையாம். அந்தத் தமிழ் இளைஞனை, இயக்கத்தில் இருந்து வெளியேறிய அந்த விரக்தியான விடுதலை வீரன் கொண்டுசெல்கிறான். எனக்கு ஏதோ அந்த இளைஞனைக் கள்ளனாக ஏற்க மனம் மறுக்கிறது. அதன்பின் அந்த இளைஞனைக் காணமுடியவில்லை. ஆனால் அந்த விரக்தியான விடுதலை வீரனை சிலதடவை கொட்டாஞ்சேனை புனிதமான அந்தோனியார் ஆலயத்திற்கு அருகில் சந்தித்திருக்கிறேன். அவன் என்னைக் காணாதவாறு நான் அவனைக் கடக்கப் பட்டபாடு அந்தப் புனித

www.tamilarangam.net

அந்தோனியாருக்கு (அங்கு அவர் இருப்பின்) தெரியும். எனக்கு அரசபடையே தேவலாம் போலிருந்தது.

83 கலவரத்தின்போது தாம் தேடிய பொருட்கள் எல்லாவற்றையும் பாராளுமன்ற உறுப்பினரின் உறவினரிடம் பறிகொடுத்துவிட்டு, இந்தியாவில் 10 வருடம் வாழ்ந்து மீண்டும் இலங்கை திரும்பிய நண்பர் குடும்பத்தைக் கொழும்பில் சந்திக்கிறேன். இவர்களின் அன்பு ஒன்றே கொழும்பில் எனக்குக் கிடைத்த ஆறுதல். 93ல் பிரேமதாசா கொலையின் போது, தாம் மீண்டும் காட்டுக்கு ஓடி மீண்டு வந்ததைச் சொல்கிறார்கள். அவர்களின் மூத்த மகள் கொழும்பில் தமிழறிஞரின் பெயரைக் கொண்ட பிரபல கல்லூரியில் ஏ.எல். படிக்கிறாள். அங்கு படிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் மாணவிகள் தன்னுடன் சேராததையும், தான் கதைக்கும் முறையைக் கேவலப்படுத்துவதையும் சொல்லி அழுகிறாள். யாழ்ப்பாணத்தில் சாதி பார்த்துக் கோலோச்சிய இனம், எங்கு போனாலும் தன் வக்கிர மனதை மாற்றுமோ?

கொழும்பில் நான் சந்தித்த நோர்வேஜிய நண்பர்களுக்கு, நண்பர்கள் வீட்டில் விருந்து. நண்பரின் மனைவியும், அவரின் பிள்ளைகளும், எனது அக்காவும் நான் சமைக்கும் அழகை வாய்பிளந்து பார்த்தவண்ணமிருக்க வெளிநாட்டில் நான் கற்ற யாழ்ப்பாணச் சமையல் அரங்கேறுகிறது. இலங்கை, நோர்வேஜியர்களும் நானும் உணவை ரசித்துச் சாப்பிடுகிறோம். நண்பர்களைச் சந்தித்த மகிழ்ச்சியால் நானும் எனது அக்காவும் தெஹிவளையில் இருந்து கொட்டாஞ்சேனை போகவேண்டும் என்பதை மறந்துவிடுகிறோம். இதனால் எமக்கிடையே எழுந்த சத்தமான சம்பாஷணையினால் குழம்பிப் போன நோர்வேஜிய நண்பர்களுக்கு, கொழும்பில் தமிழர்கள் பொலிஸில் பதியாத இடத்தில் தங்கும் அவலத்தைக் கூறுகிறேன். அவர்களும் தங்கள் பார்வையால் எமக்கு அனுதாபத்தைத் தெரிவிக்கின்றனர்.

நோர்வேஜிய நண்பர்கள் தங்கியிருப்பது வெள்ளவத்தையில். தெஹிவளையில் இருந்து நடந்தே போகக்கூடிய தூரம்தான். அந்த நேரம்கெட்ட நேரத்தில் (கொழும்பில் தமிழர்களுக்கு எந்த நேரமும் கெட்ட நேரம்தான்) எங்களை வழியனுப்ப, வெளிநாட்டுப் பாதுகாப்பை வழங்குகிறார்கள். தாய்நாட்டில் உயிர்வாழ அந்நிய பாதுகாப்பு. அதிலும் எனது நோர்வேஜிய நண்பி கேட்ட கேள்வியையும் அதற்கு நான் அளித்த பதிலையும், யாழ்ப்பாணத்திற்குள்ளேயே தனது வாழ்வைக் குறுக்கிய அக்காவால் புரிய முடியவில்லை. "இந்தச் சூழலில் நீ, உன்னை இந்த இடத்தில், இப்போது எப்படி உணர்கிறாய்?" இது நண்பியின் கேள்வி. "நோர்வேயில்விடக் கூடுதலாக நான் இப்போது அந்நியனாக இருக்கிறேன்" இது நான்.

கொழும்பில் தமிழர் படும் கஷ்டங்களைவிட, யாழ்ப்பாணத்தில் இருந்து விரட்டப்பட்ட முஸ்லிம்களின் பாடு பெரும் கஷ்டம். தாங்கள் கலைக்கப்பட்ட கொடுமையான முறையினையும், தாம் எதுவுமே எடுத்துவர அனுமதிக்கப் படாததையும் அழுகையினூடே சொல்கிறார்கள். இதில் சிலர் என்னை மிகச் சிறு வயதிலிருந்தே அறிந்தவர்கள். தாங்கள் கலைக்கப் பட்டபோது வெவ்வேறு இடங்களில் சோதனை செய்யப்பட்டதையும், சிறுகுழந்தைகள் போட்ட சங்கிலியே பறிக்கப்பட்ட விதத்தையும் கூறினார்கள்.

"நாம் என்ன தம்பி செஞ்சோம்? எங்களுக்கு ஏன் இந்த நிலைமை?" என்று தமது கையறுநிலையை எனக்கு வெளிப்படுத்தினர். யாழ்ப்பாணத்தில் பெரிய நகைக் கடைகார முஸ்லிம்கள், கொழும்பு

www.tamilarangam.net

றோட்டில் நகைத் தரகர்களாகவும், சாதாரண முஸ்லிம் கூலித் தொழிலாளர்கள் றோட்டில் பிச்சை எடுக்கும் நிலையிலுமே கொழும்பில் வாழ்கிறார்கள். என் கண்முன்னேயே நன்றாக வாழ்ந்தவர்கள் என்னிடமே காசு இரந்தார்கள்.

"இவர்கள் என்ன பாவம் செய்தார்கள்?" என அக்காவைக் கேட்டதற்கு "முஸ்லிம் ஆட்கள் பெரிய ஆயுதங்கள் வைத்திருந்தவங்களாம்" என்றார். "யாழ் பல்கலைக்கழகம் போன்ற பெரிய அமைப்புகள் இதற்கெதிராக ஏன் ஊர்வலம் போகவில்லை என்ற எனது கேள்விக்கு, ஒருமாதிரிச் சிரிப்புடன் வந்த "யாருக்கெதிராக?" என்ற அக்காவின் பதிலுடன் எங்கள் சம்பாஷணை முடிந்தது.

ஆயினும் நான் சந்தித்த பல சாதாரண தமிழர்கள் (எனது அக்கா உட்பட) புலிகளை மிக நேசிக்கிறார்கள். இவர்களுடனான சந்திப்பில் சில "சிறு ஆழமான கேள்விகளை" ஒருவர் தவிர்ப்பின், மிகப் பெருமளவிலான தமிழர்களின் ஆதரவு இன்று களத்தில் இவர்கள் உயிரைக் காக்கும் புலிகளுக்கே என்பதை இலகுவாக உணரலாம்.

மனிதம்

இருமாத இதழ். தொடர்புகள்: Postfach 12/ 3000 Bern 11/ Switzerland.

சரிநிகர்

இருவார இதழ். இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் வெளியீடு. தொடர்புகள்: சரிநிகர், 18/2, அலோசாலை/ கொழும்பு 03.

முஸ்லிம்கள்கூட புலிகளின் மீதான தமது கோபத்தை வெளிக்காட்டவில்லை. பெரும்பாலும் எல்லா முஸ்லிம்களும் (கொழும்பில் பொருளாதார ரீதியில் ஆழமாகக் காலூன்றியவர்கள் தவிர) யாழ் செல்வதையே விரும்புகிறார்கள்.

"பெடியள் கடல்ல வந்தா உவங்கள் (அரச கடற்படை) பறந்திடுவாங்கள்" என்று கிளாலிப் பிரயாணிகளும் வியாபாரிகளும் பெருமிதம் அடைவது தொடங்கிப் புலிகளை நேசிப்பதை மலையக மக்களிலும் அவதானித்தேன். "மக்கள் குரல்" (கொழும்புத் தமிழ்க குழு ஒன்றின் வானொலி) தொடங்கியதும் உடனே வானொலியை நிறுத்தலை மலையக நண்பர்கள் வீட்டில் அவதானித்தேன். "புளுகர்கள்", "பொய்யர்கள்", "அரசாங்கக் காசுக்காகத் தமிழற்ற மானத்தை விக்கிறாங்கள்" எனப் பல வகையில் கொழும்புத் தமிழ்க் குழுக்களுக்கு மலையக, யாழ் மக்கள் புகழாரம் சூட்டுகிறார்கள். ஜானகிபுர புலிகளால் தாக்கப்பட்டபோது எல்லாத் தமிழர்களிடையேயும் உள்ளூர ஒரு களிப்பு உருவாவதை அவர்கள் மறைக்கவில்லை.

தமிழர்களின் புலிகள் தொடர்பான நேசம், பெருமிதம் மட்டுமல்ல, சிங்களவர் மத்தியிலும் புலிகளால் தமிழர் தொடர்பான அபிப்பிராயம் மாறியிருப்பதை அவதானித்தேன். "வீணாக அங்கயும் இங்கயும் பொடியள் சாகிறதுதானே, பிரச்சனையைப் பேசித்தான் தீர்க்கவேண்டும்" எனும் சிங்களக் குரல்கள் கொழும்பில் மட்டுமல்ல, ஹபறணைக் காட்டிலும் ஒலித்தன. புலிகளை ஆயுதபலத்தால் வெல்லமுடியாது எனும் அபிப்பிராயம் சிங்கள மக்கள் மத்தியில் பரவலாக உண்டு. முன்பு "கொட்டியா" (புலி) என்று பகிடி பண்ணிய சிங்கள மக்கள் கொட்டியா என்பது பகிடிக்குரிய விடயமல்ல என்பதைப் புரிய

www.tamilarangam.net

*இவை ஒரு தனிநபரான எனது அனுபவங்கள். இவை பொதுமைப்படுத்தக் கூடியனவா என்பது தெரியவில்லை. இந்த அனுபவங்கள் ஆய்வுகளோ ஆய்வின் அடிப்படையிலான முடிவுகளோ இல்லை.*

ஆரம்பித்திருக்கிறார்கள். தமிழர்கள் புலிகளை நேசிக்கிறார்கள் என்பதையும் உணர்கிறார்கள்.

களுவாஞ்சிக்குடி, கல்முனைத் தமிழ் இளைஞர்களுடன் கதைத்தபோது முஸ்லிம் ஊர்காவற் படையால், ஜிகாத்தால் கிழக்கில், குறிப்பாக அம்பாறை, களுவாஞ்சிக்குடி, கல்முனைப் பகுதிகளில் இளம் தமிழ்ப் பெண்கள் பாலியற் பலாத்காரத்துக்கு உட்படுத்தப் பட்டதையும், பல நூறு இளைஞர்கள் கொல்லப்பட்டதையும் கூறிக் கொதித்தார்கள். அவர்களது தகவற்படி, பள்ளிவாசலில் பல தமிழ்ப் பெண்கள் பாலியல் வதைக்கு உள்ளாக்கப் பட்டுள்ளனர். என்னுடன் கதைத்த நண்பர் உயிர்காப்பதற்காகத் தண்ணீர்த் தொட்டியில் கிடந்திருக்கிறார். அவரது கண்முன்னே அவரது தாயார் கேவலமான முறையில் இம்சைப்படுத்தப் பட்டிருக்கிறார். "இலங்கையில் தமிழர் பிரச்சனை தீர்ந்தாலும், தமிழ் – முஸ்லிம் மக்களது பிரச்சனை தீராது" என்ற அவரது குரல், கிழக்கில் எவ்வளவு தூரம் தமிழ் முஸ்லிம் உறவு புரையோடிப் போயுள்ளது என்பதை எனக்கு உணர்த்தியது. "எப்படி இருந்தாலும் வடக்கில் முஸ்லிம்களைக் கலைத்தது பிழைதானே?" என்றேன். "கலைச்சதா? அவங்களை அங்கேயே கொன்றிருக்க வேணும்" எற்ற கிழக்கு இளைஞர்களது கர்ச்சனையுடன் எமது கலந்துரையாடலில் இருந்து பின்வாங்கிவிட்டேன்.

தமிழர்கள் கொழும்பில் 24மணிநேரமும் தம்மை அடையாளப்படுத்த, அடையாள அட்டையுடனும், பொலிசில் பதிந்த துண்டுடனும் திரியவேண்டிய கட்டாய விதி. எனது பங்கிற்கு நானும் வெளிநாட்டில் காவவேண்டிய கடவுச்சீட்டை உள்நாட்டிலேயே காவினேன். அது பெரிய பாதுகாப்பு அல்ல, ஆனால் அடையாளப்படுத்த ஏதும் இல்லாவிடில் அதுவே தமிழர்களுக்குப் பெரிய ஆபத்து. அப்படியிருந்தும் நான்கு தடவைகள் கைது செயயப்பட்டேன். என் அதிர்ஷ்டம், சிறையில் அடைபடாது வீதியிலேயே விடுவிக்கப் படுகிறேன்.

ஒரு தடவை, புகையிரத நிலையத்தின்முன் பிடிபட்ட என்னை அவர்கள் சிறிது தூரம் கொண்டு சென்றபின், எனது நோர்வேஜிய விசாவினதும், நான் தங்கியிருந்த வீட்டின் கடிதத்தினதும் (நான் தங்கியிருந்தது அரச பயங்கரவாதம் புரியும் அதிகாரி ஒருவரது வீட்டில்) சக்தியால் விடுவிக்கப் படுகிறேன். எனது கடவுச்சீட்டில் பிறந்த இடம் யாழ்ப்பாணம் என்றிருந்ததும் என்னை ஓரமாக நிறுத்துகிறார்கள். பல கேள்விகள் என்னைப் பயங்கரவாதியாக ஏற்றுக் கொள்ளும்படி நிர்ப்பந்திக்கின்றன. பல கேள்விகளுக்குத் தந்திரமான பதில்களால் தப்பிக்கிறேன். இறுதியாக நான் இருந்த வீட்டுக்காரரின் தலையீட்டினால் விடுதலையாகிறேன். புகையிரத நிலையத்தின்முன் பிடிபட்டதை என் நண்பர்களுக்குக் கூறினேன். அவர்கள் நான் மிக அதிர்ஷ்டசாலி என்கிறார்கள். யாழ்ப்பாண முஸ்லிம் ஒருவர் கொழும்பு புகையிரத நிலையத்தில், தனக்குத் தெரிந்த யாழ் தமிழர்கள் பலரைப் புலிகளெனக் காட்டிக் கொடுப்பதாக அறிந்ததாகக் கூறுகிறார்கள்.

(வரும்)

www.tamilarangam.net

# அடோனிஸ்

## முற்றுகையிடப்பட்ட பெய்ரூத்தின் நாட்குறிப்பு

அலி அஹமட் ஸாஇட் (Ali Ahmed Sa-id) எனும் இயற் பெயரையுடைய அடோனிஸ் ஸிரியாவில் காஸ்யுமுன் கிராமத்தில் 1930ம் ஆண்டு பிறந்தார். 1956ல் லெமுனானிற் குடியேறி அதன் பிரஜையானார். மாவாகிF எனும் செல்வாக்குடைய கலாசார ஏட்டைத் தொடக்கி அதன் ஆசிரியராக இருந்த அடோனிஸ் அரபுப் பரீட்சார்த்தக் கவிதையின் முன்னோடிகளுள் ஒருவர். இவரது கவிதைத் தொகுதிகள் ஐந்தும், மரபுவழி அரபுக் கவிதைகளின் விமர்சன ரீதியான தொகுப்பும், கவிதை ஆய்வுநூல்கள் பலவும் மொழிபெயர்ப்புகளும் அரபுக்கவிதைக்கு இவரது கொடைகள். கடந்த வருடம் இவரது பெயரும் இலக்கியத்திற்கான நோபற் பரிசுக்குப் பிரேரிக்கப்பட்டிருந்தது. இங்கு தமிழாக்கப் பட்டுள்ள அவரது கவிதைகள் "பாலை" என்ற ஆக்கத்தினின்று ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கப்பட்டு Victims of a map எனும் தொகுதியிற் பிரசுரமானவை. ஆங்கில மூலம் தமிழ்ப்படுத்தியவர் மணி. இவற்றின் முதலிரு பகுதிகள் கடந்த இதழ்களில் வெளியாகியிருந்தன.

(முன்தொடர்)

23.

மரங்கள் விடைகூற வளைவன
மலர்கள் விடைகூற விரிந்து சுடர்ந்து தம் இலைகளைத்
தாழ்த்துவன
மூச்சுக்கும் பேச்சுக்குமிடையிலான நிறுத்தல்கள் போன்ற
வீதிகள் விடைகூறுவன
மணல் பூண்ட ஒரு உடல் விடைகூற ஒரு வெட்டை
வெளியில் விழுகிறது
மையை நேசிக்கும் காகிதங்களும் அட்சரவரிசையும்
கவிஞர்களும் விடை கூறுவன
கவிதையும் விடைகூறுகிறது

24.

காற்றில் உள்ள
கொலைஞன்
நகரின் புண்ணில் நீந்துகிறான்
நமைச் சூழும் அனைத்தையும்
தனது பேராற்
தனது குருதிசொட்டும் பேராற்
குலுக்கும் வீழ்ச்சியே அப் புண்.
வீடுகள் தம் சுவர்களின் நீங்குகின்றன
நான்
நானல்லன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

25.
புத்தகத்தின் பக்கமொன்றிற்
குண்டுகள் தம்மைக் காண்கின்றன
தீர்க்கதரிசனமுள்ள வாக்கியங்களும்
பண்டைய ஞானமும் தம்மைக் காண்கின்றன
மாடங்கள் தம்மைக் காண்கின்றன
கம்பள வார்த்தைகளின் இழைகள்
நினைவு ஊசியூடு
நகரின் முகத்தின்மீது செல்கின்றன

26
ஒரு தாரகை குருதியில் அமிழ்ந்தது -
தனது நண்பர்களின் காதிற் குசுகுசுத்துப் பேசி
ஒரு சிறுவன் சொன்ன குருதி.
வானில் எஞ்சியுள்ளவை
தாரகைகள் எனப்படுஞ் சில பொத்தல்களே.

27
இப்பாதையிற்
கரிதாகப் பிறந்த பகலின் ஒளியே இரவு
மன இருளி
சூரிய ஒளியும் மெழுகுதிரி வெளிச்சமும் ஒன்றேதான்

28
வயல்களில் எழுதப்பட்டுப் பருவங்களாற்
கூறப்பட்டதைச்
சொல்லலாகாதெனச் சூரியனை நம்பச் செய்வது
தவறு

29
இரவு இறங்கி வருகிறது (மையிடம் அவன் அளித்த
காகிதங்கள் இவை - மீளாத காலையின் மை)
இரவு இறங்கி வருகிறது (என்றுமே வராத
காதலனின் மஞ்சம்)
இரவு இறங்கி வருகிறது/ நிசப்தம் (முகில்கள். புகை)
இரவு இறங்கி வருகிறது (எவரதோ கைகளில்
முயல்கள்? எறும்புகள்?)
இரவு இறங்கி வருகிறது (கட்டிடச் சுவர்
குலுங்குகிறது. திரைகளனைத்தும் ஒளிபுகவிடுவன)
இரவு இறங்கி வருகிறது. செவிமடுக்கிறது
(தாரகைகள் செவிடானவையென இரவு அறியும்.
கிளைகளிடங் காற்று உரைத்த எதுவுமே சுவரின்
மறுமுனையில் நிற்கும் மரங்கட்கு நினைவிராது)
இரவு இறங்கி வருகிறது (யன்னல்களிடங் காற்றுக்
குசுகுசுக்கிறது)
இரவு இறங்கி வருகிறது (ஒளி ஊடுருவுகிறது.
அயலவரொருவர் அம்மணமாய்க் கிடக்கிறார்)
இரவு இறங்கி வருகிறது (இருவர். ஆடையைப்
பிடிக்கும் ஆடை - யன்னல்கள் ஒளிபுகவிடுபவை)
இரவு இறங்கி வருகிறது (இது ஒரு நப்பாசை:
காதலர் எப்போதும் எதைப்பற்றி முறையிட்டனரோ
அதைப்பற்றித் தனது காற்சட்டையிடம் நிலவு
முறையிடுகிறது)
இரவு இறங்கி வருகிறது (வைன் நிரம்பிய சாடியுள்
அவன் இளைப்பாறுகிறான். நண்பர்கள் இல்லை,
ஒருவன் தனியே தன் கிண்ணத்துட் புரள்கிறான்)
இரவு இறங்கி வருகிறது (சிலந்திகள் சிலவற்றைச்
சுமந்து. வீடுகட்கு மட்டுமே தொல்லை தரும்
பூச்சிகள் பற்றிக் கவலையின்றி/ ஒளியின்
அறிகுறிகள்: ஒரு தேவதையின் வருகை
ஏவுகணைகளோ இன்றேல் ஒரு வரவேற்போ? நமது
அயற்பெண்கள் தலயாத்திரை சென்றுள்ளனர்/
குறைந்தளவு மெல்லியவராய் மேலும்
அகம்பாவிகளாய் மீள்வர்)
இரவு இறங்கி வருகிறது (நாட்களின்
மார்பகங்களிடேயே நுழைகிறது/ நமது
அயற்பெண்களே எனது நாட்கள்)
இரவு இறங்கி வருகிறது (அந்த ஸோஃபா /அந்தத்
தலையணை; இதுவொரு சிற்றொழுங்கை, இது ஒரு
இடம்)
இரவு இறங்கி வருகிறது (நாம் என்ன தயாரிப்போம்?
வைன்? மாமிசமும் பாணும் சொதியும்? தன்
வயிற்றின் ஊண் விருப்பை இரவு மறைக்கிறது)
இரவு இறங்கி வருகிறது (சொற்ப நேரம் தனது
நத்தைகளுடனும் அறிந்திராதவொரு
மண்ணினின்று வந்த வினோதமான
புறாக்களுடனும் பல்வேறு விலங்கினங்களதும்
இனவிருத்தி பற்றிய நூலிற் குறிப்பிடப்படாத
பூச்சிகளுடனும் விளையாடுகிறான்)
இரவு இறங்கி வருகிறது (இடி - அல்லது
தேவதைகள் குதிரைமீது வரும் ஒலியா?)
இரவு இறங்கி வருகிறது (அவன்
முணுமுணுக்கிறான், தனது கிண்ணத்துட்
புரண்டவாறு)

(வரும்)

www.tamilarangam.net




□□

# மாவீரர் தினம்

□□

# ஒளி விழா

**இந்தக் கடுங் குளிரிலும் ஒஸ்லோத் தமிழர்கள் சுறுசுறுப்பாகத்தான் இருந்தார்கள். தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினால் நவம்பர் 28 ம்திகதி நடாத்தப்பட்ட மாவீரர் நாளும், டிசம்பர் 26ம் திகதி ஒஸ்லோ கத்தோலிக்கத் தமிழ் இளைஞர் ஒன்றியம் நடாத்திய ஒளி விழாவும் வெகுசிறப்புடன் நடந்தேறின. இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் மண்டபம் நிறைந்த சனத்திரள்!.**

## மாவீரர் நாள்

ஒரு சிறப்புரை, இரண்டு நாட்டிய நிகழ்வுகள், ஒரு ஈழத்துக் குறும்படம (பொ.தாசனின் தாயகக் கனவு), ஒரு நாடகம் (சர்வேந்திராவின் "யாழ்தேவி") என்று சுருக்கமான, ஆனால் கச்சிதத்துடனான (ஏறத்தாள) இரண்டரை மணித்தியால நிகழ்ச்சிகளை இவ்வாண்டு மாவீரர் நாள் விழா கொண்டிருந்தது. ஒத்திகை போதாது என்று எண்ண வைத்த முதலாவது நாட்டிய நிகழச்சியையும், "தியாகம்" என்ற கருத்தை இந்தியக் கலாச்சாரமே ஈழத்து மனிதர்களுக்கு கொடுத்தது" என்ற ரீதியிலான , எரிச்சலூட்டிய், பேராசிரியர் Peter Shalkன் சிறப்புரை தவிர ஏனைய நிகழ்ச்சிகள் சிறப்பாக இருந்தன. மாவீரர் நாள் போன்ற உணாச்சிபூர்வமான நாட்களில் இறக்குமதி செய்யப்பட்ட சிறப்புரைகள் பொருத்தமில்லை என்றே தோன்றியது. சில ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டிலிருந்து சில சகிக்கமுடியாத, தமிழ்நாட்டுக்கு மட்டுமே பொருத்தமான சினிமாத்தனமான வீரவசனங்கள சிறப்புரைகளாக இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. தேசத்திற்காக தங்கள் உயிர்களைத் துறந்த மாவீரர்களை நினைவுகூரும் இந்த நாளில், எமது தேசத்தை, போராட்டத்தை மானசீகமாக உணரமுடியாத இந்த இறக்குமதிப் பேச்சாளர்கள் வேண்டாம். அழகு தமிழ் இல்லாவிடினும் நம்மவர் ஒருவரே வேண்டும்!

### "யாழ்தேவி"

ஒஸ்லோவில் நாடக முயற்சி என்றால் சர்வேந்திராவைத்தான் குறிப்பிடவேண்டும். ஊரில் நாடக முயற்சிகளுடன் தொடர்புடைய சிலர் இங்கே வாழ்கின்ற போதிலும் குரோணர்களும், சோம்பலும் அவர்களை முடமாக்கி விட்டன. கடந்த முன்றாண்டுகளுக்குள் ஏழெட்டு நாடகங்களை அரங்கேற்றிய சர்வேந்திராவின் நாடக முயற்சிகள் வெற்றிகளையும், தோல்விகளையும், பாராட்டுதல்களையும், விமர்சனங்களையும் பெற்றிருக்கின்றன. ஒரு தேர்ந்த நெறியாளராக தன்னை நிருபித்துள்ள இவர் பிரதியாக்க முயற்சியில் ஒரு குறிப்பிடத்தக்க வெற்றியை இன்னும் காணவில்லை என்றே சொல்ல வேண்டும். ஒஸ்லோவில் நாடகப் பரவசத்தை ஏற்படுத்திய "சக்தி பிறக்குது" (மௌனகுரு), உள்ளத்தைத் தொட்ட "எந்தையும் தாயும்", (சண்முகலிங்கன்), "அபஸ்வரம்" (சுந்தரமுர்த்தி) போன்ற வெற்றிகரமான நாடகங்களை நெறிப்படுத்திய சர்வேந்திரா தனது சொந்தப் பிரதிகளை வைத்து தயாரித்த நாடகங்களில், "யாழ்தேவி " யைத் தவிர, வெற்றியைக் காணவில்லை. அவரது பிரதிகள் விழாத் திகதியை மனதில்கொண்டு அவசர அவசரமாகத் தயாரிக்கப்பட்டதாகவிருக்கும். அதனால் கட்டுக்கோப்பற்ற தான்தோன்றித்தனம் பிரதியெங்கும் தெரியும். சலிப்பூட்டும் அளவுக்கு அதிகமான நிகழ்த்திக் காட்டல் உத்திகள், எப்போதும் அதிக எண்ணிக்கையிலான பாத்திரங்கள், மேடை வெளிச்சம், பின்னணி இசைமீது கவனமின்மை என்பன சர்வேந்திராவின் பலவீனங்கள் எனலாம்.

ஆனால் "யாழ்தேவி" சர்வேந்திராவின் நாடகங்களைப் பொறுத்தவரை ஒரு பெரிய மாறுதல் என்று குறிப்பிட்டாக வேண்டும். ஒரு துல்லியமான கருப்பொருளை, செய்தியைக் கொண்டிருக்கவில்லை என்றபோதிலும், சிங்கள பேரினவாத அரசின் கோரப் பற்களையும், தமிழ்

www.tamilarangam.net

மக்களின் நியாயமான போராட்டத்தை அரசினால் நசுக்கவிட முடியாது என்ற உணர்வினையும் குழப்பமில்லாத அரங்க வெளிப்பாடாக கொணர்ந்த ஒரு நாடகம் அது. சிங்கள அரசியல்வாதிகள், பத்திரிகைச் சாதனங்கள், பௌத்த மதவாதிகள், ஆயுதப்படையினர் என்போர் தமிழர்களை அழித்தாக வேண்டும் என்று திட்டமிட்டு, பெருத்த ஆரவாரத்துடன் ஆரம்பித்த ஒரு படையெடுப்பு (யாழ்தேவி), எப்படி முறியடிக்கப்படுகின்றது என்பதே நாடகம் காட்டிய விடயம். எனவே இதில் என்ன இருக்கிறது? வெறும் பிரச்சாரம்! என்று அலுத்துக் கொண்ட ஒரு விமர்சக நண்பர்களும் உண்டு. பிரச்சாரமும் அதன் நோக்கம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் ஒரு அரசியல் நாடகம் , அதன் பின்னணியிலான அரசியல் நிலவரங்களை, சூழ்நிலைகளை மனதில் கொண்டவண்ணம் ரசிக்கப்படும்போதுதான் அந்நாடகத்தைப் புரிந்துகொள்ளலாம். " தமிழர் பிரச்சினை வெறும் ஒரு பயங்கரவாதப் பிரச்சினை மட்டுமே; அதற்கு இராணுவம் மட்டுமே சிகிட்சையளிக்கலாம்" என்ற கொச்சையான இனவாத அரசியல் சூழ்நிலை கவனத்திற் கொள்ளப்படவேண்டும்; அத்துடன் வெளிப்படையான இந்த இனவாத அணுகுமுறைக்கு தமிழர்களின் முதலாவது மறுப்புத்தான் இந்த யாழ்தேவி முறியடிப்பு என்பதை மறந்துவிட முடியாது. எமது போராட்ட வரலாற்றின் புதிய அத்தியாயம் ஒன்று இந்த யாழ்தேவி முறியடிப்பிலிருந்து ஆரம்பமாகிறது. அதனால் அது ஏனைய படையெடுப்புக்களை, வெற்றிகளைவிட (உதாரணமாக பூநகரி வெற்றியைவிட) முக்கியமானது. அதனால் அது பாடப்படவேண்டியதொன்றாகிறது; எழுதப்பட வேண்டிய ஒன்றாகிறது; ஆடப்படவேண்டியதொன்றாகிறது. அதனால் சர்வேந்திராவின் "யாழ்தேவி"யும் கவனிக்கப்பட வேண்டிய ஒரு நாடக முயற்சியாகிறது.

இந்தமுறை சர்வேந்திராவின் நாடகத்தில் பின்னணி இசையும் மேடை வெளிச்சமும் குழறுபடி செய்யாமல் நேர்த்தியாக அமைந்து ஆச்சரியப் படுத்தியது. எவரைச் சொல்வது, எவரை விடுவது என்று திணறவைக்கும் திறமைசாலிகளை நடிகர்களாகக் கொண்டிருப்பது சர்வேந்திராவின் பெரிய பலம். கூத்துப் பரிச்சயமுள்ளவர்களின் பங்களிப்பைத் தெரியவைக்கும் பிசிறில்லாத அசைவுகள்; அனுபவமுள்ள நெறியாள்கையின் கட்டுக்கோப்பு என்பன பாராட்டப்பட வேண்டிய அம்சங்கள். குறைபாடுகள் மன்னிக்கப்படக் கூடியதாகவே இருந்தன. சர்வேந்திராவின் ஏனைய நாடகங்களிலும் தெரிந்த சில குறைபாடுகள் இதிலும் இல்லாமலில்லை. பாடல்மெட்டுக்குள் பலவந்தமாக திணிக்கபட்ட சொற்கள், அவசியமில்லாமல் கிறிஸ்த்தவ பிரார்த்தனைப் பாணியிலான நிகழத்திக் காட்டல்கள் போன்றவைகள் தவிர்க்கப்படவேண்டும். இந்த நாடகத்துக்குக் கிடைத்த கணிசமான வரவேற்பை வைத்துக் கொண்டு தனது அடுத்த நாடகத்தையும் இதே மாதிரியானதாக தயாரித்துவிடக்கூடாதே என்ற கவலையும், ஒரு அற்புதமான நாடகமாக இல்லாவிட்டாலும்; முழுதாக இருந்து பார்க்கவைத்த ஒரு நல்ல நாடகத்தைப் பார்த்த உணர்வும் தோன்றியது.

## "தாயகக் கனவு"

சில சமயங்களில் ஒரு சில கோடுகளும், வண்ணத் தெளிப்புக்களும்கூட ஒரு நல்ல ஓவியமாய் அமைந்து விடுவது உண்டல்லவா! அதுமாதிரியே இந்த இருபது இருபத்தைந்து நிமிட ஈழத்துக் குறும்படத்தின் ஒரு சில பிரேம்கள் (Frames) இதயத்தை உலுக்கிவிடுகின்றன.. இந்த நாளில், இந்த நேரத்தில் நான் என் தேசம் விடுதலை பெறுவதற்காக நான் இறந்து போவேன் என்று தெரிந்துகொண்டு அந்த நாள் வரை குடும்பத்துடனும், நண்பர்களுடனும் மகிழ்ச்சியுடன் வாழ நினைக்கும் ஒரு (தற்கொலைப்) போராளி இளைஞனைப் பற்றியதே இக் குறும்படம். மண்ணெண்ணைகூட கிடைக்காத தேசத்தில் தயாரிக்கப்பட்ட படம். எனவே, ஒலிப்பதிவுச் சீரின்மை, தொகுப்பில்(Editing) சிரத்தையின்மை, போன்ற தொழில்நுட்பக் குறைபாடுகளை விமர்சித்தல் நியாயமில்லை. ஆனால் படத்தின் கதையமைப்பு, பாத்திரங்களின் தன்மை கதொடர்பாக சில விமர்சனங்களை முன்வைக்கலாம் என்று தோன்றுகிறது. நடிப்பினைப் பொறுத்தவரை போராளிகளே முக்கிய நடிகர்களாக பங்கெடுத்தமையால் அவர்களின் நடிப்பு வெகுதத்ருபமாகவே இருந்தது. எனினும் பெற்றோர், சகோதரிகள் போன்ற துணைப்பாத்திரங்களின் நடிப்பு மிகவும் செயற்கையாகவிருந்தது. வசனங்கள் இயல்பாக இல்லை. ஒளிப்பதிவின் அழகிற்கேற்ப காட்சிகளில் சீர் இல்லை. போராளியின் (கதாநாயகனின்) குடும்பத்தின் மீதான நேசம் முக்கியத்துவப்படுத்தப்படாதது கதையமைப்பில் காணப்பட்ட ஒரு பெரிய குறைபாடாகும். தனது இறுதி ஆசையாக இயக்கத் தலைவரைச் சந்திக்க விரும்பும் போராளி பெற்றோரைச் சந்திப்பதில் ஆர்வம் காட்டாததுபோல் சித்தரித்திருப்பது ஒரு போராளியின் மனித உணர்வுகளை கொச்சைப்படுத்துவது போலாகும். கதைத் தயாரிப்பிலும் காட்சியமைப்புக்களிலும் திட்டமின்மை தெரிந்தது. எனினும் இந்தக் குறைபாடுகளை புறக்கணிக்க வைத்து, கண் கலங்க வைக்கிறது யதார்த்தம்!

## ஒளி விழா

நத்தார்தின விழா!. எனவே இம்மாதிரியான விழாவிற்குரிய நடனங்கள், பாடல்கள் என்று சில சிறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இவைகள் தவிர குறிப்பிட்டு, ஏதாவது

www.tamilarangam.net

சொல்லித்தீர வேண்டும் என்று தோன்றிய நிகழ்ச்சிகள் மூன்று. அன்ரனி தியோபிலிஸின் "புகலிடம் தேடியே!" என்ற நாட்டிய நாடகம், ஜோன்சனின் "பேதங்கள் இல்லையடி பாப்பா!" என்று இன்னொரு நாடகம், மூன்றாவதாக குட்டி மாஸ்டரின் வெண்பனிச் சிந்து என்ற இசைநிகழ்ச்சி.

## "புகலிடம் தேடியே!"

நாடகத்தின் பெயர் ஏதோ தமிழர்களின் சமகாலப் பிரச்சினைப் பற்றி நாடகமாக இருக்கலாம் என்ற எதிர்பார்ப்பைக் கொடுத்தது. ஆனால் யேசுவின் பெற்றோர் புகலிடம் தேடியலைந்ததையே சொல்லவருகிறார்கள் என்பதை அறிந்ததும் ஒரு மெல்லிய ஏமாற்றம்; என்றாலும் பார்க்கலாம் என்ற நம்பிக்கையை முதலாவது காட்சி தந்தது. ஆனால் அடுத்தடுத்த காட்சிகள் வெறும் சிறுமியர் நடனமாகிப்போனது ஏமாற்றத்தையே தந்தது. பின்னணியில் பிரதியை வாசித்தவர்தான் பார்க்கின்றவர்களுக்கு கொஞ்சம் விளங்கட்டுமே என்று மனமிரங்கினார். பாடல்களை இசையமைத்துப் பாடியவர் வாசுகி ஜெயபாலன். ஆனால் அவர் பாடியது எதுவுமே புரியவில்லை. தவிர ஒரு நாட்டிய நாடக நிகழ்ச்சிக்கு பாடல் வரிகள் நிதானமாக, குறைந்தது இரண்டு தடவையாவது மீளப்பாடுதல் (Repeat) அவசியம். சங்கீதக் கச்சேரியில் பாடுவது போலல்லாமல் சற்று மெல்லிசைப் பாணியில் அமைந்த மெட்டுக்களே இந்த மாதிரி நிகழ்ச்சிக்கு பொருத்தமானது. நாட்டியங்களை நெறிப்படுத்தியவர் ஒரு பரதநாட்டியத்துக்கும், ஒரு நாட்டிய நாடகத்துக்கும் வேறுபாடுகாண முயலவில்லை. ஒஸ்லோ நாடக முயற்சிக்கு ஒரு புதியவர், அன்ரனி தியோபிலிஸ், அறிமுகமாகியுள்ளார். துரதிர்ஷ்ட வசமாக அவரது பிரதிபற்றி கருத்துச் சொல்லமுடியவில்லை. ஒரு வார்த்தைகூட புரியவில்லை. ஒஸ்லோ நாடக மேடைக்குத்தான் இவர் புதியவர்; ஆனால் ஊரில் நமது பிரபல நாடகக் கலைஞரான பாலேந்திராவுடன் பணியாற்றி அவரது நாடகங்களில் பங்கேற்றவர். அரங்கத்தில் மின்விசிறிகளின் சத்தம்கூடத் தனது நாடகத்தைப் பாதித்துவிடும் என்று பிடிவாதம்பிடிப்பவர் பாலேந்திரா. அன்ரனி தியோபிலிஸ் பின்பற்ற வேண்டியதுவும் அதுவே. "ஏதோ பார்த்துச் செய்யுங்கள்" என்று மற்றவர்களிடம் கூறிவிட்டு ஒதுங்கிக்கொண்டார் போல் தெரிகிறது. அடுத்த தடவை இக்குறைபாடுகளிலிருந்து விலகி, ஒரு நல்ல படைப்பை இவரிடமிருந்து நாடக ஆர்வலர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

## "பேதங்கள் இல்லையடி பாப்பா!"

ஒரு வித மர்ம நாடகம். உலகம் வருகிறது! ஏகாதிபத்தியம் தொப்பியுடன் வருகிறது. "எத்தனை இரத்தம் எத்தனை இரத்தம்" என்றபடி இனவாதம்! வெள்ளைச் சேலையுடன் தமிழ்த்தாய்! நாடகம்தான் ஒருமாதிரி இருந்ததே தவிர, நடித்தவர்கள் எல்லோரும் திறம்படச் செய்தார்கள். உரிய பயிற்சியுடன், இவர்கள் எதிர்காலத்தில் சிறந்த நாடகக் கலைஞர்களாக வளர்வதற்கு வாய்ப்புகள் நிறைய உண்டு.

இந்த நாடகத்தைத் தயாரித்தவரும் ஒரு புதுமுகம். ஜோன்சன் என்ற இளைஞர். வரவேற்கிறோம். ஆனால் ஒரு சில விசயங்களை கவனத்தில் கொள்ளுங்கள் நண்பரே! நாடக முயற்சிகளுக்கு ஆர்வம் முக்கியமானதுதான். ஆனால் ஆர்வம் மட்டுமே போதுமானதல்ல. "ப்பூ! நாடகமா? இதென்ன பிரமாதம்!" என்கிற அலட்சியம் மிகவும் பாதகமானது. கற்க வேண்டும்; நிறைய கற்க வேண்டும். நாடகம் பற்றி, உலகம் பற்றி, பிரச்சினைகள் பற்றி நிறைய கற்க வேண்டும். நாடக மேதை இப்சனின் தேசத்தில் வாழ்கின்றோம். இங்கே நிறைய இடங்களில் நாடகப் பயிற்சி நடாத்துகிறார்கள்; அதில் பங்கு பெறுங்கள். நல்ல நோர்வீஜிய, தமிழ் நாடகங்களைப் பாருங்கள்; வாசியுங்கள்விவாதியுங்கள். அதன்பின் படிப்படியாக நாடகத் தயாரிப்பிலீடுபடுங்கள்! நமது இலக்கிய முயற்சிகள் வெறும் பகிடிகளாகவிடக்கூடாது. உங்களிடம் திறமை இருக்கிறது, ஆர்வம் இருக்கிறது; உங்களுக்குத் தேவையானது பயிற்சிக்கான பொறுமையும், நாடக முயற்சிகள் முசுப்பாத்தியான விடயமல்ல என்கின்ற தெளிவும்தான்.

## குட்டி மாஸ்டரின் சபதம்

ஒஸ்லோவில் இசையார்வம் உள்ள தமிழர்கள் "வெண்பனிமீது" (வ.ஐ.ச.ஜெயபாலன்/தவராஜா), "ஓடி வரும் கடலே" (இளவாலை விஜயேந்திரன்/பொன்.சுபாஸ் சந்திரன்) என்ற பாடல்களை மறந்திருக்க மாட்டார்கள். இந்த ரம்யமான பாடல்களை இசையமைத்தவர் குட்டி மாஸ்டர். திறமை மிகுந்த இந்த இசைக்கலைஞர் தனது ஆற்றலை நாசப்படுத்தியே தீருவது என்று சபதம் எடுத்திருக்கிறார். இவரது ஆற்றல்கள் சினிமாப் பாடல்களை மேடைகளில் பாடி கரகோஷங்களைப் பெறுவதில்தான் விரயப்பட்டுப் போகின்றன. திறமையுள்ள கலைஞர்கள் பலர் இவரது குழுவில் இருக்கிறார்கள். இருந்தும் என்ன பயன்? நாங்கள் "சிக்குபுக்கு ரயிலேதான்"பாடுவோம்! விரும்பினால் கேளுங்கள்!" என்று குட்டி மாஸ்டரும் அவரது குழுவினரும் பிடிவாதம் பிடித்தால் நாங்கள் என்ன செய்யலாம்?

புலம்பெயர்ந்து வாழும் நமக்கு சில சந்தர்ப்பங்களும், வாய்ப்புக்களும் உண்டு. இவற்றைப் பயன்படுத்தி நமக்கென்று கலைகள் செய்வோம்!

**-கண்ணன்**

www.tamilarangam.net

வ. ஐ. ச. ஜெயபாலன்


# யானை

ஓநாய் துரத்தும் மான்கிழையாக
உலகெலாம் சிதறித் தொலையுமென்
குடியின்
கடைசி நம்பிக்கைச்
சொற்களிலிருந்து
சிறகை விரித்தது கவிதை.
ஈழநாட்டில் துப்பாக்கிகளிலும்
மேலைநாட்டில் துடைப்பங்களிலும்
தாளமிட்டு
நாமெலாம் அந்தக் கவிதையைப்
பாடினோம்.

ஒடுக்குதல் ஒழிக எனப்
பாடும்போதெலாம்
எம் எழுச்சிப் பாடலை அபஸ்வரம்
கிழித்தது.
விடுதலை என்று பாடும்போதெலாம்
எம் புரட்சிப் பாடலின் சுருதி
குலைந்தது.

யார் சதி செய்பவன்,
யார் எம் கனவினுள் மலத்தை
எறிபவன்
யார் எம் தலையில் மண்போடுபவன்
பார்த்துக் சொல்லென
வானில் பறக்குமெம் கவிதையைக்
கேட்டோம்.

அதுவரை சிறுகுயிலாகப் பறந்தநம்
கவிதை
மலைக்கழுகாகி
வானமிடறச் சிறகை விரித்தது.
சுவர்க்கத்தையும் நரகத்தையும்
தட்டிக் கேட்டது.
"யார் சதி செய்பவன்
யார் நம் தலையில் மண்போடுபவன்"



www.tamilarangam.net

"ஈழத்தமிழர் யானைகள் போல்" என
தேவர்கள் சொன்னார்.
"ஈழத்தமிழர் வலிய யானைகள் போல்" என
அசுரரும் சொன்னார்.
ஆத்திரமடைந்த நமது கவிதைத்
தேவர், அசுரர் முகங்களிலெல்லாம்
வசவுகள் உமிழ்ந்தது.

வீடு திரும்பும் வழியில்
புத்தளக் கரையில் பறக்கும்போது
தற்செயலாக கீழே பார்த்தது.
கீழே பார்த்ததும் ஓவென அழுதது.
தலையிலும் மார்பிலும் மோதி மோதி
ஒப்பாரி வைத்தது.


நமது கவிதை
நமது முகத்தில் சிறகால் அடித்தது
நமது கவிதை
உலக மக்களின் மனதிலும் தைத்தது.

கீழே
புத்தளத்து உப்புக் களரில்
முட்புதர்களிடை நிழல்காணாது
கண்ணீரோடு அலைந்ததெம்குடி.
"முஸ்லிம்" என்று பழித்து
கச்சைத் துண்டையும் பறித்துக்கொண்டு
ஊரைவிட்டு நாமே விரட்டிய
நம்குடி.
○

** ஈழத்தின் வடபகுதியிலிருந்து 199[illegible]ல் தமிழ்ப் போராளிகளால் துரத்தப்பட்ட 70,000 தமிழ்பேசும் முஸ்லிம் மக்கள் புத்தளம் மாவட்டத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.*

## டென்ஷன்

அநாமதேய "ரெலிபோன்" அழைக்கும்
அல்லது கடிக்கும்
திருப்பிக் கடித்தால்...
மொட்டந்தலைச் சண்டியன் வருவான்
காலை தபாலில்
துகிலுரியத் துரியோதனன்.
எட்டநிண்டு சிலபேர் சிரிக்க,
பந்தயங்கட்டப் பலபேர் தங்கள்
கோபக் குதிரையைக் கொண்டே வருவர்.
வாலை முறுக்கி,
வைகுண்டம் வரைக்கும்
ஓட ஓட விரட்டிச் சிரிப்பர்.
முதுகாய்ப் பற்கள்.
பிறகு
பிறகென்ன,
அழுகிய பிணங்களோ மூக்கைப் பொத்தி
"நாறுது நாறுது" என்கும்.
அதிசயமாக.




வயவைக்குமரன்

www.tamilarangam.net

சித்திரகுப்தன்



# எழுந்து வருக!



அவர் இரண்டு தடவை கொலை முயற்சியில் இருந்து உயிர் தப்பினார். அவரையும் அவரது சிந்தனைகளையும் கொலைகாரர்களால் கொலை செய்ய முடியவில்லை. 1980ம் ஆண்டு உலக சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற அடொல்போ பெரே எஸ்க்வீவல்தான் அவர். அவர் மீண்டும் நோர்வே விஜயம் ஒன்றை மேற்கொண்டு இங்கு வந்திருந்தார்.

ஆர்ஜென்டீனாவைச் சேர்ந்த இவர் மனித உரிமைக்காகப் பாடுபடுபவர். ஒரு தடவை இவரை அரசு வீதியில் வைத்து இவரைச் சுட்டது. குண்டை உடலில் தாங்கி உயிர் தப்பினார். மறுமுறை இவரது ஜன்னல் கதவில் பொருத்தப்பட்ட குண்டு வெடித்தும் அவர் உயிர் தப்பினார்.

ஓவியரும் எழுத்தாளருமான அடொல்போ அண்மையில் தனட ஓவியங்களைக் காட்சிப் படுத்தவே நோர்வே வந்திருந்தார். இவரது ஓவியங்களின் கருப்பொருளாக லத்தீனமெரிக்க மக்கள் பற்றியது; அவர்கள் அனுபவிக்கும் வறுமை, துயரம், அடக்குமுறைகள் பற்றியது.

இவருக்கு 1980ல் கிடைத்த நோபல் பரிசுத் தொகை லத்தீனமெரிக்க நாடுகளில் உள்ள பல்வேறு மனித உரிமை அமைப்புகளுக்குப் பிரித்துக் கொடுத்தார். இதன்மூலம் பல அமைப்புகள் மனித உரிமைக்காகப் போராடத் தூண்டுதலாக அமைந்தார்.

ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் பயணம் செய்து பல விரிவுரைகளை நிகழ்த்தித் தனது ஓவியங்களைக் காட்சிக்கு வைத்து அனேக ரசிகர்களைச் சம்பாதித்துள்ளார். இவற்றுக்கு ஏற்படும் செலவுகளைத் தனது தொழில் மூலம் பெறும் பணத்திலேயே தாங்கிக் கொள்கிறார் இவர்.●

www.tamilarangam.net



# மண்மனம்

2 பாகம்

அத்தியாயம் 1

ஆதவன்

அன்று வானம் தெளிவாக இருந்தது. இரண்டு மூன்று நாட்களாக அடைமழை பெய்து ஓய்ந்துவிட்டிருந்தது. ரகுநாதன் சேர்ட்டை மாட்டிக்கொண்டு சலூனுக்குக் கிளம்பினான். அப்பற்றை செத்த வீட்டோடை தாடியும் தலைமயிரும் நல்லா வளர்ந்துவிட்டது. கந்தவனம் மாஸ்டரும் தன் சிறிய தாடியை வழிப்பதற்காகக் குந்தியிருக்கிறார்.

நான் என்ன செய்யலாம்.

வாத்தி கட்டாயம் சில கேள்விகள் கேட்கும்.

அவரது கேள்விகள்.....

உ + ம்:

1. நீர் படிச்சனீர் எல்லே. ஏன் வீணாய் அலைக்கழியுறீர்?

2. தம்பி ரகு, தாடியைக் கனக்க நீளமா வளக்கக்கூடாது. தாடி நீண்டுபோனால் என்ன நடக்கும் தெரியுமோ?

3. அந்தந்தக் காரியங்களை அப்பப்பவே செய்யாமல் இருக்கிற மனிசனை என்னண்டு அந்தக் காலத்திலை கூப்பிட்டவை தெரியுமே?

இதுபோன்ற கேள்விகளைக் கட்டாயம் மாஸ்டர் கேக்கத்தான் போகிறார். பதில்கள் சொல்லும்வரை அறுக்காமல் அவர் விடப்போறதில்லை.

'அறுவை'. இந்தச் சொல்லு எங்கையிருந்து வந்தது? ஒரு ஆள் தனக்குத் தெரிந்ததை மற்றவனுக்குச் சொல்ல முற்படுவது, சொல்லேக்கை, தான் சொல்லுறதை மற்றவன் உன்னிப்பாகக் கேக்கவேணும் எண்டு நினைக்கிறது. மற்றவன், அல்லது மாணவன் அல்லது கேட்பவன்

www.tamilarangam.net

மனமொருமித்துக் கேட்காதுவிட்டால் எதையும் சொல்லமுடியாது. ஆகவே கேட்பவன் எந்தச் சூழலில் இருந்தாலும்... அவனைத் தன்வழி இழுத்துவந்து தான் சொல்ல நினைத்ததைச் சொல்லுதல் வேண்டும் எனும் அவா சொல்பவனுக்கு எழுதல் இயல்பு. இதனை ஏன் அறுவை என்று சொல்லவேண்டும். ஒருவேளை - கேட்பவன் நினைக்கக்கூடும் 'தான் ஏற்கனவே அறிந்த விடயத்தைத்தான் இவர் சொல்கிறார். எனவே எனது நேரத்தை இவர் வீணாக எடுக்கிறார் என்று. அப்படிப் பார்த்தால் புதிதாக எதுவும் சொல்லாதவன் அறுத்துக் கொண்டே இருக்கிறான் என்றல்லவா வரும். கேட்பவன் எல்லாம் அறிந்திருக்கிறான் என்பதை, சொல்பவன் எப்படி அறியமுடியும்? இங்கே ஒரு சமாந்தரமான தளம் வேண்டிக் கிடக்கிறது. அந்தத் தளத்தை அறிவுத்தளம் எண்டு சொல்லலாம். அறிவுத்தளம் சொல்பவனுக்கும் கேட்பவனுக்கும் மட்டுமே உரியது. இந்தத் தளத்திலிருந்து வேறுபடும் ஒவ்வொருவனும் அறுவை என்பதிலிருந்து தப்பமுடியாது.

புதிதாக எதையாவது சொல்லாதவன் அறுத்துக்கொண்டே இருக்கிறான்.

தளங்கள் சமாந்தரமாய் இல்லாதவர்கள் அறுவைக்கு உட்படுகிறார்கள்.

அப்பாடா, இரண்டு முடிவுகளுக்கு 'அறுவை' பற்றிய ஆய்வு ரகுநாதனை இட்டுச் சென்றது.

இன்னமும் திருப்தி வந்தபாடில்லை. ஏதோ ஒன்று தொக்குநிற்பது போல் பட்டது. என்ன அது?

வரலாறு பற்றிப் பேசுபவர்கள் எல்லாம் புதிதாக ஒன்றும் சொல்லவில்லைத்தானே - அவர்கள் ஒரேயடியாய் மக்களை அறுக்கிறார்களா?

"ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை ஆளநினைப்பதில் என்ன குறை?"

எங்கோ ஒரு சுவரில் கிடந்த வாசகம் மூளையுள் திடீரென முகம் நீட்டியது.

வரலாற்றைச் சொல்லியே தன் வாதத்தை நிலைநாட்டும் வாதம் இது!

இதைவிட ஏதும் 'அறுவை' உண்டோ? இந்த மாபெரும் அறுவையிலும்விடக் கந்தவனம் மாஸ்ரரின் அறுவை ஒன்றும் பெரிதல்ல. அத்துடன் கந்தவனத்தார் மண்ணோடு மண்ணாய் ஊறியவர். மாஸ்டர் எண்டாலும் மனங்களுக்காகப் படிச்சவர். சில வாத்திமார்..... தங்கடை தொழிலுக்கே இழுக்காகி.. அரிசிக்காகப் பிச்சைச் சம்பளம் அரசிடம் வாங்கிற அடியார் கூட்டம்.

"எப்பிடி மாஸ்டர் இருக்கிறியள்?" ரகுநாதன் அறுவையைத் தொடக்கினான்.


"தம்பி ரகு! வேலுப்பிள்ளையர் தனக்கென ஒரு இதோட கட்டுப்பாடுகளை வைத்துக்கொண்டு வாழ்ந்தவர். அருமையான மனுஷன். அந்த ஆளுக்கு இப்பிடி நடந்திட்டுது. என்ன செய்யிறது? இந்தச் சண்டை இன்னும் எத்தினை

www.tamilarangam.net

பேரைப் பலியெடுக்கப் போகுதோ ஆருக்குத் தெரியும்? கடவுளே எண்டு எனக்கென்ன குறை. எனக்கு இப்ப பென்சன் வருகுது. ஏதோ சமாளிச்சுக்கொண்டு இருக்கிறன். அப்பப்ப அஞ்சாறு பிள்ளையள் ரியூசனுக்கு வருகுது. அதுகளும் கொஞ்சம் ஏதாவது தருங்கள். காலம் ஓடுது" என்றார் சிறிய பெருமூச்சுடன்.

"அதுசரி, தம்பி, நான் உம்மை ஒரு ரகசியமான வி யம் கேக்கவேணுமெண்டு கனகாலமாய் இருந்தனான். இப்பதான் சான்ஸ் கிடைச்சுது" – இடையில் நிறுத்திவிட்டு அக்கம்பக்கம் பார்த்துவிட்டு..... "நீர் ஒரு கலியாணம் முடிக்கலாந்தானே தம்பி. ஏன் ஏதாவது லட்சியங்கள் வைச்சிருக்கிறீரோ? வயசெல்லே போகுது. அந்தந்தப் பருவங்களிலை அந்தந்த வி யங்கள் நடக்கவேணுந்தானே தம்பி, என்ன வி யம்?" விட்டபாடில்லை.

ரகுநாதன் முகட்டை ஒரு தடவை பார்த்தான். தாடியை ஒரு தடவை தடவினான். சிரிக்க முயன்றான். மாஸ்டரின் கண்களை நேரே பார்த்து உண்மையாகவே இவர் சீரியஸாகத்தான் கேட்கிறாரா என்று பார்த்தான். ஓம், சீரியஸ்தான். ஏதாவது சொல்லவேண்டும். முதலில் விடை அவனுக்குத் தெரிந்தாக வேண்டும். பின்னரே மாஸ்ரருக்கோ மற்றையோருக்கோ சொல்லமுடியும். இந்தக் கேள்வியை அவன் தன்னை நோக்கியே கேட்டான். ஏன் நான் இன்னமும் கலியாணங் கட்டவில்லை? பெண்களில் விருப்பம் இல்லையா? அல்லது 'குடும்பம்' எனும் நிறுவனத்துக்குள் தள்ளப்பட்டுப் பொறுப்புகளைத் தலையில் சுமக்க இன்னமும் பக்குவப் படவில்லையா? அல்லது குடும்பம் ஆகிவிட்டால் 'காதல்' செத்துவிடும் என்று பயப்படுகிறேனா? அல்லது செக்ஸ், காதல், கலியாணம், பார்ட்னர் இந்தச் சொற்களுக்கும் இவை தரும் உணர்வுகளுக்கும்



www.tamilarangam.net

இடையே பாரிய இடைவெளி இருக்கிறது; இவை யதார்த்தம் இல்லை என்கிறேனா? ஏன் உலகத்துடன் அதன்வழி இயங்கமுடியவில்லை? எனக்கென ஒரு லட்சியத் தேவதைக்காகக் காத்திருக்கிறேனா? பாரிய 'லட்சியங்களை' வைத்துக்கொண்டு காமத்தையும் காதலையும் தவிர்த்து வாழ்ந்தவர்கள்கூட இப்பொழுது மணமாகி அதேவேளை 'லட்சியத்தையும்' வளர்க்கவில்லையா? இயக்கத்துக்குப் போன சுரே கூட என் தங்கையைக் காதலிக்கவில்லையா? எனக்கு என்ன நடந்தது? நான் யாருக்காக, எதற்காகக் காத்துக் கிடக்கிறேன்?

"கனக்க யோசிக்கக் கூடாது தம்பி" மாஸ்டரின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பி ஒரு சடையல் சிரிப்பை விடுத்தான் ரகுநாதன்.

"ரகு நான் 10 வரு த்துக்கு முந்தி உமக்கு வகுப்பாசிரியனாய் இருந்தனான். என்ரை ரீச்சிங் சேவிஸ்லை என்னைக் கவர்ந்த மாணவர்களை நான் மறக்கிறேல்லை. என்ரை நல்ல ஸ்ருடன்ற்ஸ்லை நீரும் ஒரு ஆள். உம்மைப் பற்றின எல்லா வி யங்களையும் நான் அறிஞ்சு வைச்சிருக்கிறன்"

ரகுநாதன் அன்பு மிகுதியால் மாஸ்ரரைப் பார்த்தான். மாஸ்டர் இன்னுங் கொஞ்சம் கிட்டவந்து குனிந்து ரகுவின் காதுக்குள் சொன்னார்.

"உம்மடையும் சுசீலாவின்ரையும் காதல் விவகாரங்கள் எனக்கு அப்பவே தெரியும். Teenage school love எண்டாலும் நான் கடைக்கண்ணாலை அதை ரசிச்சு அங்கீகரிச்சுக் கொண்டிருந்தனான் எண்டுறது ஒருத்தருக்குந் தெரியாது. பள்ளிக்கூடக் கேற்றோடை அது தொடர்பற்றுப் போய் நீர் பிறகு campusக்குப் போட்டீர். சுசீலாவைத்தான் நீர் இப்பவும் நினைச்சுக் கொண்டிருக்கிறீர் எண்டால்.....

என்னட்டை ஒரு ஐடியா இருக்கு"

ரகுநாதன் உண்மையிலேயே விறைச்சுப் போனான். 10 வருடங்களுக்கு முதல் நடந்த சுவையான கனவு. கலர் கலராய் கண்களுக்கும் காதுகளுக்கும் உடலுக்கும் உள்ளத்திற்கும் இனிமை தந்த கனவு. எனக்கே அந்தக் கனவு இப்போது மங்கலாய்த் தெரியும்பொழுது..... ஆயிரமாயிரம் மாணவர்களைத் தன் அனுபவத்தில் கண்ட ஒரு சாதாரண English trained கந்தவன மாஸ்ரர் 10 வரு ங்களுக்குப் பிறகு நினைவுகூர்ந்து அதற்கு ஏதோ ஐடியாவும் வைச்சிருக்கிறார் என்றால் - இந்த மண்ணின் மாஸ்ரர்களுக்கெல்லாம் குறியீடாக மாஸ்டர்களுக்கெல்லாம் மாஸ்ரராக உயர்ந்த மனிதராகத் தெரிந்தார் கந்தவனம் மாஸ்ரர். இவருக்கு 'அறுவை மாஸ்ரர்' எண்ட பட்டத்தைச் சூட்டிய நானும் என் நண்பர்களும் எவ்வளவு சுத்த முட்டாள்கள் என்பது நன்கு தெரிகிறது.

என்ன சொல்வதென்று தெரியாமல் அவரது கண்களைச் சந்திக்கக் கூசியவனாய்த் தலையைக் குனிந்துகொண்டான் ரகுநாதன். தலையைக் குனிந்து மௌனமானால் - ஒருவேளை நான் சுசீலாவுக்காகத்தான் காத்திருக்கிறேன் எண்டு மாஸ்ரர்

www.tamilarangam.net

அர்த்தப் படுத்தி விடுவாரோ?

தலையை நிமிர்த்தினான்.

"அப்பிடியெண்டு ஒண்டுமில்லை. அதெல்லாம் பழைய கதையள்......" என்று என்னவோ இழுத்தான் ரகுநாதன்.

"இல்லைத் தம்பி! எனக்கெல்லாந் தெரியும். உம்மடை சுசீலா பள்ளிக்கூடத்தை முடிச்சிட்டு இந்தியாவுக்குப் போய் அடையாறு மியூஸிக் அக்கடமியிலை சங்கீதம் படிச்சிற்றுப் பட்டதாரியாகி இப்ப இஞ்சை பக்கத்துப் பள்ளிக்கூடத்திலைதான் மியூஸிக் ரீச்சராக வேலை பாக்கிறாள். உங்களுக்குள்ள என்ன நடந்தாலும் நடக்கட்டும். ஆனா ஒரு போமலிட்டிக்காக எண்டாலும் நீர் அவளைச் சந்திக்கிறது நல்லது. வாற சனிக்கிழமை 9 மணிக்கு நான் அவளை என்ரை வீட்டுக்கு வரச் சொல்லுறன். நீரும் வாரும்"

மாஸ்ரர் சொல்லிவிட்டுத் தாடியை வழிப்பதற்காக உயர்ந்த சுழல்சலூன் கதிரையில் ஏறிக் குந்திவிட்டார்.

சலூனினால் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தான் ரகுநாதன். என் சுசீலா இப்பொழுது ஒரு பாடகி.....! ரீச்சர்....! எப்பிடி இருப்பாள்? நீல பிளவுசும் ஸ்கேர்ட்டுமாய் ரியூசனுக்குப் போய் வந்துகொண்டிருந்த என் அழகுத் தேவதை இப்ப எப்படி இருப்பாள்? 10 வருடத்தில் அவள் உடல் குணம் எல்லாம் எப்படி மாறியிருக்கும்? இந்த நாட்டு அரசியல், இயக்கங்கள், இவற்றிற் கெல்லாம் எப்படி ஈடுகொடுத்திருப்பாள்? என்னைப் போலவே இடையில் வேறை யாரையும் காதலித்திருப்பாளா? அவள் ஏன் இன்னமும் கலியாணம் முடிக்கவில்லை. சீதனப் பிரச்சனையா? என் வாழ்வில் இன்னொரு மறுமலர்ச்சியா?

வீட்டுப் படியில் ஏறும்போது தபால்காரன் கடிதங்களை விறாந்தையில் எறிந்துவிட்டுப் போய்க் கொண்டிருந்தான் தூரத்தில். மூன்று கடிதங்களையும் எடுத்து யார் யாருக்கு வந்திருக்கிறது என்று பார்த்தான். கவர்களில் கிடந்த எல்லாப் பெயர்களுமே சுசீலா.... சுசீலா...... சுசீலா...... என்று தெரிந்தன ரகுநாதனுக்கு.

(வரும்)

## வெளியே போங்களேன்

அண்மையில் சுவீடன் நாளிதழ் 'எக்ஸ்பிரஸ்' நடத்திய கருத்துக் கணிப்பு ஒன்று பலர் மத்தியில் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. காரணம், சுவீடன் மக்களில் 63% மக்கள், அரசியற் தஞ்சம் கோரி வருவோரைத் திருப்பி அனுப்புவதை விரும்புவதாகக் கூறியுள்ளமைதான். ஆயினும் சுவீடன் நாட்டவர் இன்றைய வெளிநாட்டவர் பற்றிய அரசியலுக்கே எதிரானவர்கள். இவர்களிடம் கேட்கப்பட்ட அடுத்த கேள்வி, வெளிநாட்டவர்களுடனான உங்கள் அனுபவம் எப்படி? என்பது. இதற்கு 50% பேர் நல்ல அனுபவமே தமக்குண்டு என்று மனசார 'உண்மை'யை ஒத்துக் கொண்டுள்ளனர். 16% பேர் இதற்குக் குறைகூறும் பதிலையே சொன்னார்கள்.

ஆனந்தி,
சுவீடன்

www.tamilarangam.net

# கண்டு ரசித்த கேலிச்சித்திரங்கள்




Frankfurt, Germany. By HANEL.




. From Moscow, Russia. By MOCHALOV




From Rotterdam, Netherlands. By NIEK.

தொகுப்பு
கேசவன்




CHAPPATTE, LA TRIBUNE DE GENEVE, GENEVE

www.tamilarangam.net

# நமது மண்
# நமது மக்கள்
# நமது போராட்டம்



(முன்தொடர்)

வ.ஐ.ச.ஜெயபாலன்

IV

வன்னிப்பிரதேசத்தில் மன்னார் மாவட்டத் தீவுகளுக்கும் மேற்குக் கரையோரத்துக்கும் அடுத்துப் போராளிகள் சார்பாக மிகவும் பலவீனமான பகுதி கிளிநொச்சி மாவட்ட வடகரைப் பகுதியாகும். இது பூநகரி, பரந்தன், கண்டாவளை என யாழ் கடலேரியின் தெற்கெல்லைவரை விரிகிறது.

வன்னி அரசின் எல்லைகள் இப்பகுதிகளில் விரிவடையவில்லை. நேரடி ராணுவ நடவடிக்கை அடிப்படையில் தொழிற்பட்ட யாழ்ப்பாண அரசின் நேரடி ஆட்சியின்கீழ் மன்னார் பூனகரி முல்லைத்தீவுக் கரையோரங்கள் இருந்தன. பின்னர் யாழ்ப்பாணக் கோட்டை போர்த்துக்கீசர் வசமாவதற்கு (1619) 59வருடங்கள் முன்பே, 1560இல் மன்னார் போர்த்துக்கீசர் வசமானது. முன்னர் சிங்கள மன்னன் கோட்டை சிங்கள அரசனின் படைகள் சரி, பின்னர் போர்த்துக்கீசர், டச்சுக்காரரின் படைகள் சரி மன்னார் பூநகரி பகுதிகளைக் கைப்பற்றிப் பூநகரி வழியாகவே யாழ்ப்பாணத்துக்குள் புகுந்துள்ளனர். இது பூநகரியின் கேந்திர முக்கியத்துவத்தை ஓரளவுக்குப் புலப்படுத்தும் வரலாறாகும்.

வடமாகாணத்தில் போராளிகள் சார்பாக பலமான பகுதிகளான மாங்குளம், கொக்காவில், யாழ்ப்பாணம் பகுதிகளில் இருந்து முகாம்கள் கைவிடப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள போராளிகள் சார்பாக பலவீனமான பகுதிகளிலேயே இராணுவமும்

www.tamilarangam.net

கடற்படையும் நிலைகொண்டுள்ளன. இவற்றுள் முறையே முல்லைத்தீவு, பூனகரி, மண்டைதீவு, ஓரளவுக்கு ஊர்காவற்றுறை என்பன அரச படைகள் சார்பாகவும் பலவீனமான பகுதிகளாகும். பூனகரியைப் பலப்படுத்த அதை முதலாம்தர கூட்டுப்படை முகாமாக எறிபடை, கவசவாகனம், சிறுபோர்ப் படகுகள் சகிதம் கட்டி எழுப்பியிருந்தது.

பூனகரி முகாம் உட்பட வடபகுதி முகாம்கள் பலவற்றுக்குப் பொதுப் பிரச்சனைகள் உள்ளன.

1. வடபகுதியில் ஏற்பட்டுவருகிற கடற்புலிகளின் வளர்ச்சி நிலைமையில் முகாம்களின் உயிர்நிலையான கடல்வழி வழங்கல் தொடர்பு மார்க்கங்கள் அச்சுறுத்தப்படுதல்.

2. கடற்புலி, எறிபடை, விமான எதிர்ப்பு, தாங்கி எதிர்ப்பு அணிகளின் வளர்ச்சியால் கடல், கடலேரிக் கரை வெளிகளின் பாதுகாப்பு அரண் தன்மை அச்சுறுத்தப்படுதல்.

3. ஒரு முகாம் தாக்கப்படும்போது பக்கத்து முகாம்கள் தமது பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவிக்காமல் தாக்கப்படும் முகாமுக்கு உதவியனுப்பும் வகையில் ஆள் அணி அம்புகளையும், பிரயாண வசதிகளையும் கொண்டிருக்காதமை.

4. வடபகுதி முகாம்கள் தாக்கப்படும் போதும் அல்லது பாரிய நடவடிக்கைகளின் போதும் கிழக்கில் இருந்து படைகள் பின்வாங்கப்படுகிற நிலைமை.

5. புலிகளின் எறிபடைத் தாக்குதல்களில் இருந்து தம்மைப் பாதுகாக்கும் வகையில் முகாம்கள் ஒவ்வொன்றும் தமது சுற்று அரண்களை (FDL) தமது வல்லமைக்கு மிஞ்சிய அளவில் விரிவாக்கி வைத்திருப்பது. இது வடபகுதியில் சகல முகாம்களுக்குள்ளும் புலிப்படைப் போராளிகள் ஊடுருவிச் செல்லத்தக்க சூழலை ஏற்படுத்தியுள்ளது.

மறுபுறத்தில் சுற்று அரண் நிலைகள் குறுக்கப்படும்போது புலிப்படையினர் தமது முன்னணி நிலைகளை முகாமுக்கு மிக அருகில் நகர்த்துவடன் எறிபடைத் தாக்குதல்களின் மூலம் முகாம்களுக்குத் தொடர்ச்சியான சேதத்தை ஏற்படுத்துவர்.

யதார்த்த அடிப்படையில் அரசு ஆனையிறவு முகாமையோ அல்லது முல்லைத்தீவு போன்ற பல்வேறு சிறுமுகாம்களையோ கைவிட்டு விலகாமல் இன்றைய நிலைமையை வெற்றிகரமாக எதிர்நோக்குவது சாத்தியமில்லை. மறுபுறமாக பூனகரித் தாக்குதலிலும் முன்னர் கிளாலியிலும் அரச படையினருக்கும் புலிப்படைப் போராளிகளுக்கும் ஏற்பட்டுள்ள பெருமளவு ஆள்சேதம் இன்றைய நிலையில் போர், ஆள்சேதம் மிகுந்த ஒரு கட்டத்தினுள் நுழைந்துவிட்டதைத் துலாம்பரமாக்கியுள்ளது. தம்தமது பாதுகாப்பான பகுதிகளில் இருக்கும் அரச படையினரும், புலிப்படையினரும் ஆள்சேதம் குறைந்த வழியில் போராட்டத்தைத் தொடர்வது சாத்தியமில்லை. இருதரப்பினரும் எதிரியை முடக்கி அரசியற் தீர்வுகது நிர்ப்பந்திக்கும் வகையில் போராட்டத்தை வழிநடத்தாதமையும், எதிரியை ராணுவ அடிப்படையில் முடக்குவதைவிட தமது தரப்பு இழப்புகளை அலட்சியப்படுத்தி எதிரிக்கு அதிக ஆட்சேதம் விளைவிப்பதையே முதன்மைப் படுத்துவதும், போரின் ஆக்கமற்ற நாகாரத் தன்மையைத் தீவிரப் படுத்தியுள்ளது. இலங்கைப் பத்திரிகைகளும் போரின் வெற்றி தோல்வியினைப் பிணங்களின் ஐந்தொகைக் கணக்கு சம்பந்தப்பட்ட விடயமாகப் பார்க்கிற ஒரு போக்கை சிங்கள, தமிழ் மக்கள் மத்தியில் வளர்த்து விட்டிருக்கின்றன.

அரசு அரசியற் தீர்வை முன்வைக்கவில்லை. அரசியல் தீர்வுக்கு ஆதாரமாகக் கூடிய வடகிழக்கு இணைப்பு போன்ற அம்சங்களையே அவர்கள் விட்டுவைக்கத் தயாராயில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கையில் இனப்பிரச்சனை இல்லை என்கிறார்கள்.

புலிப்படையினர் தமது பங்கிற்கு வெளியேற்றப்பட்ட வடபகுதி முஸ்லிம் மக்களது மீள்வருகைக்கு வழிவிடாத வகையிலும், கிழக்கு மாகாணத்து முஸ்லிம்களுடனான முறுகல் நிலையை செம்மைப்படுத்தாத வகையிலும் அரசியல் தீர்விற்கான பாரிய முட்டுக்கட்டையைப் போட்டுள்ளனர். முஸ்லிம்களை வென்றெடுக்காமல், முஸ்லிம் மக்கள் தொடர்பான அரசியல் தீர்வை முன்வைக்காமல் சமஸ்டியைப் பரிசீலிப்பதாகக்

www.tamilarangam.net

கூறுவதும் இலங்கையில் இனப்பிரச்சனை இல்லை என்று கூறுவதும் அடிபபடையில் ஒரே தர்க்கம்தான்.

இன்றைய போரின் அதிகரிக்கும் ஆட்சேதம் வேறு ஒரு முக்கிய வளர்ச்சிக்கும் இட்டுச் செல்கிறது. போருக்கு எதிரான பெற்றோர்களின் கிளர்ச்சி விரிவடைகிறது. பூனகரித் தாக்குதலின் பின்னர் தென்பகுதிப் பெற்றோர் மத்தியில் ஏற்பட்டுவருகிற பதட்டத்தைத் தமிழ்ப் பத்திரிகைகளும், புலிகளின் கட்டுப்பாட்டில் இல்லாத கிழக்கு மாகாணத் தமிழ்ப் பெற்றோர் மத்தியில் ஏற்பட்டு வருகிற பதட்டத்தை சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளும் முதன்மைப்படுத்தி எழுதின.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுவந்த உள்ளூராட்சித் தேர்தல் நடவடிக்கைகளைப் பின்போடும்படி இலங்கை ஜனாதிபதியை வற்புறுத்தி அடித்த தந்தியில் பூனகரி யுத்தத்தில் இறந்தவர்களில் பெரும்பகுதியினர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தனக்கு நம்பகமான தகவல்கள் கிடைத்திருப்பதாக சிறிலங்கா முஸ்லிம் கொங்கிரஸ் தலைவர் அஸ்ரப் தெரிவித்திருந்தார்.

புலிப்படைப் போராளிகளின் அணுகுமுறை தொடர்பாக ஏற்பட்டு வருகிற மாறுதல்கள், அமைப்பில் ஏற்பட்டுள்ள பன்முகத் தன்மை என்பன தொடர்பாக யாரும் விரிவாக ஆராயவில்லை. முன்னைநாள் பிரதித் தலைவர் மாத்தயா தடுத்து வைக்கப் பட்டுள்ளமை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. அவர் இந்தியாவுடன் தொடர்புகொள்ள முனைந்ததாக உத்தியோக பூர்வமற்றுத் தெரிவிக்கப் படுகிறது. இது புலிப்படை அமைப்பினுள் பல்முக அணிகளின் இருப்பையும் புலிப்படையினரின் இந்தியக் கொள்கை தொடர்பாக உள்ளார்ந்த கருத்து முரண்பாடு உருவாகியுள்ளதையும் புலப்படுத்துகிறது.

புலிப்படையினரது யுத்த, போரத் தந்திரங்களில் ஈழப்போர்2இல் இருந்தே கெரில்லா அடிப்படையிலான அணுகுமுறைக்கும் நேரடி அணுகுமுறைக்கும் இடையிலான கடுமையான முரண்பாடுகள் தென்படுகிறது. ஆனையிறவு பேரிழப்புக்கும் தோல்விக்கும் பின்னர், நேரடி ராணுவ அணுகுமுறை என்ற நாசகார அணுகுமுறை பலவீனப்படத் தொடங்கியது. நேரடி இராணுவக் கடமைகளையும் கெரில்லா அடிப்படையில் கையாளும் சரியான ஒரு போக்கு பலப்படத் தொடங்கியது. கட்டுப்பொத்த, கட்டைக்காடு, ஜனகபுர தாக்குதல் பாணி இதற்கு நல்ல உதாரணங்கள் ஆகும்.

புதிய நிலைமையில் நேரடி யுத்தத்திற்குத் தூண்டிப் புலிப்படைக்குப் பெரும் ஆளணி சேதத்தை விளைவிப்பதும், புலிப்படை இழப்புகளில் இருந்து மீளமுன் பெரும் தாக்குதல்களை வெற்றிகரமாக நடத்துவதும் என்ற தந்திரோபாயத்தை மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ வளர்த்திருந்தார்.

ஆனையிறவு தோல்வியில் இருந்து புலிகள் மீளமுன் பூனகரி, தீவுப்பகுதி என்பன கைப்பற்றப் பட்டுவிட்டன. தெல்லிப்பழை, வட்டுக்கோட்டை, நாவாந்துறை நோக்கி மூன்று முனைகளில் விரிவடையும் அராலிவெளித் தாக்குதல் திட்டமும் இத்தகைய அணுகுமுறைதான் எனினும் ஈழப்போரின் பெரும் நரியான கொப்பேகடுவ தனது தாய் யுத்தத்தைத் திட்டமிடுகையிலேயே தனது துணைவர்களுடன் புலிப் படையினரின் கண்ணிவெடியில் சிக்கி உயிரிழந்தனர்.

> அண்மையில் யாழ்ப்பாணத்தில் நிகழும் சம்பவங்கள் தமிழர்களது எதிர்காலம் தொடர்பாகப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்ற அச்சத்தைத் தருகின்றன. ஈழத்தமிழர் தொடர்பாகவும், ஈழப் போராளிகள் தொடர்பாகவும் உள்ள இந்தியக் கொள்கைகளும், இந்தியா தொடர்பான ஈழப்போராளிகளின் கொள்கைகளும் ஈழத்தமிழர்களின் நீண்டகால நலன்களின் அடிப்படையிலும், திசைகளைக் கண்டுகொள்ளும் அடிப்படையிலும் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட வேண்டும்.

www.tamilarangam.net

பூநகரி தாக்குதலின் முதல்நாள் நிகழ்வுகள் ஜனகபுர பாணியில் தேர்ந்த திட்டமிடலையும் திட்ட அமுலாக்கத்தையும் காட்டிநிற்கின்ற போதும், வெள்ளி இரவில் இருந்து வெளிகள், தென்னந் தோப்புகள், மணல்மேடுகள் நிறைந்த பகுதிகளில் நிலைகொண்டிருந்த இராணுவத்தை முற்றுகையிடுவது, தரையிறங்கலைத் தடுப்பது, சிதறிய படையினரைத் தேடியழிப்பது என ஆனையிறவுப் பாணியில் விடயங்கள் வளர்ச்சி பெறத் தொடங்கின. இது கொல்லப்படும் காயப்படும் போராளிகளது தொகையை அதிகரிக்க வைத்தது.

அடி, எடு, தகர், ஓடு என்ற அடிப்படையில் பூநகரி தாக்குதல்கள் வெள்ளி முன்னிரவே முடிவுக்கு வந்திருக்குமாயின் ஒரு பகுதியில் பேரிழப்பும் மறுபகுதியில் போராளிகளுக்குப் பாரிய இழப்பை விளைவிக்க முடியாதமை என்று இருபுறத்திலும் அரசபடைகள் அதிர்ச்சி அடைந்திருக்கும்.

ஈழப்போர் 2இன் வரலாறு, நீடிக்கும் முற்றுகையின்போது வழமைக்கு மாறான அதிகரித்த தன்னார்வத்துடனும், மூர்க்கத்துடனும் முற்றுகையிடப்பட்ட அரசபடைகள் போராடுவதைப் புலப்படுத்தியுள்ளன. இந்தப் பண்பு, கிரான், யாழ்ப்பாணம், ஆனையிறவு போலவே பூநகரி, கோமாரி ராணுவ நிலைகளிலும் வெளிப்பட்டுள்ளது. அரசபடையினரின் மேற்படி மனநிலை இந்திய அமைதிப் படைப் போர் ஆரம்பித்த யாழ்ப்பாணத்திலும், பின்னர் ஈழப்போர்2 ஆரம்பித்தபோது கல்முனையிலும் யுத்தமரபுக்கும் தர்மத்துக்கும் மாறாக போர்க் கைதிகளைப் புலிப்படைப் போராளிகள் கொலைசெய்த தவற்றில் இருந்து தழைத்தாகும். அண்மைக்காலத் தகவல்கள் மேற்படி தவற்றைச் செம்மைப் படுத்துவதில் புலிப்படையினர் அதிக கவனம் செலுத்துவதைப் புலப்படுத்திய போதும் நிலைமை சீரடைய நெடுங்காலம் எடுக்கும்.

அரச படைகளது மனநிலை அடிப்படையிலும் போராளிகள் சார்பாக பலவீனமான புவியியல் பகுதிகளில் ராணுவ முகாம்களும் ராணுவ நகர்வுகளும் இடம்பெறுகிற நிலையிலும், நீடித்த முற்றுகைத் தாக்குதல்கள் பேரழிவுக்கே வழிவகுக்கும். கெரில்லாப் போராட்ட வரலாறு, நாசகரமான நீடித்த முற்றுகைத் தாக்குதல்களில் ஈட்டமுடியாத இலக்குகள் தொடர்ச்சியான குறுந்தாக்குதல் தொந்தரவுகளால் ஈட்டப் பட்டுள்ளதைக் காட்டி நிற்கிறது.



புலிப்படையினர் பெற்ற அனுபவங்களும், கைப்பற்றியுள்ள கனரக எறிபடை ஆயுதங்களும் போரின் சமநிலையில் பாதிப்பை ஏற்படுத்தவே செய்யும். கைப்பற்றப்பட்ட தாங்கிகளைப் பொறுத்து, அவை தாங்கி எதிர்ப்புப் போர்ப் பயிற்சிக்குப் பயன்படுத்தப் பட்டால், புலிகளது தாங்கி எதிர்ப்பு அணி அரசபடைகளுக்குப் பெரும் சவாலாக உருவாகிவிடும். எல்லாவற்றையும்விட அரசுக்கு அதிர்ச்சி தரக்கூடிய வளர்ச்சி கடற்புலிகளது வளர்ச்சியாகும். அவர்கள் பெற்றுள்ள படகுகள் ஏற்கனவே ஆழம் குறைந்த யாழ்ப்பாணக் கடலேரியில் கடற்படை - கடற்புலி சமநிலையில் பாரிய பாதிப்பை

www.tamilarangam.net

ஏற்படுத்தியிருக்கின்றன. இது மண்டைதீவு, ஊர்காவற்றுறை, பூநகரி, முல்லைத்தீவு, ஆனையிறவு முகாம்களுக்கான கடல்வழி வழங்கல் தொடர்புகளுக்கும் எல்லைக் காவல் நிலைகளுக்கும் பெரும் அச்சுறுத்தலாகும்.

நீண்டகாலமாக புலிப்படைப் போராளிகளை எதிர்த்துவருகிற ஒஸ்லோத் தமிழ்ப் பிரமுகர் ஒருவர் என்னிடம் பின்வரும் கருத்தைத் தெரிவித்தார். "இனப்பிரச்சனையே இல்லை என்கிற ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவுக்கு இந்தப் பாஷை மட்டும்தான் புரியும். புலிகள் மனித உரிமைப் பதிவுகளை நேராக்கி, முஸ்லிம்களது பிரச்சனையையும் தீர்த்து அரசியல் செய்வார்களானால் நான் அவர்களைத் தீவிரமாக ஆதரிப்பேன்"

மேற்படி தாக்குதலின் பெறுபேறுகள் இராணுவதீர்வுவாதம் பேசும் ஜனாதிபதி - சிசில் வைத்தியரத்ன அணியின் முகத்தில் கரிபூசியுள்ளது. எதிரணியினர், குறிப்பாக சிறிமாவோ பண்டாரநாயக்க அணியினரது குரலிலும்கூட மாற்றங்கள் தென்படுகின்றன. இலங்கைத் தமிழ்பேசும் மக்களது அரசியல் போரும், தென்பகுதி வாக்குவங்கியும் ஏற்படுத்துகிற பாதிப்பு இவை.

அரசு - இராணுவ அரங்கில் ரணில் விக்கிரமசிங்க, ஹமில்டன் வனசிங்க அணி மேம்படுகிறதும் இந்த அணி அரசியற் தீர்வில் அக்கறையுள்ள அணியென நிலவுகிற வதந்திகளும் தமிழரின் அக்கறைக்கு உரியதாக உள்ளது.

இந்திய விரோதமுள்ள கண்டிய மைய சிங்கள பேரினவாத அணியுடன் அரசியல் செய்ய சிரமப்படும் பலவீனப்பட்டுள்ள தொண்டமானின் கைகளை, இந்தத் தாக்குதலின் விளைவும், தென்பகுதி வாக்குவங்கியும், ரணிலின் எழுச்சியும் மீண்டும் பலப்படுத்தக் கூடும்.

நமது கவலை எல்லாம் யுத்தத்தின் வெற்றி அரசியலின் தோல்வியாகி விடக்கூடாது என்பதுதான்.

(வரும்)

## தமிழ் நகரபிதா சிங்கள ஆளுநர்

**செய்தியாளன்**

மிக நீண்டகாலத்திற்குப் பின்னர் கொழும்பு நகர முதல்வராக ஒரு தமிழர் நியமனம் பெற்றுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியில் முக்கிய பதவிகளை வகித்த கொழும்பு துணைநகரபிதா கணேசலிங்கத்திற்கே இந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது. தமிழ் நகரபிதாவின் ஆட்சியில் தான் கொழும்பில் அதிகளவில் தமிழர்கள் கைதாகிறார்கள். தமிழனுக்குப் பெருமைதானே.

வடக்கு கிழக்கு மாகாணசபையின் ஆளுநராக, யாழ் மாவட்ட அரச அதிபராக முன்பு பணியாற்றிய லயனல் பெர்ணான்டோ அண்மையில் நியமிக்கப்பட்டார். வடபகுதியில் யாழ்ப்பாணத்திலும், கிழக்கில் திருமலையிலும் ஒரே நேரத்தில் அரச அதிபராகக் கடமையாற்றிய இவர்மீது வடபகுதி மக்கள் பெரும் நன்மதிப்புக் கொண்டிருந்தனர். லயனல் கடமை புரிந்த 13மாத காலத்திற்குள் மரணித்த அவரது தாயாரின் இறுதிச்சடங்கு யாழ்ப்பாணத்திலேயே நிகழ்ந்ததுடன் ஏராளம் தமிழர்கள் இந்த இறுதி ஊர்வலத்திற் கலந்துகொண்டனர். ஒருபுறம் குண்டுவீச்சை நிகழ்த்திக் கொண்டு, மறுபுறம் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற அதிகாரியை நியமிக்கும் அரசின் போக்குத்தான் திருவாளர் பொதுசனத்துக்குப் புரியவில்லை.

கலை இலக்கியக் காலாண்டிதழ்

தொடர்புகள்: 6 Square du Roule/ 92200 NEUILLY S/ SEINE/ FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## இயக்குனரின் மரணம்

● சினிட்பித்தன்



அரசியல்வாதிக்குச் சனம் கூடும், ஒரு சினிமா நடிகருக்கும் சனம் கூடும். ஆனால் ஒரு சினிமா இயக்குநருக்கு....? ஒரு இயக்குனருக்காக நாடே துக்கத்தில் ஆழந்த சம்பவம் இத்தாலியில் நிகழ்ந்து உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது. இத்தாலிய இயக்குனர் ஃபெடரிக்கோ ஃபெலினிதான் (Federico fellini) அந்த இயக்குனர்.

நவயதார்த்தவாதத் திரைப்படங்கள் இரண்டாம் உலகப் போருக்குப் பின் இத்தாலியில் உருவாகின. பெலினியும் இதன் குழந்தைதான். அவரது திரைப்படங்கள் (La Strada - 1954, Cabrias netter - 1956) என்பன ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தவை. இவரது தனிமனித வெளிப்பாடும், வெளிஉலகம் பற்றிய கற்பனை வெளிப்பாடும் முக்கியமானவை. புத்திஜீவிகள் மட்டத்தில் மாத்திரம் அறியப் பட்டவராக இல்லாமல் சாதாரண மக்களாலும் இவரது படைப்புகள் ரசிக்கப் பட்டன. சமூகப் பிரச்சனை, அரசியற் சிந்தாந்தம் என்பவற்றிற்கு இவரது படைப்புகள் முக்கியம் வழங்கவில்லை. இவர் பலதடவைகள் ஒஸ்கார் விருதுக்குத் தெரிவானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நோர்வேயில் ஒலிம்பிக்!

அடுத்த மாதம் நோர்வேயில் ஒலிம்பிக் குளிர்காலப் போட்டிகள் நிகழவுள்ளன. பனிவிளையாட்டுகளில் உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றான நோர்வே கடந்த முறை குளிர்கால ஒலிம்பிக்கில் மூன்றாவது இடத்தைப் பெற்றது.

ஒலிம்பிக் போட்டிகள் நடத்த லில்லஹம்மர் எனும் நோர்வேஜிய நகரம் தெரிவானது முதல் இதற்கான தயாரிப்பு வேலைகள் நிகழ்ந்தன. பலகோடி குறோணர்களைச் செலவிட்டு, நிகழ்த்தப்படும் ஒலிம்பிக் போட்டிகள் இருவார காலத்திற்கு உலகின் கவனத்தை நோர்வே நோக்கி ஈர்க்கும். ஒலிம்பிக் பாரம்பரியமான ஒலிம்பிக் தீச்சுடர் மோர்கடால் என்ற இடத்தில் 75 தினங்கள் முன்னதாகக் கற்கால முறையில் சுடரேற்றப்பட்டு, 75 தினங்களாக நாடு முழுவதும் கொண்டு செல்லப்பட்டது. இந்தச் சுடர் லில்லஹம்மரை வந்தடைந்த பின்பே உத்தியோகபூர்வ ஒலிம்பிக் தீச்சுடர் கிரேக்கத்திலிருந்து வரும்.

மதுரான்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




"இது பைத்தியகாரத் தனமானது"
"எது?"
"உன்னைச் சுற்றி நீ போட்டிருக்கும் இந்தக் குறுகிய வட்டம்"
"இது என்னைச் சுற்றி நானாகப் போட்டுக் கொண்டதல்ல, பலாத்காரமாக என்னை மத்தியில் வைத்துப் போடப்பட்டது"
"யாரால்?"
"..............."
"சொல்லமுடியாது உன்னால். ஏனென்றால் உன்னைச் சுற்றி நீ போட்டுள்ள இந்தக் குறுகிய வட்டத்துக்கும் வேறு யாருக்கும் எந்தவித சம்பந்தமுமே இல்லை. ஆமாம்.... நீ ஏன் உனது செயல்களுக்கும் சிந்தனைக்கும் வேறு யாரையும் காரணத்துக்கு இழுக்க முனைகிறாய்? இதிலிருந்து நீ இரண்டு விடயங்களை ஒப்புக்கொள்கிறாய். ஒன்று, உன்னைச் சுற்றியிருப்பது ஒரு மிகக் குறுகிய வட்டமென்பது. அடுத்து அது தவறானதுதான் என்று. ஏனென்றால் அது சரியானது என நீ கருதுவாயானால் அதற்கு காரணக்காரராக வேறு யாரையும் துணைக்கிழுக்க மாட்டாய். அது சரியெனில் அதன் பொறுப்பை நீயே ஏற்றுக்கொண்டிருப்பாய் இல்லையா?"
"எல்பியூர் என்னைக் குழப்பாதே...."
"நீ ஏன் குழம்பவேண்டும்.... இது உனது பலவீனத்தை வெளிப்படுத்தும் வார்த்தைகள். தயவுசெய்து மறுக்காதே"
"இன்னும் கொஞ்சம் வைன் எடுத்துக்கொள் எல்பியூர்"
"நான் எடுத்துக்கொள்கிறேன். நீ பேச்சின் திசையைத் திருப்ப முனையாதே. அது முறையானதல்ல. சரி விடயத்துக்கு வருவோம். நீ ஏன் உனது சிறிய சகோதரனின் காதலை ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை?"
"அது எனது குல கௌரவத்தோடு தொடர்பானது. அதற்கு எப்படி முடிவெடுக்க வேண்டுமென்பது எனக்குத் தெரியும். அதுபற்றி நீ பேசுவதை இப்போதைக்கு நிறுத்து. தயவுசெய்து"
"இல்லை, நான் இதுபற்றிப் பேசுவதைத் தவிர்க்கமாட்டேன் எனக்குச் சரியான பதில் அல்லது விளக்கம்

www.tamilarangam.net

கிடைக்கும்வரை. உனது குலகௌரவம் என்பதனூடாக என்ன சொல்லவருகிறாய் எனக்கு. முதலில் அதைச் சொல்"

"............"

"மௌனம் ஏன் அன்பே....? விடை தெரியவில்லையா....? அல்லது உனக்குத் தெரிந்த விடையை எனக்குச் சொல்லச் சங்கடமாய் இருக்கிறதா? நான் சொல்கிறேன் கேள். உனது இளைய சகோதரன் காதலிப்பவள் உங்களைவிடக் குறைந்த குலத்தைச் சோந்தவள் என்பது அல்லவா?"

"ஆ..மா..ம்"

"சிவா... என் பிரியமானவனே சிவா...! எனது கேள்வி ஒன்றுக்கு உனது உள்ளார்ந்த பதிலை மறைக்காமல் கூறுவாயா?"

"தாராளமாக எல்பியூர், கேள்"

"நீ யார்?"

"நானா...? ஒரு தமிழன்"

"சிவா, உனக்காகப் பரிதாபப் படுகிறேன். இதிலேயும் உனது குறுகிய சிந்தனையை வெளிப்படுத்திவிட்டாய். நீ யார் என்ன கேள்விக்கு ஒரு தமிழன் என்ற பதில் சொல்லத் தெரிந்த நீ, ஏன் ஒரு மனிதன் என்று சொல்லமுடியாமற் போனது? இங்கேயும் ஒரு குறுகிய வட்டத்திற்குள்தான் நீ நிற்கிறாய், இல்லையா?"

"எல்பியூர்.... நான் உன்னை நேசிக்கிறேன். வழமையாக நீ தரும் அந்த முத்தம் இப்போது எனக்குத் தேவை. மறுக்காதே தந்துவிடு"

"நீயொரு நேர்மையற்றவனாய் நடந்துகொள்கிறாய் என்பது உனக்கு ஏன் புரியவில்லை....? எனது கேள்விகளுக்கு விளக்கம் தர மறுக்கும் உன்னை ஓர் நிறைவான, நேர்மையுள்ள மனிதனென்று என்னால் கொள்ள முடியாது"

"என்னைக் கொஞ்சம் சிந்திக்கவிடு எல்பியூர்..."

"பொய். நீ சிந்திக்க அச்சப்படுகிறாய். அல்லது உனது சிந்தனை மிகவும் குறுகலான பாதையில் கூனிக் குறுகி நடக்க முயற்சிக்கிறது. வெளியில் வா. குறுகலான பாதையில் இருந்து உனது சிந்தனையை பரந்த வெளியில் படரவிடு. உனது சுவாசத்தைப் பற்றிச் செல்லும் மெல்லிய காற்றுக்கூட நீண்டதூரம் தன்னை விதைத்துச் செல்கிறது. குறைந்தபட்சம் அந்தக் காற்றைத் தொடர்ந்தாவது உனது சிந்தனை செயலை விரிவுபடுத்து. பலருக்கு நன்மை உண்டாகும்"

"எனதான நன்மை அங்கே மரணித்துப் போகுமே அன்பே?"

"நீயென்ன சுயநலவாதியா?"

"முதலில் நான், பின்புதான் பொது"

"இது சுயநலத்தின் வெளிப்பாடேயன்றி வேறல்ல. நீ சுயநலம் உடையவனாகவே இருந்துவிட்டுப் போ. மறுப்பில்லை. ஆனால், மற்றவர்களின் சுயவிருப்பங்களையும், வெறுப்புகளையும் அபகரிக்கவோ, அவற்றுக்குத் தடைபோடவோ உனக்கு எந்த வகையிலுமே உரிமை இல்லை. சரி அவை போகட்டும், ஒன்று கேட்பேன் மனம் திறந்து பதில் கூறு. நீ என்னை நேசிப்பதாகச் சொல்கிறாய், உனது உயிரினும் மேலாய். நாமிருவரும் ஒரு ஆபத்தில் சிக்கிக் கொள்வோம் என்று வைத்துக்கொள்வோம். உன்பொருட்டு, உன் உயிரினும் மேலான என்னைப் பற்றியோ, எனது உயிரைப் பற்றியோ சற்றும் சிந்திக்காது உன்னை மட்டும்தான் காப்பாற்றிக்கொள்ள முற்படுவாய் இல்லையா......?"

"அதுவேறு இதுவேறு. எல்லாவற்றையும் சமன்படுத்தாதே எல்பியூர். என் அன்பே"

"இல்லை இவை வெவ்வேறல்ல, நீதான் ஒரேவகையிலான இரண்டு விடயங்களுக்கு வெவ்வேறான வர்ணங்களைத் தீட்டி வேறுபடுத்த முனைகிறாய்"

"ஒன்றை மட்டும் நீ புரிந்துகொள் எல்பியூர். எனட சகோதரனின் எதிர்கால வாழ்வில் எனக்கு அதீத அக்கறை உடையதாற்தான் இந்த விடயத்தில் அவனுக்குத் தடை போடுகிறேன்.... எனது கோப்பையில் கொஞ்சம் வைன் ஊற்றிவிடு"

"....அவன் விரும்பும் துணை அவனுக்குக் கிடைத்தாலே அவன் தன் வாழ்வில் உன்னதம் பெறுவான். இதைப் புரிந்துகொள்ள நீ ஏன் தயாராய் இல்லை?"

"இல்லை... இது அவனது வாழ்வைச் சீரழித்துவிடும். அது மட்டுமல்ல, எங்கள் குடும்பமும் பெரும் பாதிப்பைப் பெற்றுவிடும்"

"எப்படி? எந்த வகையிலான பாதிப்பு....?"

"இந்தச் சமூகத்தில் எமக்குள்ள மதிப்பை இழந்துவிடுவோம். எம்மை வசைபாடுவார்கள்"

"முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறாய். உனது தேவைகளுக்குப் பின்னர்தான் பொது, சமூகம் என்கிறாய். இதில் மட்டும் எதற்காகச் சமூகத்தை முதன்மைப் படுத்துகிறாய்....? அதாவது சமூகத்திற்காக வாழ்ந்தால் சமூக அந்தஸ்தைப்

www.tamilarangam.net

பேணும்பொருட்டு எதையும் செய்யலாம் என்பதல்ல உனது கருத்து. அதற்கு நான் முரணானவளும்கூட. இங்கே உனது வார்த்தைகளைத்தான் நான் மீண்டும் உன்னிடம் திருப்பி விட்டுள்ளேன்"
"புரியவில்லை எனக்கு"
"நீ புரிந்துகொள்ள விரும்பவில்லை, அல்லது புரிந்துகொள்வதற்கான முயற்சியை மேற்கொள்ள மறுக்கிறாய்"
"........."
"சுருக்கமாக ஒரே வார்த்தையில் கூறினால்... உனது இளைய சகோதரனின் காதலி உங்களைவிடக் குறைந்த குலத்தவள் என்பதுதான் அவர்களது காதலுக்கான உனது தடை, எதிர்ப்பு இல்லையா...?"
"......."
"இங்கு நானோர் விவசாயியின் மகள், உனக்குத் தெரியும் இல்லையா?"
"இதென்ன கேள்வி?! உங்கள் தோட்டத்தில் பல தடவைகள் பழம் பறிக்க வந்திருக்கிறேன். அவற்றை, அந்த இனிமையான காலங்களை மறக்க முடியுமா?"
"ஆனால் உனக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லாத ஒரு உண்மை; இந்த நாட்டில் சில காலங்களின் முன் விவசாயிகளைத் தாழ்குலத்தவராக மதித்தமை. இது இப்போதும் முற்றாக அற்றுவிட்டதெனக் கூறமாட்டேன். கணிசமானளவு இந்தப் பாகுபாடு இப்போதும் இருக்கத்தான் செய்கறிது"
"......."
"என்ன சிவா மௌனமாகிவிட்டாய்? உனது வியாக்கியானங்களின்படி உன்னால் காதலிக்கப்படும் நானும் ஒரு தாழ்குலத்தவள் என்பதை ஜீரணிக்க முடியவில்லையா...?"
"நானுன்னை மிகவும் ஸ்நேகிக்கிறேன் என் அன்பே எல்பியூர். எனக்கு நீ வழமையாகத் தரும் அந்த இன்பமான முத்தம் எனக்கு இப்போது தேவை. கொடுக்க மாட்டாயா அன்பே?"
"அதெப்படி....? உனது வரையறைக்குள் நான் தாழ்ந்த குலத்தவளாயிற்றே?"
"பைத்தியக்காரத் தனமான பேச்சுகளை நிறுத்து. எனக்கு இப்போது முத்தம் கொடு"
"தயவுசெய்து அவர்களைச் சேரவிடு. காதற் பிரிவின் உபாதைகளுள் அவர்களைத் தள்ளிச் சீரழிக்காதே"
"அவள் மதத்தாலும் எம்மிலிருந்து வேறுபட்டவள்"
"நானும்தான், உனது மதத்தைச் சாரந்தவளல்லவே நான். ஆனால் அவள் மொழியால், கலாசாரத்தால் உங்களில் இருந்து வேறுபட்டவளல்லள். எனக்கு நகைப்பாய் வருகிறது. உன்போன்ற சிலர் மதம் ஏன் உருவாக்கப் பட்டதென்பதை அப்பப்போ இப்படிப் பயன்படுத்தி நிரூபணம் செய்துவிடுகின்றீர்கள்"
"எங்களது அந்தப் புனிதமான பண்பாடு, கலாசாரத்தைக் காப்பாற்ற வேண்டுமெனில் நான் இதற்குச் சம்மதிப்பதும், உடன்படுவதும் உவப்பற்றதும், தவறானதுமாகும்"
"எப்படி?"
"அந்தப் பெண் ஏற்கனவே ஒருவனுக்குக் காதலியாய் இருந்தவள். இப்போது அவன் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டுவிட்டான்"
"அதற்கு?"
"நான் ஒப்புக்கொள்ள முடியாது. ஒரு மாசுள்ளவள் எனது சகோதரனுக்குக் காதலியாய் இருப்பதையும், அவள் துணையாய் வந்தமைவதையும்"
"அவள் மாசுள்ளவள் என்பது உனக்கு எப்படித் தெரியும்?"
"எங்கள் பண்பாடு, கலாசாரத்தின்படி ஒருவனுக்கு ஒருத்தி. அவள் ஏற்கனவே இன்னொருவனுக்கு உள்ளத்தால் உரிமையாகிவிட்டாள்"
"நிறுத்து! மனித உணர்வுகளின் சமாதியில் நின்று இதயம் சிதைந்தவனைப் போல் அவதூறு பேசாதே. உனதிந்த நியாயத்தின்படி உனது சகோதரனையும் நீ மாசுள்ளவனாக்க முனைகிறாய். அந்தப் பெண்ணின் தொடர்பைத் துண்டித்துவிட்டு இன்னொரு பெண்ணை உனது சகோதரன் மணம் புரிவானானால் உங்கள் பண்பாடு, கலாசாரத்தின்படி அவனும் மாசுள்ளவனாகிறான். ஏன்....? நீகூட மாசுள்ளவனே. உன்னால் மறுக்க முடியாது. உனது மாணவப் பருவத்தில் உனக்கு முதற் காதல் ஏற்பட்ட அனுபவத்தை எனக்கு நீ ஏற்கனவே கூறியிருக்கிறாய். ஞாபகப்படுத்திப் பார். நானும் மாசுள்ளவள், உனது கருத்துகளின்படி. எனது பழைய காதலனை உனக்கு நன்றாகவே தெரியும். அவனது வீட்டிற்கு விருந்துக்குப் போனதை மறக்க முடியாதென நீ அடிக்கடி சொல்வாய்"
"........"
"சிவா! என் நேசத்துக்குரியவனே! வேண்டாத வியாக்கியானங்களைத் தேடிப் பிடிப்பதில் குறியாய் இருப்பதை விடுத்து நிஜவாழ்வின் புலத்துக்குத் திரும்பு. கலாசாரம் பண்பாடு என்பதெல்லாம் மனிதனை வாழவைப்பதற்கானவையாக இருக்க வேண்டுமே தவிர, அழிப்பதாய் இருக்கக்கூடாது.

www.tamilarangam.net

இவையெல்லாம் மனிதன் தனக்காகத் தான் வகுத்துக் கொள்பவை. விரும்பியோ, விரும்பாமலோ மனிதனை மனிதன் அடிமைப்படுத்தும் விதிகளும் இதற்குள் அடங்கிவிட்டன: அவற்றைத் தூக்கி எறியவேண்டுமே தவிர, கட்டியாள எண்ணம் கொள்ளக் கூடாது..."

"இது விரும்பியோ விரும்பாமலோ வகுக்கப் பட்டதல்ல...."

"ஆமாம். இது விரும்பாமல் வகுக்கப்பட்டதல்ல. சிலர் தாம் விரும்பி, பலரை அடிமை கொள்ள வகுக்கப்பட்டது"

"சுருக்கமாக"

"சுருக்கமாக, உதாரணமாக உங்கள் கலாசாரத்தின் பெரும்பகுதி ஆண்களால் பெண்களை அடிமை கொள்வதற்காக வகுக்கப்பட்டவை"

"பெண்களைத் தெய்வமாக மதிக்கும் பண்பாடு, கலாசாரம் எங்களது"

"ஆமாம், தெய்வத்தை சுற்றுச் சுவர்களுக்குள் கல்லாக்கி வைத்துவிட்டீர்கள்"

"உங்கள் கலாசாரத்தில் மட்டும் பெண்களை அடிமை கொள்ளுதல் இல்லையென்கிறாயா?"

"உண்டு. நான் மறுக்கவில்லை. அதேவேளை அவற்றோடு நான் உடன்பாடுடையவள் என்றும் சொல்ல வரவில்லை.... அது ஓர் ஓரத்தில் இருக்கட்டும்... இப்போது உனது தவறை உணரவோ, திருந்தவோ திராணியற்று மற்றவர் தவறை சுளுரைப்பதன் மூலம் உனது தவறுகளில் இருந்து தப்பிக்கலாம் என்ற எண்ணமா உனக்கு?"

"இன்று நான் அதிகம் வைன் அருந்திவிட்டேன். போதையாயிருக்கிறது. இத்தோடு இந்தச் சம்பாஷணையை நிறுத்தி, வேறெதாவது பேசுவோமா?..."

"வேறெதாவது பேசுவதற்கு போதை தடையாக இல்லையா?"

"நீ நன்றாகப் பேசுகிறாய். அப்படியே உனது இனிய உதடுகளால் நேசமாய் முத்தம் கொடு எல்பியூர்...."

"நீயும்தான் நிறையவே பேசுகிறாய். ஆனால் நன்றாயில்லாதவற்றையே பேசுகிறாய். உன்னை நான் முத்தமிடுவதால் உனகது இனிமையாக இருக்கக்கூடும். ஆனால் எனக்குக் கசப்பானதாய்த்தான் தெரியும்."

"அன்பே....! எல்பியூர்!! தயவுசெய்து என்னை வெறுக்காதே......"

"இல்லை. நான் வெறுக்கவில்லை. உன்னை நான் வெறுக்கும்படியாக நடந்துகொள்ளாதே. அவர்களைப் பிரிக்காதே. சேர்த்துவை. சேரவிடு"

"மீண்டும் ஏன் அங்கே போகிறாய்......?"

"மீண்டும் நான் போகவில்லை. ஆரம்பத்திலிருந்து அதற்குள்தான் நிற்கிறேன். இன்னமும் வெளியேறவில்லை. தயவுசெய்து அவர்களைப் பிரிக்காதே. சேர்த்துவை. நீ சேர்த்துவைக்க வேண்டாம். அவர்கள் தாங்களாகவே சேர்ந்துகொள்வார்கள் நீ இடையூறு செய்யாதே"

"நான் சற்று யோசிக்க வேண்டும்....."

"நல்ல முடிவை எடு..."

"முயற்சிக்கிறேன்"

"கட்டாயமாக"

"இப்போது நான் சற்று உறங்கவேண்டும்...."

"தாராளமாக"

"உனது மடிமீது...."

"முத்தமும் தருகிறேன்"

"எ...ல்..பி..யூ..ர்"

❑

## மறுப்பும் மறைப்பும்

அகதி அந்தஸ்து மறுக்கப்பட்டவர்களை மறைத்துவைத்து உதவி செய்யும் குழுக்கள் சுவீடனில் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன. கிறீஸ்தவ மதநிறுவனங்கள், கோவில்கள், இடதுசாரி அமைப்புகள் என்பன இவற்றில் முக்கியமானவை.

உப்சாலா நகரிலுள்ள "அல்சிக்கே கன்னியர் மடம்" பல ஆண்டுகளாகவே பகிரங்கமாக அகதிகளின் (சுவீடனில் தங்க அனுமதி மறுக்கப்பட்டவர்கள்) தஞ்சத்துக்குரிய முக்கிய இடங்களில் ஒன்றாக உள்ளது. இம்மடத்தின் முக்கிய உறுப்பினரான சகோதரி மரியான் அகதிகளுக்கு உதவுபவர் என்பது சுவீடனில் பரவலாக அறியப்பட்ட விடயம்.

கடந்த கார்த்திகைக் கடைசி வாரத்தில் உப்சாலா பொலிசார், இம்மடத்தில் எதிர்பாராத விதத்தில் அதிரடியாக நுழைந்து, அங்கு தங்கியிருந்த சுமார் 35 அகதிகளைக் (பங்களாதேஸ், கொசோவோ) கைது செய்தனர்.

சாள்ஸ்

www.tamilarangam.net

# மாத்தையாவுக்கு மரண தண்டனை?

முகுந்தன்







விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவராகவும், விடுதலைப் புலிகளின் அரசியற் கட்சித் தலைவராகவும் இருந்த மாத்தையா (கோ.மகேந்திரராசா) தேசத்துரோகக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

நீண்டநாட்களாகவே மாத்தையா தடுத்து வைக்கப் பட்டிருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருந்த போதும், அதுபற்றி விடுதலைப் புலிகள் உத்தியோகபூர்வமாக எதனையும் தெரிவித்திருக்கவில்லை. டிசம்பர் இறுதியில் லண்டனில் வெளியாகும் பிரபல ஆங்கிலப் பத்திரிகையான 'கார்டியன்' மாத்தையா தடுத்து வைக்கப் பட்டிருப்பதாகச் செய்தி வெளியிட்டது. இதன்பின்பு புலிகளின் உத்தியோகபூர்வப் பத்திரிகையான 'களத்தில்' டிசம்பர் 31ம் திகதிய இதழில் "இந்தியாவின் உள்சதி 'மாத்தையா' விசாரணையில்" என்ற தலைப்பில் செய்தி வெளியிட்டது. ஐரோப்பியத் தமிழ்ப் பத்திரிகைகள் 'களத்தில்' பத்திரிகையில் இச்செய்தி வெளியானபின் தாமும் செய்தி வெளியிட்டன.

தமிழீழச் செய்திகளையும் ஆதாரம் காட்டி இச்செய்தியை வெளியிட்ட பத்திரிகைகள், தேசத்துரோகக் குற்றச்சாட்டில் மாத்தையாவுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் எனக் கூறியுள்ளன. இதுபற்றி மேலதிகத் தகவல்கள் எதையும் விடுதலைப் புலிகளின் ஐரோப்பிய செய்தித் தொடர்பு ஊடகங்களில் அடுத்த சில நாட்கள் பெறமுடியவில்லை. ஒரு வாரத்தின் பின் இந்த விசாரணை தொடர்பான சில செய்திகளைக் கூறிய புலிகளின் தொலைபேசிச் செய்திச் சேவை, ஐரோப்பியப் பத்திரிகைகளைக் கண்டிக்கும் தொனியில் செய்தி வெளியிட்டது.

மாத்தையா பற்றிய செய்தியை வெளியிட்ட 'பாரிஸ் ஈழநாடு' அலுவலகம் இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப் பட்டது. இரண்டுலட்சம் பிராங்க் வரையிலான இழப்பை ஏற்படுத்திய இந்தத் தீவிபத்திற்கு உரிமைகோரிச் சில துண்டுப் பிரசுரங்கள் பாரிஸில் ஒட்டப் பட்டிருந்தன. இதேபோன்ற பிரசுரங்கள் லண்டனிலும் ஒட்டப் பட்டிருந்தது குறிப்பிடத் தக்கது.

மாத்தையா நியாயபூர்வமான முறையில் விசாரிக்கப்பட வேண்டும் என மனித உரிமை அமைப்புகள் குரல் எழுப்பியுள்ளதாக அறியமுடிகிறது. புலிகளின் உத்தியோகபூர்வச் செய்திகள் எதுவும் பின்னர் மேலதிகமாக வரவில்லை. மாத்தையாவுடன் எத்தனை பேர் கைதாகினர் என்பது பற்றிக் குழப்பமான தகவல்கள் வெளிவந்துள்ளன. புலிகளின் தகவற்படி மாத்தையா உட்பட மூவர் மட்டுமே தடுப்புக் காவலில் உள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சியாமளாவுக்கு வந்த பதில்

சியாமளாவின் கடிதத்தை ஒட்டி நான் எழுதிய கடிதத்திற்கு சியாமளா பதில் எழுதியுள்ளார். அது தொடர்பான சில கருத்துகளைக் கூற முனைகின்றேன்.

அகிலன் என்எல்எ∴ப்ரியில் இருந்த காலத்திலோ, பின் பிஎல்எ∴ப்ரியில் இருந்த காலத்திலோ ஒரு முக்கியமான உறுப்பினரல்லர். என்எல்எ∴ப்ரியில் இருந்த காலத்தில் இந்தியாவில் அமைப்பின் பகிரங்க வேலை செய்தவர். நீங்கள் முக்கிய உறுப்பினர் எனக் கருத, ஹற்றன் தேசிய வங்கிக் கொள்ளை நகையில் ஒரு பகுதியை ஈரோஸ் எடுத்தபோது பேசச் சென்றதாய்க் குறிப்பிட்டுள்ளீர்கள். என்எல்எ∴ப்ரி நகையில் ஒரு பகுதிகூட வேறு எந்த இயக்கமும் எடுத்துச் செல்லவில்லை. இத்தகவல் தவறானது.

ஒரு பெண் என்றால் பேயும் இரங்கும் என்கின்றனர். அந்த வகையில் இச்சமூகம் பெண்ணைக் கருதுகின்றது. ஒரு பெண்ணை ஆண் பேசமுடியாது என்றில்லை. ஆண் பெண்ணையும், பெண் ஆணையும் பேச முடியும். அது சம்பவங்களைப் பொறுத்தது. இதில் ஆட்சிக் காலத்திலும் அவை இருந்தன. ஏனெனில் ஒரு புரட்சி அதாவது ஆட்சியைக் கைப்பற்றியவுடன் எல்லாம் மாறிவிடுவது இல்லை. மாறாக அக்கருத்துகள் மீண்டும் தீவிரமாகப் போராடும்.

புரட்சியின் பின் அச்சமூகத்தில் தொடர்ச்சியாக வர்க்கப் போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். அதாவது 4,5 தலைமுறைக்கு பலமுறை வர்க்கப் போராட்டம் நிகழ்த்தப்பட வேண்டும். அதாவது பூரண பெண்விடுதலை வர்க்கமற்ற சமுதாயத்தில், அதாவது கொம்யுனிச சமுதாயத்திலேயே உருவாக முடியும்.

என்எல்எ∴ப்ரி ஒரு முன்னணி. பலவர்க்க இருப்புடன் இருந்த அமைப்பு. தரகு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புக் கொண்ட அனைவரையும் உள்ளடக்கியது. அங்கு இருப்பது தவிர்க்கமுடியாதது. போராட்டம் என்பது அமைப்புக்குள்ளும், மக்களுக்குள்ளும் தொடர்வதே.

பெண்களுக்குப் பெண் ஒடுக்குமுறை உண்டு. ஆனால் ஆணுடன் ஒரு பெண் பிரச்சனைப் பட்டால் அது பெண்விடுதலையை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்றில்லை. இதையே நான் "ஒரு பெண் ஆண்மீதான பிரச்சனைமீதான எந் நடவடிக்கையும் சமமானது" எனக் கூறினேன்.

ஒரு ஆண் பெண்ணை விமர்சிக்கவும், ஒரு பெண் ஆணை விமர்சிக்கவும் முடியும். இது எந்தப் பிரச்சனைமீது எந்த வாக்கியங்கள் பயன்படுத்தப் படுகிறது என்பதைக் கொண்டே அதன் குணாம்ச ரீதியாக ஆராய முடியும்.

www.tamilarangam.net

பாவிக்கப்பட்டுள்ள பெண் மீதான தாக்குதலில், ஆணாதிக்க அடிப்படையிலான இச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. இது தவறானதே.

இதில் அகிலன் 1985 ஆரம்பம் முதல் என்எல்எ∴ப்ரியில் இருக்கவில்லை. அவர் பிஎல்எ∴ப்ரியில்தான் இருந்தார். அப்பெண் முதலில் தனது மகனின் கடிதத்தைக் கொடுத்தபோது நம்பமறுத்துப் பின் பல கிலோ மீற்றர்களுக்கு அப்பால் இருந்து மகனைக் கூட்டிவந்து சந்திக்க வைக்கப்பட்ட பின்பும் அத்தாய் வாக்குவாதப் பட்டதாக அறிகிறேன். இத்தகவல் முணமையானது என உறுதிப்படுத்த முடியாமல் உள்ளது.


ஒரு பெண்ணை வேசை எனப் பாவிக்கப்படும் சந்தர்ப்பம் மாத்திரமே முடிவு செய்யும். ஒரு பெண் பலருடன் வேசையாடும்போது அது வேசைத்தனம்தான். இது ஆணுக்கும் பொருந்தும். ஒரு பெண் அப்படி ஈடுபடாத நேரத்தில் கூறும்போது அது ஆணாதிக்க வெளிப்பாடாக இனம்காண முடியும்.

பெண்விடுதலை ஒரு அமைப்பு ஏற்றுப் போராடி பெரிய பெண் விடுதலை அமைப்புகளைக் கொண்டிருந்தாலும் புரட்சியின் பின் அங்கு பெண் அடிமைத்தனத்தின் பல கூறுகள் தொடர்ந்து இருக்கும். சோவியத்தில் லெனின் ஆட்சிக் காலத்திலும், சீனாவில்

தனது மகனைத் தேடிவந்த தாயும் அவரின் உணர்ச்சிகளின்போது அத்தாய் என்ன பேசினாலும் அகிலன் அவ்வாறு பாவித்த வசனம் படுமோசமானது. அகிலனின் இந்நடவடிக்கைக்கு, அவர் மக்கள் மத்தியில் என்றுமே வேலை செய்யாதது ஒரு முக்கிய காரணமாகப் பார்க்கப்பட முடியும். மக்கள் மத்தியில் வேலை செய்யும்போது மட்டுமே இந்தமாதிரி செயல்களைத் தடுக்க முடியும் என்பதை இதனூடாக நாம் கருத முடியும்.

சிறி

பிரான்ஸ்



## உலகை மதிப்பிட முதலாளித்துவக் கோட்பாடு உதவுமாம்

"கருத்துச் சுதந்திரம், தர்க்கம் என்பவை அபத்தவாதமும் தனிமனித வசைபாடல்களுமா" என்ற தலைப்பில் ஜெயபாலன் பாரிஸ் இலக்கியச் சந்திப்புப் பற்றி விவாதிக்க முற்பட்டுள்ளார். கருத்துச் சுதந்திரம், தர்க்கம் என்பன மாக்சியத்துக்கு மறுக்கப்பட்டன. இதை சிந்தனை, ஓசை, மௌனம் என்பனவே சுட்டிக் காட்டின. ஏன் பாரிஸ் இலக்கியச் சந்திப்பின்பின் ஜேர்மனியில் நடந்த இலக்கியச் சந்திப்பில் இலக்கியச் சந்திப்பின் போக்குத் தொடர்பாக விவாதிக்க முற்பட்டனர். பாரிஸ் இலக்கியச் சந்திப்பிற்கு முன்பு ஜேர்மனியில் ஒரு இலக்கியச் சந்திப்பில் மாக்சியம் பற்றிக் கதைத்த ஒருவருக்குக் கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டு வெளிநடப்புச் செய்தமை இலக்கியச் சந்திப்பின் வரலாறு. அப்படி இருக்க ஜெயபாலன் அபத்தவாதமும் தனிமனித வசைபாடல்களும் எனத் திசைதிருப்ப முனைவது ஏன்?

குமரேசன் எழுதிய மாக்சியக் கருத்தாக்கத்தை ஜெயபாலன் 'தீவிர வாதப் பிரதிவாதத்திற்குரிய கருத்துகள்' என்றதன் ஊடாக தான் மிதவாத பிரதிவாதம் எனக் கூறி மாக்சியத்தை நிராகரித்துள்ளார். மாக்சியத்தைத் தீவிரமாக உயர்த்துவதை நக்கல் அடிப்பது இக்கட்டுரை செய்ததையே பாரிஸ் இலககியச் சந்திப்பும் செய்தது. அதை ஒத்துக் கொண்டதற்கு நன்றி.

அடுத்து ஜெயபாலன் கூறுவதைப் பார்ப்போம். "எதிரும் புதிருமான பல்வேறு ஈழப்போராட்ட ஆதரவுக் குழுக்களைச் சோந்தவர்களும், ஜனநாயகக் கட்டமைப்பிற்குள் பங்குபற்றிய முதல் நிகழ்வு" எனக்கூறிப் பாரிஸ் இலக்கியச் சந்திப்பு ஏற்பாட்டாளர்களுக்கு நன்றி கூறுகிறார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இதனூடாக நாம் வைத்த விமர்சனத்தை ஒத்துக்கொள்கிறார். அதைப் பார்ப்போம். ஈழப் போராட்டத்தில் பல்வேறு ஆதரவுக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் தமது அரசியலுடன் கலந்துகொண்டனரெனில் எப்படி அது ஜனநாயகத்தைப் பேணியிருக்கும்? புளொட்டில் இருந்த ஜெயபாலன் அதன் அரசியலுடன் கலந்துகொண்டார். நித்தி புலிகளின் அரசியலுடன் கலந்துகொண்டார். அமைப்பில் இல்லையேயொழிய அரசியல் அதுவே. இதை ஒத்துக் கொள்கிறார், "பல்வேறு ஈழப் போராட்ட ஆதரவுக் குழுக்களைச் சேர்ந்தவர்களும்" என்றதன் ஊடாக. இதை நாம் அம்பலப் படுத்தினால் தனிநபர் வசைபாடலாம், எப்படியான வேடிக்கை. தமது கடந்தகாலத் தவறுகளை <u>சுயவிமர்சனம்</u> செய்ய மறுத்து அதைப் பேண நினைப்பது ஏன்?

இலக்கியச் சந்திப்பு ஏற்பாட்டாளர்கள் அவர்களின் முன்னைய அரசியற் குழுக்களின் அரசியலையே கொண்டவர்கள். எல்லா ஈழக் குழுக்களும் அதன் அரசியலையும் உள்ளடக்கிய இலக்கியச் சந்திப்பு ஜனநாயகத்தைப் பேணுமா? புலிகள், ஈரோஸ், ஈபிஆர்எல்எ:ப், ஈஎன்டிஎல்எ:ப்... என அவர்களின் அரசியலுடன் கலந்துகொண்ட இலக்கியச் சந்திப்பு என்ன செய்யும்

"மாக்சியமும் அமைப்புக் கட்டலும்" என எம்மைக் கூறப்போய்த் தனது அராஜகவாத இருப்பை நியாயப் படுத்தியுள்ளார். அமைப்புக் கட்டுதலுக்கு எதிரானவர்கள் மட்டுமன்றிப் புரட்சிக்கு எதிரானவர்கள். மாக்சியத்தை நிராகரித்த எல்லாக் கருத்தும் முதலாளித்துவக் கருத்துகளே. அதைத் தாமாகவே மேற்கூறிய வசனம் மூலம் ஏற்றுள்ளனர். தாம் முதலாளித்துவக் கருத்தைச் சொன்னதையே இப்படி என்கின்றனர், "எதை எடுத்தாலும் மாக்சியமும் அமைப்புக் கட்டுதலும்"

"....அவர் வைத்த முறை பலருக்கு எரிச்சலை மூட்டியது" என்று மாக்சியமும் அமைப்புக் கட்டுதலும் என்ற விடயத்தைச் சுட்டுகிறார். இதனூடாக எரிச்சல் அடைந்த அவர்கள் கருத்துச் சுதந்திரத்தை மறுத்தனர். இதை ஏற்றுக் கொண்டதற்கு சமர் நன்றி கூறுகிறது.

ஒரு பொய்யின் ஊடாகச் சொல்லும் "ஸ்டாலினிசம் செத்துவிட்டது என்று கூறப்பட்டதை மாக்சியம் செத்துவிட்டது எனக் கூறப்பட்டதாக எழுதினார்" இவ்வாக்கியத்தைப் பார்ப்போம். ஸ்டாலினைவிட்ட மற்றையவர்களின் மாக்சியத்தை உயர்த்திய உங்கள் வாதங்களை கசெற்றில் காட்ட முடியுமா? சமர் சவால் விடுகின்றது. ஏன் உங்கள் கடந்தகாலப் புத்தகங்களில் எதில் அவர்களின் தத்துவத்தைப் பாதுகாத்துள்ளீர்கள்? தான் மாக்சிஸ்ட் என மார்தட்டும் ஜெயபாலனின் எழுத்துகள் எதுதான் மாக்சியம். ஸ்டாலின் தவறுகள் இழைத்தபோதும் அவர் ஒரு மாக்சிய லெனினிய வாதியாகவே இருந்தார். இது தொடர்பாக முன்பு சமரில் பலதடவைவிளக்கியுள்ளோம்.

"உலகம் முழுவதையும் புரிந்துகொள்ள மாக்சிசம் மட்டும் போதியது என்கிற அடிப்படைவாதப் போக்கு" என்ற வரிகளூடாக முதலாளித்துவக் கோட்பாடும், கருத்துமுதல்வாதமும் உலகைப் புரிய உதவும் என்கிறார். வாசகர்களே இவர் எந்த வர்க்கத்தை உயர்த்துகிறார் என்பதை இக் கூற்றுகளின் ஊடாக காணுங்கள்

சமர்,

பிரான்ஸ்



## திராவிடக் கட்சிகளின் பம்மாத்து

சுவடுகள் இதழ்52ல் வெளியான திமுகவின் மரணம் என்ற கட்டுரை தொடர்பாகச் சில கருத்துகளைக் கூறவிரும்புகிறேன்.

கருணாநிதி அவர்களின் கீழ்த்தரமான அரசியலையும், கட்சியில் கருணாநிதியின் குடும்ப

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பதை நாம் சொல்லித் தெரியவேண்டுமா?

இலக்கியச் சந்திப்பில் தனிநபர் வசைபாடல் செய்தது என்ற கூற்று, முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் புதைக்கும் முயற்சி. ஏனெனில் பாரிஸ் இலக்கியச் சந்திப்பாளர்கள் முழுநிகழ்ச்சியையும் பதிவு செய்தனர். தனிநபர் வசைபாடலை அதிற் காட்ட இயலுமா? இதுபோல் "ஸ்டாலினிசம் மாக்சியத்தைப் பின்னடையச் செய்தது" எனக் கூறும் ஜெயபாலனின் கூற்றைப் பதிவுகளில் காட்டமுடியுமா? ஏன்தான் பொய் சொல்லுகிறீர்கள்?


"இது ஒரு கருத்துரீதியான பயங்கரவாதமாகும். இத்தகைய போக்கினர் அமைப்புக் கட்டி ஆயுதம் தாங்கிட நேர்ந்தால் மின்கம்பங்களே நீதிபரிபாலனம் செய்யும்" நீர் புளொட்டில் இருந்தபோது மின்கம்பத் தண்டனைகளை வீதிதவறாது செய்தபோது அதை மாக்சிய முலாம் பூசி நியாயப் படுத்தினீர். (நாம்) மாக்சியர்கள் ஆயுதம் ஏந்தினால் சுரண்டும் வர்க்கத்திற்கு கருத்துச் சுதந்திரம் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஊழல், பெண்களை ஏமாற்றிக் கெடுத்தல்..... போன்றவற்றைச் செய்பவர்களை அழிப்போம். ஆனால் நீர் புளொட்டில் இருந்தபோதும் இன்றும் இவைகளை அங்கீகரித்து, இவர்களுக்கு எதிரானவர்களை அழித்தது மட்டுமன்றி அதற்கு மாக்சிய முலாம் வேறு.

ஆதிக்கத்தையும் அத்துமீறல்களையும் மற்றும் பார்ப்பனிய சதிகாரர்களின் நயவஞ்சகத்தையும் குறிப்பிட்டுள்ள கட்டுரையாளர், மறுபுறம் திமுக தொடர்பாகவும் (கலைஞரின் அழகுமொழியில் சொன்னால், திமுகவின் திராவிட பாரம்பரியம்(?)) திமுகவின் கடந்தகால செயற்பாடுகள் பற்றியும் ஒரு மாயையை ஏற்படுத்த முயன்றுள்ளார். இத்தகவல்கள் உண்மைக்கு மாறானது மட்டுமன்றி, முழுப் பூசணிக்காயைச் சோற்றுக்குள் மறைக்கும் முயற்சியுமாகும்.

தமிழக அரசியலை ஓரளவு அறிந்தவர்களுக்கே திராவிட கழகங்களின் வண்டவாளங்கள் தெரிந்திருக்கும். திராவிட பாரம்பரியம் கதைக்க எதுவிதத்திலும் தகுதியற்ற இன்றைய திராவிட அமைப்புகள், திராவிட பாரம்பரியம் பற்றிக் கதைத்துக்கொண்டே பார்ப்பனீய முதலாளித்துவ அடிவருடிகளின் செல்லப்பிள்ளைகளாகத் தம்மையும் தமது அமைப்பையும் வளர்த்து வருகின்றனர். பணப்பலத்தினாலும் சமூக அந்தஸ்துப் பலத்தினாலும் கொடிகட்டிப் பறந்த பார்ப்பனிய ஒடுக்குமுறையாளர்களிடம் இருந்து விடுதலை பெறுவதை மையமாகக் கொண்டே திராவிடர் கழகம் ஆரம்பிக்கப் பட்டது. இதன் வழித்தோன்றல்களே திமுக, அதிமுக மற்றும் சில சிறு கழகங்கள். திராவிடக் கழகங்களின் ஏமாற்று வித்தையை, சடுகுடு விளையாட்டைப் புரிந்துகொள்ள நாம் கழகங்களின், குறிப்பாக திமுக திராவிடப் பாரம்பரியத்தைப் பின்னோக்கிப் பார்ப்போம்.

திராவிட சமூகத்தின் முழுமையான விடுதலையே தமது உயிர்மூச்சு என்று கூறியபடி தொடங்கப்பட்ட திராவிடர் கழகத்தின் ஆரம்பகர்த்தாக்களில் அண்ணாதுரை உள்ளடங்கலாக பலர் நீதிக்கட்சியில் இருந்து செயலாற்றியவர்களே. இந்திய சுதந்திர விடுதலைப் போராட்டம் பட்டிதொட்டியெல்லாம் உணர்ச்சிகரமாக எரிந்துகொண்டிருக்கையில் ஏகாதிபத்தியவாதிகளின் செல்லப் பிள்ளையாக – பினாமியாக செயற்பட்டதுதான் நீதிக்கட்சி. தவறு விடுபவர்கள் திருந்தக்கூடாது என்பதில்லை. அந்த வகையில் தி.க.வின் தோற்றம் திராவிட மக்களின் – குறிப்பாக தமிழக மக்களின் அரசியல் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கும் அமைப்பாக இயங்கும் என்றே பலரும் கருதினார்கள். பிராமண ஆதிக்கத்தில் இருந்து ஏழை மக்களுக்கு அரசியல் சமூக பொருளாதார விடுதலையைப் பெற்றுத்தரும் என்றே அப்பாவிப் பொதுமக்கள் கருதினார்கள். ஆனால் தி.க ஆரம்பத்திலேயே பிளவுண்டு, ஈவேரா பெரியார் வள்ளியம்மை திருமணம் தொடர்பாக முரண்பட்ட அண்ணாதுரை திமுகவைத் தோற்றுவித்தார். திராவிட விடுதலையே திமுக கொள்கையெனக் கூறியவர், குறுகிய காலத்திலேயே தடம் புரண்டார். திமுக கொள்கைகளுக்கு ஏனைய திராவிடர்களான தெலுங்கர்கள், மலையாளிகள், கன்னடர்கள் என்போரிடையே பெரும் ஆதரவு கிடையாததால் திமுக தமிழகத்தில் மட்டுமே செயல்பட வேண்டிய நிலைமைக்கு உள்ளாகியது.

தனித்தமிழ்நாடு எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற கோஷங்களுடன் புறப்பட்ட திமுக, பார்ப்பனீயப் பெருச்சாளிகளிற்கு எதிராகக் கடுமையாகப் போராடியது என்பதை மறுப்பதற்கில்லை. இதை அண்ணாதுரை வழிநடத்தனார் என்று கூறுவதைவிட மாற்றத்தை எதிர்நோக்கி இருந்த ஒரு சமூகம், சாதி மத ஆதிக்கவாதிகளால் ஒடுக்கப்பட்டுக் கொண்டிருந்த ஒரு சமூகக் கூட்டம் முன்னின்று போராடியது என்று கூறுவதே பொருத்தம். ஏனெனில் அண்ணாதுரை தனது திராவிட - தமிழின விடுதலைக் கொள்கையில் எப்போதுமே உறுதியானவராக இருக்கவில்லை. தமிழக மக்களின் சமூக விடுதலை என்பதைவிட





கருணாநிதி, வை.கோ.

விளைவு விரைவில் அண்ணா முதல்வரானார். திராவிட பாரம்பரியம், விடுதலை என்பன திராவிடத் தலைமைகளாலேயே குழிதோண்டிப் புதைக்கப் பட்டன.

நாடுநலம்பெற கருணா-நிதியுண்டு என எமது அண்ணா அமைதியாக உறங்குகிறார், இப்படிக் கூறியது வேறு யாருமல்ல, கருணாநிதியின் முதல் வரிசை எதிரியான நெடுஞ்செழியன் அவர்கள்த்தான். அண்ணாவின் இறப்பைத் தொடர்ந்து, தலைமைப் பதவியை எதிர்பார்த்துப் பதவி கிட்டாத நிலையில் கிடைத்தவரை லாபம் என்பதற்கிணங்க நடந்துகொண்ட இவர், அண்ணாவின் இறுதிச் சடங்கிற் கூறிய வசனமே மேலே கூறப்பட்ட வசனமாகும். நாடு நலம்பெற எனக் கூறுவதைவிட்டு கருணாநிதி, நிதி பெற எனக் கூறியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். ஏனெனில் கருணாநிதியும் திமுகவும் செய்த ஊழல்கள், அரசியல் அயோக்கியத் தனம் ஏராளம். கோதுமை ஊழல், அரசி ஊழல், கிருமிநாசினி ஊழல் என ஏழை மக்களின் வயிற்றில் அடித்தே கருணா - நிதி சேர்த்தார். (இன்றைய நிலைமை இதைவிட மோசம்) அரசியலில் அண்ணா அடித்த பல்டிகள் சில எனில், அரசியல் பல்டி அடிப்பதில் பலே கில்லாடியாக விளங்கினார். அண்ணாவின் மரணத்தைத் தொடர்ந்து 1970 தேர்தலில் அம்மையார் இந்திராவை ஆதரித்து முதல்வரானார். ஊழல் பேரத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக அம்மையாருடன் முரண்பட்டார். விளைவு, பதவியும் பறிபோனது. மீண்டும் கிளர்ந்தெழுந்த திராவிட பாரம்பரியம், இந்தி எதிர்ப்பு, மாநில சுயாட்சி, தமிழின சுயாட்சி, வடக்கத்தைய எதிர்ப்பு என்ற ரீதியில் களத்தில் வந்தன. மறுபுறம் கழகத்தில் கணக்குக் கேட்டமையால் கழட்டி விடப்பட்ட எம்ஜிஆர் மாபெரும் சக்தியாக உருவாகிவந்தார்; 1977ல் தனிப்பெரும் தலைவராகி முதல்வரானார். விடுவாரா கருணாநிதி? திராவிட பாரம்பரியம் பேசியவர் திராவிடத்தையே கேவலப்படுத்தித் திட்டத் தொடங்கினார். "தமிழன் தன்மானம் இல்லாதவன்" "சினிமாக் கவர்ச்சியில் மயங்கிச் சுயகௌரவம் இழந்துவிட்டான்" "டில்லிக்கு வால் பிடிப்பவனெல்லாம் தமிழக முதல்வராகி விடுமளவுக்கு தமிழனும், தமிழகமும் தாழ்ந்துவிட்டனர்" "மலையாளி ஒருவன் தமிழக

www.tamilarangam.net

www.tamilarangam.net

அதன்மூலம் கிடைக்கவிருந்த பதவியையே அவர் குறிவைத்திருந்தார். இதற்கு நல்ல உதாரணம், திமுகவின் அடிப்படைக் கோட்பாடுகளையே நழுவவிட்டுவிட்டு, திராவிட விடுதலை பற்றிக் கதைத்த அண்ணாதுரை, ஐக்கிய இந்தியா பற்றிக் கதைத்ததுதான். இந்திய சீன யுத்த காலகட்டத்தில் கொண்டுவரப்பட்ட பிரிவினைத் தடைச் சட்டத்துக்குத் தலைவணங்கி இந்திய ஒற்றுமையை ஐக்கியத்தை வலியுறுத்தினார். தனது அப்பட்டமான துரோகத்தனத்தைத் தனது அழகு - அடுக்குத் தமிழால் நியாயப்படுத்திய அண்ணா பின்வருமாறு அறிக்கை விட்டார்: எனக்கு மொழியைவிட இனம் முக்கியம், இனத்தைவிட விடுதலை முக்கியம், விடுதலையைவிட நாடு- நாட்டின் ஐக்கியம் முக்கியம்.

எவ்வளவு அழகான விளக்கம். இதுவல்லவோ அறிஞர் அண்ணாவின் நாட்டுப் பற்று. இப்படிப் புகழ்ந்தவர்கள் யாரென்று நினைக்கிறீர்கள்? வேறு யாருமல்ல பார்ப்பனீயப் பத்திரிகைகளும் அவர்களின் பினாமி ஊதுகுழல்களும்தான். யாரை எட்டப்பன் கூட்டம், காட்டிக் கொடுக்கும் இனத் துரோகிகள் என்று அண்ணாதுரை அழைத்தாரோ அவர்களே அவரைப் பாராட்டிப் புகழ்ந்தனர். விளைவு முதல்வராகும் அளவு தமிழர்கள் புத்தியிழந்து விட்டனர்" இப்படிப் பல. இதில் வேடிக்கை என்னவெனில் திராவிடம் பேசும் கருணாநிதி, மலையாள மக்களைக் கேவலப் படுத்தியமைதான். இவ்வளவும் செய்த கருணாநிதி 1980இல் மீண்டும் ஒரு பெரும் பல்டி அடித்தார். "நேருவின் மகளே வருக, நிலையான ஆட்சி தருக" "உறவுக்குக் கைகொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்" என்று இந்திரா காந்தியை வரவேற்று, அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை; நிரந்தரப் பகைவனும் இல்லை என்று தனது கொள்கைகளுக்குப் புதிய விளக்கம் கொடுக்கத் தொடங்கினார்.

ஈழமக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திலும் கலைஞர் அடித்த குத்துக்கரணங்கள் வெகு பிரசித்தம். தனது சுயநல அரசியலுக்காக ஈழமக்களின் விடுதலையை ஆதரிப்பதாகக் காட்டிக் கொண்டார். ஈழமக்களின் பிரச்சனையை வைத்தே அரசியல் நடத்தலாம் என்ற கலைஞரின் எண்ணம் வெகுகாலம் நிலைக்கவில்லை. கலைஞரின் செல்லபபிள்ளை சிறிசபாரத்தினத்தைப் புலிகள் கொன்றமையும், போராட்டத்தில் புலிகளின் கை ஓங்கியமையும் இதைத் தொடர்ந்து கலைஞர் நடந்துகொண்ட முரணான நிலைகளும் எவரும் அறிந்ததே.

ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டத்தை வை.கோபாலசாமி ஆதரிப்பதாகவும், தமிழீழத்திற்கு அவர் ஆதரவு தருவதாகவும் அன்பரசன் குறிப்பிட்டுள்ளமை சுத்தப் பொய். மேலோட்டமாகப் பார்த்தால் அன்பரசனின் கூற்றுச் சரிபோலப் படும். வை.கோ அவர்கள் ஈழப்போராட்டத்தை அல்ல, புலிகளின் போராட்டத்தையே ஆதரிக்கிறார் என்பதற்கு அவரது கடந்த காலத்துச் செயற்பாடுகள் நல்ல உதாரணங்கள். ஈழத் தமிழர்மேல் அவர்களது விடுதலையின் மேல் அவர் அக்கறை கொண்டிருந்தால் போராட்டத்தைப் பின்தள்ளக்கூடிய செயற்பாடுகளை அவர் கண்டித்திருக்க வேண்டும். குறிப்பாக தமிழினத்தின் பிரிக்கமுடியாது அங்கமாக இருந்த முஸ்லிம் மக்கள்மீது தாக்குதல்கள் நடத்தப் பட்டமையும், வடபகுதியை விட்டு அவர்களை வெளியேற்றிய இனச் சுத்திகரிப்புத் தன்மையையும் (இது ஹிட்லரின் நாஸி மற்றும் பௌத்த சிங்கள பேரின கொள்கைகளுக்கு நிகரானது) ராஜினி, விமலேஸ்வரன் உட்படத் தேசபக்தர்களது படுகொலையையும், செல்வி கேசவன் போன்று மூவாயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்களின் மீதான சித்திரவதையையும் அவர் கண்டுகொள்ளாமற் புலிகளை ஆதரிப்பது எதுவிதத்திலும் ஈழமக்களின் தேசிய விடுதலையை வென்றெடுக்க உதவாது. பதிலாக இவரைப் போன்றவர்களின் ஆதரவுப் போக்கு ஈழமக்கள் மீதான புலிகளின் ஆதிக்கப் போக்கு, அதிகார ஒடுக்குமுறையை வலுப்படுத்தவே உதவும்.

கொழும்பில் ஆட்சியாளர்களுடன் இணைந்து தமிழ் மக்களைக் கொன்றொழித்துவரும் முன்னைநாள்த் தமிழ் இயக்கங்கள் ஒருபுறமும், இன்றும் இந்திய ஆக்கிரமிப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஈபிஆர்எல்எஃப் ஒருபுறமும் போராட்டத்தை விலைபேசி வருகையில், தமிழீழ விடுதலைப் போராட்டம் எனக் கூறித் தமிழ் மக்கள்மீது தமது எதேச்சாதிகாரத்தை நிலைநிறுத்திவரும் புலிகள் மறுபுறம்.

ஈழமக்களுக்கு முழுமையான ஜனநாயகத்தை வழங்கி விடுதலைக்கான முற்போக்கு சக்திகளை அணிதிரட்டி தேசபக்தர்களை உள்ளடக்கிய "ஐக்கிய முன்னணி" ஒன்றை



எப்போது புலிகள் கட்டியெழுப்புகிறார்களோ அப்போதுதான் எமது எழுச்சிமிக்க விடுதலைப் போராட்டத்தை வெகுஜனப் புரட்சியூடாக முன்னெடுத்துச் செல்லலாம்.

இதையெல்லாம் கோபாலசாமி, தான் ஆதரவு வழங்குவதாகக் காட்டும் விடுதலைப் புலிகளிடம் வலியுறுத்திச் சொல்பவராக இருப்பின், அது அவர் ஈழமக்களுக்குச் செய்யும் பேருதவியாக இருக்கும். இல்லையெனில் கருணாநிதியின் இன்னொரு பிம்பமாகவே வை.கோ இருப்பார். கருணாநிதி போலவே ஈழமக்களது தியாகங்களைத் தமது வாக்கு வேட்டைக்குப் பயன்படுத்தும் துரோகத் தனத்தைச் செய்பவராகவே இருப்பார்.

செ.பிரான்ஸிஸ்,
சென்னை.

## நீதியற்ற போராட்டம்

அன்புடையீர்,

கடந்த ஓரிரு சுவடுகள் இதழ்கள் கிடைத்தன. முன்பு பார்க்கக் கிடைத்த சுவடுகளுடன் ஒப்பிடுகையில் இவை கனதியாகத் தெரிகின்றன. தொடர்ந்தும் தரத்தைப் பேணுங்கள்.

ஜெயபாலனின் கட்டுரைத் தொடர் பல விடயங்களைத் தொட்டுக் காட்டுகிறது. முக்கியமாக முஸ்லிம் மக்களைப் பற்றிய அவரது கருத்து ஆழமானது. அவர் குறிப்பிடுவதுபோல "எமது போராட்டம் எத்தனை வீரம் செறிந்ததாக அமைந்தாலும், நீதித்தன்மை அற்றதாயின் தோற்றுப் போய்விடும்" என்ற கூற்று நூற்றுக்கு நூறு வீதம் உண்மை. இதனைத் தமிழ் அரசியற் தலைமைகள் கவனத்தில் எடுக்கவேண்டும்.

சமுத்திரனின் சோவியத் பற்றிய கட்டுரை நல்லதுதான். ஆனால் நிகழ்கால நிலை, கடந்தகாலத் தவறுகள் என்பவை பற்றி எழுதினால் பயனுள்ளதாக இருக்கும்.

இ.த,
இலங்கை

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கை அரசியலின் அண்மைக் காலம்

பிரதீப்

இலங்கை அரசியலில் அண்மைக் காலங்களில் ஏற்பட்டு வரும் சடுதியான மாற்றங்கள் பிறந்துள்ள புதுவருடத்தில் எத்தகு மாற்றங்களைக் கொண்டுவரும் என்பதே கொழும்பு ராஜதந்திரிகள் மத்தியில் கேட்கப்படும் முக்கிய கேள்வியாக உள்ளது.

1994ல் பாராளுமன்ற, ஜனாதிபதி தேர்தல்களை எதிர்நோக்கியுள்ளமையும், பல அடுத்தடுத்த தோல்விகளுக்குப் பின் புதிய ராணுவத் தளபதி ஜெரி டி சில்வா எத்தகைய ராணுவ அரசியல் உத்திகளைக் கையாளப் போகிறார் என்பதும், கிழக்கு மற்றும் வவுனியாவில் உள்ளூராட்சித் தேர்தலைத் தொடர்ந்து அடுத்த கட்டமாக நிகழக்கூடிய வடக்கு கிழக்கு இணைப்புத் தொடர்பான சர்வசன வாக்கெடுப்பின் முடிவு எவ்வாறிருக்கும் எனப் பல விடயங்கள் இந்த வருடத்தின் ஆரம்பத்தை எதிர்பார்ப்புகளுக்கு உள்ளாக்கியுள்ளது.

1977ல் 5/6 பங்கு பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியைக் கைப்பற்றிய ஐ.தே.க இன்றுவரை தொடர்ந்து ஆட்சியை நடத்துகிறது. ஆனால் கடந்த காலங்களில் இல்லாத பல நெருக்கடிகளை இப்போது எதிர்கொள்ளுகிறது. இதற்கான முதல் அடியைக் கடந்த மாகாணசபைத் தேர்தலில் கட்சி பெற்றது. கடந்த 16வருட வரலாற்றில் ஐ.தே.க சந்தித்த குறிப்பிடத்தக்க தோல்வி அது. இந்நிலையில் முன்னைவிடப் பலவீனமான ஐதேக தேர்தலில் வெற்றி ஈட்டுவது சந்தேகத்திற்கு உரியதாகவே உள்ளது.

1977, 1983, 1988 தேர்தல்களிலெல்லாம் ஐதேகவில் வாக்குகளைச் சேகரிக்கும் வல்லமை கொண்ட தலைவர்கள் கட்சித் தலைமையில் இருந்நனர். இனவாதத்தைக் கக்கிக்கொண்டே தமிழர்களின் நண்பனாகக் காட்டிக்கொண்ட ஜேஆரும் தமிழர்களைக் கொண்டே தமிழர்களை ஒடுக்கிய பிரேமதாசாவும் கட்சி மட்டத்திற்கு அப்பால் தனிப்பட்ட செல்வாக்குக் கொண்டோர். இருந்தும்



1988 ஜனாதிபதித் தேர்தலில் 0.6% அதிகப்படியான வாக்குகளையே பிரேமதாசாவால் பெற முடிந்தது. (1982ல் ஜேஆரின் அதிகப்படி வாக்குகள் 1.2%) ஆனால் இன்றுள்ள நிலைமையோ முற்றிலும் மாறானது. ஐதேகவிலிருந்து பிரிந்த ஜ.ஐ.தே.முன்னணியினரும், பெரும் வாக்குகளை அள்ளித் தரக்கூடிய இதொகாவுடனான முறுகல் நிலைமைகளும், பிரேமதாசா

www.tamilarangam.net

படுகொலைக்குப் பிந்திய ஐதேகவின் உட்கட்சிப் பூசல்களும், வடக்கில் தொடர்ந்த ராணுவத் தோல்விகளும் ஐதேகவின் தேர்தல் வெற்றிகளைப் பெருமளவில் பாதிக்கும் என்பது உண்மை. இது மட்டுமன்றி, பிரேமதாசா காலத்தில் கொல்லப்பட்டும், காணாமற் போயுமுள்ள 60,000 பேர்வரையிலான விவகாரம் தற்போது சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளதும், பலவீனமான கட்சித் தலைமையும் ஐதேகவிற்குப் பாதகமான விடயங்களாகும். அதேபோல் மத்திய மற்றும் தென்மாகாணசபைகள் விடயத்தில் ஐதேக நடந்துகொண்ட ஜனநாயக விரோதப் போக்கு பொதுமக்கள் மத்தியில் எதிர்க் கட்சியினரின் செல்வாக்கை அதிகரித்துள்ளது.

ஜேஆரும், பிரேமதாசாவும் சிங்கள இனவாதத்தை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டபோதும் அதிதீவிர சிங்கள பௌத்த இனவாதிகளுடன் ஒரு இடைவெளியையும் பின்பற்றித் தமிழ் முஸ்லிம் வாக்குகளையும் தமக்குக் காப்பாற்றினார்கள். ஆனால் விஜேதுங்க இதிலிருந்து மாறுபட்டவராக உள்ளார். அதிதீவிர சிங்கள பௌத்த அமைப்புகளுக்குத் தலைசாய்த்துத் தன்னை அதிதீவிர சிங்கள தேசியவாதியாகக் காட்டிக்கொள்வதில் முன்னிற்கிறார். இதன் அடிப்படையிலேயே இந்திய சார்பு காமினியுடன் உறவாடுவதைத் தவிர்த்தும் தமிழர் பிரச்சினையில் சுயாட்சியை ஆதரிக்கும் தொண்டமானைக் கைவிடவும் தீர்மானித்தார். இதனால் ஏற்படும் வாக்கிழப்பை தனது தீவிர தேசியத் தன்மையாலும் அநுராவைச் சேர்ப்பதன் மூலமும் ஈடுகட்ட முடியும் எனக் கருதுகிறார். ஆனால் அரசியல் ரீதியாக இது எவ்வளவு சாத்தியம் எனத் தெரியவில்லை. மேலும் இவரது அண்மைக்கா முரண்பாடான செயல்களும், சர்வாதிகாரப் போக்கு தொடர்புச் சாதனங்களாற் கண்டிக்கப் பட்டுள்ளன பெரும்பாலும் பௌத்த சிங்கள எண்ணக்கருவை கொண்ட கொழும்புத் தொடர்புச் சாதனங்கள் இன் மாற்றுத் தலைமையைத் தேடும் போக்கில் உள்ளன மாற்றுத் தலைமையாக பொதுஜன ஐக்கி முன்னணியும், ஜனநாயக ஐக்கிய முன்னணியும் இ தொடர்புச் சாதனங்களாற் கருதப்படுகின்றன.

அநுராவின் வெளியேற்றம் சுதந்திரக் கட்சியை பொறுத்தவரை பாரிய தாக்கம் எதையு ஏற்படுத்தவில்லை, மாறாக கட்சிக்குள் நிலவி கோஷ்டி மோதல்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர பட்டுள்ளன. அநுராவைத் தொடர்ந் வெளியேறுவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட அநுர ஆதரவாளர்கள் பலர் கட்சியைவிட்டு வெளியே விரும்பினாலும் ஆளும் கட்சியில் இணை விரும்பவில்லை. எப்படியிருப்பினும் சு.க, முன்பைவிட சுறுசுறுப்பாகவே இயங்குகிறது. 1970களில் கட் அங்கத்தவரிடையே நிலவிய உற்சாகமும், கூட் முன்னணி அமைப்பின் தேவை நோக்கி ஒற்றுமையும் சு.க தலைமையிலான பொதுஜ ஐக்கிய முன்னணி எதிர்வரும் பொதுத் தேர்தலி கணிசமான வெற்றியைப் பெறக்கூடிய சூழ உருவாக்குகிறது.

40 வருடங்களுக்கு மேலான இலங்கையி இனப்பிரச்சனைக்கு இக்கட்சிகள் சரியான தீர் எதையும் கொண்டிருக்கவில்லை. இப்போதும் தமி மக்களது பிரச்சனைகளைக் குறைந்தபட்சமாவது புரிந்துகொள்ளக் கூடிய ஒருசில இடதுசாரிகளை கொண்டிருந்தாலும், பொதுவாக சிங்கள பௌத் தீவிரப் போக்கைக் கொண்டிருப்பதால், தமிழ் மக்களது பிரச்சனைகளை நிரந்தரமாகத் தீர்க்கக்கூடிய ஒரு தீர் பொதுஜன ஐக்கிய முன்னணியிடம் இருக்குமா என்பது கேள்விக்குறியே.

## உலகப்படத்தில் ஒஸ்லோவின் இடம்

நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் நடத்தப்பட்ட மத்தியகிழக்கு சமாதானப் பேச்சுகள் மூலம் பாலஸ்தீன - இஸ்ரேல் ஒப்பந்தம் ஒன்று ஒஸ்லோவில் உருவானது. இன்று இந்த ஒப்பந்தம் பல தரப்பில் இருந்தும் எதிர்ப்புகளைச் சம்பாதித்துள்ளது. இதேவேளை, ஏ.பி.செய்தி ஸ்தாபனம் (AP) கடந்த வருடத்தின் முக்கியம் வாய்ந்த உலக நிகழ்வு எது என்று 44 நாடுகளில் உள்ள 165 செய்தி நிறுவனங்களின் ஊடாக நடத்திய வாக்கெடுப்பில், "ஒஸ்லோ ஒப்பந்த"மே கடந்த வருடத்தின் முக்கிய நிகழ்வாகப் பெரும்பான்மையினரால் கருதப் படுகிறது.

சாள்ஸ்

www.tamilarangam.net

தமிழ் மக்களின் பிரச்சனையை, தனது நலன்களைக் கருத்திற் கொண்டே இந்தியா பார்க்கிறது. ராஜீவின் கொலையைத் தொடர்ந்து நடைமுறை ரீதியாகப் பல சிக்கல்களை எதிர்நோக்கிய இந்தியா விடுதலைப் புலிகள் மீதான தனது தாக்குதலை நடத்தச் சந்தர்ப்பம் நோக்கிக் காத்துள்ளது. பிரேமதாசாவின் தலைமை, தமிழ்நாட்டு அரசியல் சூழல், புலிகளை அழிப்பதால் இலங்கை அரசு 'காவலைமீறிப்' போய்விடக்கூடிய சூழல் என்ற இன்னபிற காரணங்களால் நிகழ்ந்த தாமதம் நீங்கி மீண்டும் இலங்கையில் இந்தியக் கரங்கள் படரச் சந்தர்ப்பம் ஏற்படலாம். இந்திய ஆதரவான பிரதான எதிர்க்கட்சிகள் பதவிக்கு வரின் பழைய இலங்கை இந்திய உடன்படிக்கை புதுவடிவம் பெறலாம். மறுபுறம் இதனை (ஒப்பந்தத்தை) எதிர்த்து ஐதேக எந்தப் பலனையும் பெறப் போவதில்லை. ஏனெனில் இதற்குக் காரணம் ஐதேகதான். இராணுவம் பெருமளவில் உயிரிழக்கையில் இந்திய ராணுவம் 'புலிகளை அடக்க' வந்தால் அது பற்றிச் சிங்கள மக்கள் எதிர்ப்புத் தெரிவிப்பார்களா என்பது சந்தேகமே. அதேவேளை இந்திய ராணுவத்தை 'சில தேவைகளுக்காக மட்டும்' மீண்டும் இலங்கைக்கு அனுப்புவது இந்திய அரசுக்கும் இலகுவான காரியமல்ல. அப்படி ஒரு நிலை ஏற்படவேண்டுமெனில் முன்பு இல-இந்திய ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயங்களைவிட அதிக அதிகாரங்களை வடக்கு கிழக்குக்கு வழங்கவேண்டிய நிலை ஏற்படலாம். இதற்கு இலங்கை அரசு எவ்வளவு தூரம் உடன்படும் என்பது கேள்விக்குறியே. இந்தியாவின் புதிய திறந்த பொருளாதாரக் கொள்கைக்கும், அந்நிய முதலீட்டுக்கும் பிராந்தியத்தில் சுமுகநிலை நிலவவேண்டியுள்ளது. இதற்காகவென்றாலும் இலங்கை இனப்பிரச்சனைக்கு ஒரு தற்காலிகத் தீர்வுகாணவேண்டிய நிலையில் இந்தியா உள்ளது. அண்மையில் "இந்திய ஒருமைப்பாட்டுக்குப் புலிகள் ஆபத்தானவர்கள்" என்று நரசிம்மராவ் கூறியுள்ளது, புலிகள் தொடர்பாக இந்திய அரசு கொண்டுள்ள கறாரான போக்கையே காட்டுகிறது.

சுமார் 20வருடங்களுக்கு மேலாக ஐதேகவுடன் நெருங்கிய உறவு கொண்டிருந்த இதொகா, ஐதேகவின் தேர்தல் வெற்றிக்குக் கணிசமான பங்கு வகித்தது. மலையக மக்களின் அடிப்படை வசதிகள் எதுவும் பூர்த்தி செய்யப்படாமல், உரிமைகள் கேலிக் கூத்தாக்கப் பட்டுள்ள இன்றைய சூழலில், இதுவரை அவர்களது முதுகில் சவாரி செய்த இதொகா, அம்மக்களுக்கு நன்மையைவிடத் தீமையே அதிகம் செய்துள்ளது. மலையகத்தில் தனது தனிக்காட்டு ராஜாத் தனத்தை நிலைநிறுத்தத் தொண்டமானால்


— Gunnar, kom og se! Den flinke mannen har reparert TVen allerede!

காட்டிக் கொடுக்கப்பட்ட அமைப்புகள், தனிமனிதர்கள் பலர். அநுராவின் ஐதேக பிரவேசம் தொண்டாவின் முக்கியத்தைக் குறைத்ததைத் தொடர்ந்து தொண்டாவும் தனது வியூகத்தை மாற்றிக் கொண்டார். மலையகத்தில் தனது பிரதான எதிரி காமினியுடன் கைகுலுக்கினார். சூட்டோடு சூடாக எதிர்க்கட்சிகளுடன் பேச்சு நடத்தினார். மத்திய மாகாணசபையின் ஐதேக ஆட்சியைத் தூக்கியெறிந்து பொதுஜன ஐக்கிய முன்னணியையும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியையும் பதவிக்குக் கொண்டுவர ஒத்துழைப்பு வழங்குவதாகக் கூறினார். மறுபுறம் இவரது கட்சிக்குள் முன்னெப்போதும் இல்லாத பிளவு ஏற்பட்டது. செயலாளரும், மத்திய மாகாணசபை உறுப்பினர்களில் அனேகரும் (7பேர்) ஐதேகவை ஆதரிக்கின்றனர். தற்போது தொண்டாவும், செல்லச்சாமியும் மாறிமாறி ஊழல்க் குற்றச்சாட்டுகளை வீசத் தொடங்கியுள்ளனர்.

தொண்டாவின் திடீர் அரசியல் மாற்றம் தென்பகுதியில் பலத்த அரசியற் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இனவாத சக்திகள் தொண்டாவைத் துரோகி என்ற பட்டத்தை வழங்கி அழைக்கின்றன, ஐதேகவுடன் இணைந்து மலையக மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுக் கொடுத்த தற்போது எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து மேலும் பல உரிமைகளைப் பெற முயல்கிறார் எனப் பத்திரிகைகள் எழுதுகின்றன. தொண்டாவின் விடயத்தில் இலங்கையின் சிறுபான்மைத் தேசிய இனங்கள் புரிந்துகொள்ளக் கூடிய ஒரு விடயம், சிங்கள பௌத்த பேரினவாதத்தின் ஆதிக்கம் இலங்கை அரசியலில் எவ்வளவு தூரம் புற்றுநோயாய்ப் பரவியுள்ளது என்பதையே.

ஒவ்வொரு புதுவருடத்தையும் நம்பிக்கையுடன் வரவேற்பதே வழமை. ஆனால் பிறந்துள்ள 1994ஐ மிக்க அச்சத்துடனேயே நாம் பார்க்க வேண்டியுள்ளது.

www.tamilarangam.net




## அபாயம் 1

தமிழர்களுக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபடும் அரசபடைகளின் எண்ணிக்கையை ஒருலட்சமாக்க அரசு முயன்று வருகிறது.

## அபாயம் 2

வெள்ளத்தால் பெருமளவு வயல்கள் வடக்கிலும் கிழக்கிலும்பாதிப்புற்றதால் ஏற்கனவே பட்டினியால் வாடும் தமிழீழப் பகுதிகளுக்கு மேலும் சிரமங்கள் ஏற்படலாம்.

## அபாயம் 3

கொழும்பில் தொடர்ச்சியாகத் தமிழர்கள் கைதாகின்றனர். வருடத்தின் முதலிரு வாரங்களில் கைதானோர் எண்ணிக்கை 2000க்கு மேல்.

## அபாயம் 4

வடபகுதியில் பாரிய ராணுவ நடவடிக்கை ஒன்றுக்கு ஆலோசனைகளை அரசு மேற்கொள்கிறது. பொதுமக்கள் அதிகளவில் உயிரிழப்பினும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது இந்த நடவடிக்கையின் நோக்கம் எனக் கூறப்படுகிறது.

## அபாயம் 5

தமிழீழப் பகுதிகளில் ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையைக் காரணம் காட்டி இந்தியப் பன மீண்டும் இறங்கலாம் என அஞ்சப்படுகிறது.

'Suvadugal', A Tamil Monthly from Norway, Issue nr 53, Dec'93 - Jan'94.
(Estd: Sep'1988)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்